
காதல்
அல்ல
காதலி
புஷ்பா தங்கதுரை

# உள்ளே...


பக்கம்

1. காதல் அல்ல காதலி ... 7

2. கடைசி வரை காதல் ... 113

# காதல் அல்ல காதலி

## 1

பிரபல துப்பறியும் இன்ஸ்பெக்டர் சிங் ஒன்பது மணிக்கு ஆபீசில் நுழைந்தார்.

அன்று முக்கியமாக பல விசாரணைகள் நடத்த வேண்டும்.

நினைக்கும்போதே மலைப்பாக இருந்தது.

நாற்காலியில் அமர்ந்தார்.

திடீரென்று சிங் தமது காலடியில் பூமி நடுங்குவதை உணர்ந்தார்.

ஜன்னல்கள் கிடுகிடுத்தன. கதவுகள் ஆடின. தரை மிடுமிடு என்று சத்தம் இட்டது.

நிலநடுக்கமாக இருக்கும்.

சிங் தமது பைல்களைப் பிரித்தார்.

போன் அடித்தது.

கமிஷனர் மதனகோபால் பேசினார்.

ஒரு பெரிய விபத்து நேர்த்திருப்பதாகவும், டேலர்ஸ் ரோட்டில் தம்மைச் சந்திக்கும்படியும் அவசரச் செய்தி கொடுத்தார்.

உடனே எழுந்தார்.

வெளியே விரைந்தார்.

ஜீப்பில் ஏறினார்.

சாலை வந்ததும் இருபுறமும் ஆவலாகப் பார்த்தார்.

கட்டடங்கள் கட்டுக்கோப்புடன் சீராக நின்றன.

ஜீப் பறந்தது.

ஒருவேளை டேலர்ஸ் சாலையில் மட்டும் ஏதாவது நடந்திருக்குமா?

வழிகளைக் கவனித்துக் கொண்டு போனார். சுபாஷ் சிலையைத் தாண்டி ஐ. என். ஏ. ரோட்டில் நுழைந்தபோது அவருக்கு மூக்கு வியர்த்தது.

முன்னால் ஒரு 'தீயணைப்பு வண்டி' 'குய்யோ முறையோ' சத்தம் போட்டு ஓடியது.

அதை அடுத்து ஒரு போலீஸ் வேன் சிட்டாகப் பறந்தது.

டேலர்ஸ் சாலையை அடைந்ததும்தான் ஒரு திடீர்த் திகில் அவர் மனத்தில் ஏறியது.

திருப்பத்தில் கூடிய ஏராள ஜனத்திரளை போலீஸ் வேலியிட்டிருந்தது.

சாலைக்குள் பார்வையை வீச தூரத்தில் ஏற்கனவே வேன்களும், சிப்பந்திகளும் பெரிய அளவில் கூடியிருப்பது தெரிந்தது.

சாலையின் இருபுறத்திலும் போலீஸார்.

ஜீப் மெதுவாக ஊர்ந்தது.

எல்லோரும் சிங்கை 'ஒரு மாதிரி'ப் பார்வை பார்த்தார்கள்.

இதென்ன புகையா? தூசியா?

ஜீப் அங்கே கிட்டத்தட்ட நடுமத்தியில் நின்றது.

சிங் குதித்தார்.

அந்த நெடி, அந்தக் கணத்தில் அவரைப் புரிய வைத்தது.

எல்லோரும் போலீஸ் சிப்பந்திகள்தான்! ஒரே இயக்கமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

சிதறிக் கிடக்கும் இடிபாடுகளுக்கு இடையே சிங் எச்சரிக்கையாகக் கால்களை வைத்துச் சென்றார்.

கமிஷனர் முகத்தைச் தேடி அங்குமிங்கும் பார்த்துச் செல்ல,

திடீர் என்று அந்தக் காட்சி அவரை நிறுத்தியது.

வரிசையாக இருந்த பலமாடிக் கட்டிடங்களில் ஒன்றைக் காணவில்லை.

சட்டென்று தெரிந்த அந்த இடைவெளி வழியே நீலவானமும் ஒரு துணுக்கு மேகமும் மௌனமாகத் தெரிந்தன.

ஒரு கணம் உடல் சில்லிட்டது.

ஆகா! இங்கே ஒரு ஐந்து மாடிக் கட்டிடம் நின்று கொண்டிருந்ததே! அதா மறைந்து விட்டது.

"சிங்!" என்று குரல்.

கமிஷனர் மதனகோபால் ஒரு கும்பலிலிருந்து கழன்று வந்து கொண்டிருந்தார்.

அவசரமாக வந்தார். கவலையாக இருந்தார்.

“சிங்! என்ன நடந்திருக்கு. பார்த்தீங்களா?” என்று பதட்டத்துடன் கேட்டார்.

தொடர்ந்து ‘ஒரு முழு அஞ்சு மாடிக் கட்டிடம் அப்பளமா நொறுங்கிப் போச்சு! குண்டு வெடிச்சிருக்கு!’

“ஆ! வெடிகுண்டா ஸார்!” என்று சொல்லி சிங் முகத்தைத் திருப்பி கட்டிடம் இருந்த திசையை நோக்கினார்.

“ஆமாம்! வெடிச்சது கேட்கலையா? பூமியே அதிர்ந்ததே! பூகம்பம் போல்!”

சிங்குக்குள் அந்தக் கோரத்தின் பரிமாணம் மெல்ல மெல்ல மனத்தில் இறங்கத் தொடங்கியது.

கட்டிடத்திற்கு மூன்று மைல் தள்ளி இருந்தது அவரது ஆபீஸ்.

அதுவரை அந்த அதிர்ச்சி கேட்குமானால் எவ்வளவு பெரிதாக அது வெடித்திருக்க வேண்டும்.

கட்டிட வெளியை நெருங்கினார்கள்.

தவிடு பொடி ஆகியிருந்தது. இதுவரை பன்னிரெண்டு சடலங்களை எடுத்து விட்டார்கள்.

ஒரு ஸ்ட்ரெச்சர் அப்போது குறுக்கே ஓடியது.

கட்டிடம் இருந்த இடம் ஒரு குவியலாக இருந்தது. ரோட்டில் சேதாரம் சிதறி இருந்தது. பனியன் தரித்த ஸ்பெஷல் போலீசார், இடிபாடுகளை அவசரமாக அகற்றிக் கொண்டிருந்தார்கள். லாரிகள் அவற்றை அவசரமாக ஏற்றிக் கொண்டிருந்தன.

சிங் சேதாரங்களின் நடுவில் ததிங்கிணத்தோம் போட்டு நடந்தார். கமிஷனர் தொடர்ந்தார்.

ஒரு பெரிய தூசிப்படலம் அப்படியே ஸ்தம்பமாக நின்றது.

சுவாசத்தில் நெடித்தது.

தீ.

தீயணைப்புக்காரர்கள் அப்போதுதான் ஒரு பெரிய காங்கிரீட் பாளத்தை நகர்த்திக் கொண்டிருந்தார்கள்.

அதன் இடுக்கில் கால்கள் அகப்பட்டவன், 'என்னைக் கொன்னிருங்களேன்! கொன்னிருங்களேன்!' என்று கத்திக் கொண்டிருந்தான்.

ஒரு யூனிபார்ம் டாக்டர் அவன் அருகில் உட்கார்ந்து பதட்டத்தோடு இஞ்செக்ஷன் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரே இயக்கமாக அங்கே நிவாரண வேலை நடந்து கொண்டிருந்தது.

டி.வி.காரர்களை அவர் முகத்தில் திருப்பவே, வேண்டாம் என்பது போல் கையைத் தூக்கிக் காண்பித்தார் அவர்.

அந்தப் பெண் அங்கே நின்று அந்தப் பெரிய குவியலைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்களில் இரு வைரத் துண்டுகள் மின்னின.

சுடிதார் தரித்த அவள், நாகரிகமாக நடந்து கொண்டாள். துக்கத்தை அடக்கி உள்ளே அழுகையை சமப்படுத்திக் கொண்டிருந்தாள்.

சிங் தமது துணை இன்ஸ்பெக்டர் லிங்க்கிடம் அந்த பெண்ணை அழைத்து வரச் சொன்னார்.

மெல்ல கால்களைப் பதித்து அவள் வந்தாள்.

சிங்கையும், அவளது அப்பார்ட்மெண்டாக அன்று காலை வரை இருந்த இடத்தையும் மாறி மாறி பார்த்தாள்.

"இன்ஸ்பெக்டர்!" என்று தாபமாக அழைத்தாள். "எங்க அம்மா உயிரோட இருப்பாங்களா?" என்றாள் விசிப்புடன்.

"எந்தத் தளத்திலே குடியிருந்தீங்க அம்மா?"

"கீழ்த்தளத்திலே."

சிங்குக்குத் தெரியும். அந்தப் பகுதி தவிடு பொடி ஆகிவிட்டது என்று! எனினும் அவளை ஆறுதலாகப் பார்த்து, "உள்ளே நிறைய இடைவெளி இருக்குதம்மா! ஒருவேளை உங்க அம்மா தப்பிச்சிருக்கலாம். உன்பேர் என்னம்மா?"

"நித்யா!"

"குட்! அங்கே லிஸ்ட் எடுக்கிறாங்க பாரு! அவங்களைத் தொடர்பு கொண்டுக்க!" திரும்பி அவள் போகும் போது லிங்க்கின் கண்கள் அவள் நடையில் லயித்தன.

கடந்த ஒரு மணி நேரத்தில் பத்து பேராவது அவரிடம் வந்து போய் விட்டார்கள்.

அவர்களது உறவினர்கள் அந்தப் பெரிய காங்கிரீட் குவியலுக்குள் மாட்டி இருந்தார்கள்.

அவர்களது ஒரே கேள்வி உயிரோடு இருப்பார்களா?

சிங்கினால் என்ன செய்ய முடியும்?

"கவலைப்படாதீங்க! உள்ளே பல பேர் உயிரோடு இருப்பாங்க! கடவுளை வேண்டிக்குங்க!"

நிச்சயம் தெரியும் சிங்குக்கு. இதுவரையும் சடலங்கள் தான் கிடைத்தன. உயிருடன் யாரும் கிடைக்கவில்லை.

"லிங்க்!" என்றார்.

"எஸ் ஸார்!"

"இனிமே யாரையும் இங்கே விடாதே!"

"இல்லை ஸார்!"

சிங்கின் பார்வை மீண்டும் இருபுற வீடுகளிலும் பட்டது.

அண்டை வீடுகள் இரண்டிலும் கீழே கீறல் விட்டிருந்தது.

வெடியின் பாய்ச்சல் அதுவரை போயிருக்கிறது.

பல குண்டு வெடிப்புகளை பார்த்திருக்கிறார். இவ்வளவு விஸ்தாரமாக எங்கேயும் வெடித்ததில்லை.

அதுதான் அவருக்குள் கவலை!

வெடிகுண்டு வெளிநாட்டுச் சரக்காக இருக்கும். உள்ளூர்ச் சரக்காக இராது!

பெரிய 'குட குடா' சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தார். ஐந்து டன் கிரேன் வந்து விட்டது. இனி நிவாரண வேலை விரைவாக நடக்கும்.

"லிங்க்!"

"எஸ் ஸார்!"

"ஏதாவது முக்கியமாக கிடைச்சா உடனே எனக்கு போன் செய்யணும்."

"எஸ் ஸார்!"

"சடலம் கிடைச்சாலும் சரி!"

"ஓ. கே. ஸார்."

இரவு சிங்குக்கு உறக்கம் இல்லை.

முயன்றாலும் அடிக்கடி கனவு வந்தது.

அடுத்த நாள் பேப்பர்கள் வீறிட்டுக் கத்தப் போகின்றன.

அதைத் தொடர்ந்து மக்களும் கத்தப் போகிறார்கள்.

இரவு இரண்டு முறை லிங்க் போன் செய்தான். இரண்டு முறையும் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

அவை பெரிதும் சிதைந்து போயிருந்தன. அடையாளம் கண்டுபிடிப்பது கடினம்.

இரண்டாம் கால் வந்த பிறகு சிங்கின் தூக்கம் போய்விட்டது.

வெறும் சுழற்சியிலே அப்படியே படுத்திருந்தார்.

காலையில் எழுந்ததும் வீட்டில் வந்திருந்த பத்திரிகைகளை அவசரமாகப் புரட்டினார்.

அவர் சொன்னபடியே நடந்திருந்தது.

எல்லாப் பத்திரிகைகளும் கொட்டையாகக் கத்தி இருந்தன.

முழுதையும் படிப்பதற்கு நேரம் இல்லை. ஆனால் ஏதாவது புதுச் செய்தி தருகிறதா என்று அவசரமாகப் பார்த்தார். எதுவும் தென்படவில்லை. ஒன்பது மணிக்குள் சாப்பாட்டை முடித்து விட்டு ஸ்தலத்துக்கு விரைந்து போனார்.

இரவு பாதி இடிபாடுகளை எடுத்து விட்டார்கள். காலையில் மேலும் நான்கு சடலங்கள் கிடைத்தன.

தெருவில் ஜன வெள்ளம் மொய்த்தது. ஒரு பெரிய போலீஸ் படை அவர்களை அணை இட்டிருந்தது.

லிங்க் ஏற்கனவே காத்திருந்தான். இரவு முழுதும் விழித்ததில் கண்கள் வீங்கி இருந்தன.

"ஏதாவது தடயம்?" என்றார் சிங்!

"எதுவுமில்லை ஸார். துணுக்குக் காகிதம் விடாமல் இடிபாட்டிலிருந்து பொறுக்கி இருக்கேன்."

சிங்கின் பார்வை மெல்ல மறுபக்கம் சென்றது.

ஒரு சின்னக் கும்பல், அந்த பல்மாடியில் வசித்தவர்களின் உறவினர்கள். கும்பல் மட்டும், சற்று எட்டத்தில் நின்று பார்க்கும்படி அனுமதிக்கப் பட்டிருந்தார்கள்.

அவர் பார்வை மீண்டும் அந்த பத்து வயதுப் பெண் மீது விழுந்தது.

நேற்றே அவளைப் பார்த்து விட்டார். இன்று தமது கையை நீட்டி ஒரு விரலால் அழைத்தார்.

ஒரு மெல்லிய புன்னகை அந்தச் சிறுமியிடம் ஓடிற்று. கால்களை ஊன்றி வைத்து சிங்கை நோக்கி வந்தாள்.

நேற்றைவிட இன்று களைத்திருந்தாள். அவள் கண்களில் இன்னும் தீபமாக ஒரு களை எரிந்தது.

சிங்கின் முன்னால் உதடுகள் துடிக்க நின்றாள்.

"உங்க பிளாட் எரிஞ்சு போயிருந்ததா?"

"ஆமாம் ஸார்!"

"அதிலே யார் இருக்காங்க?"

"அம்மா!"

"அப்பா இல்லையா."

"அப்பா கிடையாது."

“நீ வெளியிலே போயிருந்தியா?”

“ஆமா ஸார்! ஸ்கூலுக்கு!. . . மத்தியானம் வந்தேன். வீடு இடிஞ்சு கிடக்கு.” சிங் மேலே பேசவில்லை.

இனி பேசினால் சிறுமியின் துக்கத்தைத் தொட வேண்டியிருக்கும்.

இந்தப் பெண் இனி ஒரு அனாதை என்று நினைத்தார். மனசுக்குள் ஒரு பகுதி மெள்ள இளகியது.

கண்ணில் அதன் கரைவு ஒரு திரை போட்டது.

“எங்க அப்பா உயிரோடு இருப்பாங்களா ஸார்?”

“உங்க ப்ளாட் எந்த மாடி?”

“கீழ்த்தளம் ஸார்.”

சிங் பேசவில்லை. கர்ச்சிப்பை எடுத்து முகத்தை வழித்தார். சிறுமி இன்னும் அந்த இடிபாட்டைப் பார்த்தாள்.

“உன் பேரு?”

“லதா!”

“அப்பா கிடைச்சவுடனே சொல்றேன்!”

“தாங்க்யூ ஸார்!”

திரும்பி அவள் நடந்து போனாள்.

ஒரு பெருமூச்சு விட்டுத் திரும்பினார். ‘லிங்க்!’

“எஸ் ஸார்!”

“லிஸ்ட் தயாரா?”

“இதோ ஸார்!”

ஒரு காகிதத்தை எடுத்துக் கொடுத்தான். அந்த வீட்டில் இருந்தவர்கள் எல்லோர் பெயரும் அதில் இருந்தன.

"சில பேரை அடிச்சிருக்கியே?"

"அவங்க இறந்தாச்சு! சடலம் கிடைச்சுடுத்து."

"இந்தப் பெண்ணோட ப்ளாட்?"

"ஒன் 'ஏ' ஸார்."

"மூர்த்தின்னு போட்டிருக்கு அடிச்சுட்டியே!"

"இறந்து போயாச்சு. சடலம் கிடைச்சாச்சு!"

"சொல்லணும். தர்ம சங்கடமா இருக்கு. சோஷியல் வொர்க்கர் யாராவது மூலம் சொல்லணும்னு பார்க்கிறேன்."

"யாராவது உறவு இல்லையா?"

"இல்லை ஸார்."

சிங் முகத்தைச் சுருக்கினார். லதாவின் பச்சை முகம் மனத்தில் மெல்லிதாக வந்தது. சுருக்கென்று ஒரு வலி. சிங் கண்ணை இறுக்கினார்.

ஒரு விபத்து எவ்வளவு குடும்பங்களை நிர்க்கதி ஆக்குகிறது?

வெடிகுண்டு நிபுணர் சிறிது நேரத்தில் வந்தார். முகம் முழுதும் முத்துக்களாக நீர்த்துளிகள். வெய்யில் பட்டு முகம் கருகி இருந்தது. சிங்கைப் பார்த்ததும், "இதைப்போல சமீபத்திலே பார்த்ததில்லை!" என்றார்.

"எதைச் சொல்றீங்க? சந்தாராம்!"

"இந்த வெடிப்பு!"

"அப்படியா?"

"ஆமாம்! முக்கால் காங்கிரீட்டும் பொடியாய் போயிடுத்து பார்த்தீங்களா?"

"ஆமாம்."

"கம்பிங்க திருகியிருக்கிற லட்சணத்தைப் பார்த்தீங்களா?"

"ஆமாம். . ."

"இவ்வளவு சக்தி வாய்ந்த குண்டை இங்கே தயாரிச்சுது இல்லை."

"பின்னே?"

"எங்கேயிருந்தாவது திருடிட்டு வந்திருக்கணும்."

"ஏதாவது பார்ட்ஸ் கிடைச்சதா?"

"கிடைச்சா உங்ககிட்டே காட்டாம எடுத்துப் போவேனா சிங்!"

பிறகு கமிஷனரும் இதர உள்துறை அதிகாரிகளும் வந்தார்கள்.

சர்ச்சையாகப் பேசிவிட்டு, சிங்கிடம் அபிப்பிராயத் தைக் கேட்டார்கள்.

"இந்த நிலையில் எதுவுமே சொல்றதுக்கு இல்லை? யார் பிளாட்டிலேயாவது பட்டாசுக் கிடங்கு இருந்தாலும் போச்சு!" என்றார் சிங்!

"அப்படி ஏதாவது சந்தேகம் உண்டா?" என்று கேட்டார்கள் அதிகாரிகள்.

"இல்லை இன்னும் விசாரிக்கணும்!" என்றார் சிங்.

சீக்கிரத்தில் எல்லோரும் போன பிறகுதான் அவருக்கு நிம்மதி!

சிங்குக்கு கூட்டம் உதவாது!

அதுவும் துப்பறியும் வேலையில் அவருக்குத் தனிமை அதிகம் வேண்டும்.

அதிகாரிகள் போய்விட, சிங் அங்கும் இங்கும் சிறிது கண்களை அலசினார்.

போலீஸ் சிப்பந்திகள் இடிபாடுகளில் கிடைக்கும் பொருள்களைத் தனியாக சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

இவைகளில் ஏதாவது தடயம் கிடைத்தால் உண்டு. இல்லாவிடில் விசாரணைகளில் கவனத்தைத் திருப்ப வேண்டியதுதான்.

"ஸார்!" என்று குரல் கேட்டுத் திரும்பினார்.

முந்தைய தினம் பார்த்த இளம் பெண் நின்றாள். அவள் முகத்தில் முன்பு இருந்த புன்னகை அழிந்திருந்தது. கண்களில் ஒரு பொட்டு மழுங்கித் தெரிந்தது.

"எங்க அம்மா?" என்றாள்.

அவள் தோற்றமும், கேள்வியும் அவரைத் தாக்கின. சற்று திகைத்த சிங், "இன்னும் அவங்க கிடைக்கலியா?"

"இல்லை ஸார்."

சிங் முகவாயை மெதுவாகத் திருப்பினார்.

"ஒருத்தரும் உயிரோடு கிடைக்கலை ஸார்! அவங்க இறந்திருப்பாங்களா?" பரிதாபத்துடன் அந்தப் பெண் கேட்டாள்.

சிங் பார்வையைத் தணித்தார். "எப்போதும் நம்பிக்கை வையம்மா! இன்னும் எடுக்க வேண்டிய இடிபாடுகள் நிறைய இருக்கே!"

"ஸார்! எனக்கு நல்லாத் தெரியுது. அவங்க இறந்திருப்பாங்க!"

சிங் பேசவில்லை.

"அவங்களைக் கூப்பிட்டேன். வராம இருந்துட்டாங்க!"

சட்டென்று பார்வை சிங் தூக்கினார். "கூப்பிட்டியா?"

"ஆமா ஸார்! வெடிக்கிறதுக்கு முன்னாடி வெளியிலே கூப்பிட்டேன்."

"வெடிக்கப் போறது உனக்குத் தெரியுமா?"

"ஏதோ நடக்கப் போறதுன்னு தெரியும்."

"ஏன்? சந்தேகப்படும்படி ஏதாவது நடந்ததா?"

"இல்லை சார். எனக்கு ஊகம். . ."

சிங் அவள் கண்களைப் பார்த்தார்.

"சமயத்திலே ஏதாவது இப்படித் தோணும்!" என்றாள் அவள்.

"ஓ. . .! பிரமாதம்."

"ரைட் ஸார். உங்களுக்குத் தொந்திரவு கொடுக்க விரும்பலை." திரும்பி நடை போட்டு போனாள்.

"லிங்க்!"

சற்று தூரத்தில் அவன் கூலி ஆட்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

சிங்கைப் பார்த்து ஓடி வந்தான்.

சிங் அதற்குள் பாக்கெட்டிலிருந்து லிஸ்டை எடுத்துப் பிரித்திருந்தார்.

கண்கள் துறுதுறு என்று ஓடின.

"வெடி வெடிச்ச போது வெளியே போயிருந்தவங்க எல்லோர் மேலேயும் சந்தேகப்பட வேண்டியது! தெரிஞ்சுதா?"

"எஸ் ஸார்!"

"இந்தப் பெண்ணு போறாளே யாரு?"

"நித்யா!"

"அதுக்குள்ளே பெயரை உருப்போட்டுட்டியே. . ."

லிங்க் நாக்கால் உதடுகளை வழுக்கினான்.

"அவளை உடனே கண்காணிக்கணும்."

"எஸ் ஸார்."

"ரெண்டு நாளானாலும் பரவாயில்லை. விடாமல் கவனிக்கணும்."

"எஸ் ஸார்!"

"விடாதே! துரத்திட்டுப்போ!"

லிங்க் தாவிக்கொண்டு போனான்.

✧✦✧

# 2

"உனக்கு எப்படித் தெரியும்?" என்றாள் மகேசுவரி.

பள்ளிக்கு அவள் புறப்பட்டிருந்தாள். ஆசிரியையாக இருப்பாள்.

ஆள் குட்டை!

முகம் சுமாராக இருக்கும். பள்ளிக் குழந்தைகளிடம் கத்திக் கத்தி, சற்று கடூரமாகி இருந்தது.

ஒரே ஒரு ப்ளஸ் பாயிண்ட்!

மற்றப்படி அவள் உடம்பைப் பார்த்தால் நல்ல அழகில் அளவுகள் கச்சிதமாக இருக்கும்.

கவர்ச்சியாகக்கூட இருந்தது.

"உனக்கு எப்படியம்மா ஊகம் வருது?"

"நான்தான் கடவுளை வேண்டிக்கிறேனே! அவராகத்தான் எனக்கு அந்த ஊகத்தை உண்டு பண்றார்."

வீட்டில் உண்டான நகைகள், ரொக்கம் பத்தாயிரம் ரூபாய் எல்லாம் அவள் பெட்டியில் இருந்தன.

தவிர சில முக்கியத் துணிகளைக்கூட நித்யா எடுத்து வைத்திருந்தாள்.

அப்படிச் செய்யும்போது அத்தை மகேசுவரி பதைத்து விட்டாள்.

திறந்த பெட்டியையும், அவளையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அவள் அதிசயம் அடங்கவில்லை.

"ஆமாம் அத்தை! நம்புங்க. இல்லாட்டி நான் மட்டும் வீட்டை விட்டு ஒன்பது மணிக்கே புறப்படுவேனா?"

"அப்போ அம்மாவை ஏன் கூப்பிடலை?"

"கூப்பிடாம இருப்பேனா? வெளியிலே அவளை இழுத்துட்டே வந்துட்டேன்."

"அப்புறம் என்னாச்சு?"

"உங்களுக்குத்தான் தெரியுமே அவங்க மெல்லத்தானே நடப்பாங்க!"

"ஆமாம்."

"பின்னாடி நடந்து வந்தாங்க. வீட்டை விட்டு வெளியே வந்து தெருவிலே நடந்து வந்தாங்க. நான் அவசரமா முன்னாடி போனேன்."

"சரி!'

"நான் அடுத்த தெருவிலே திரும்பிப் போயிட்டேன். அப்புறம் சாலையிலே திரும்பணும். அம்மா வராங்களான்னு திரும்பிப் பார்த்தேன். எனக்கு அதிசயமாப் போச்சு! அம்மாவைக் காணல்லை."

"அப்புறம்?"

"அவள் மெதுவாக நடந்து வருவான்னு கொஞ்ச நேரம் காத்திருந்தேன். அம்மா வரக் காணலை. நேரம் ஆயிட்டது. பொறுமை இழந்துபோய், நானே திரும்பி வந்தேன்."

"அம்மா என்ன ஆனாங்க?"

"அவங்க என்ன நினைச்சாங்களோ வீட்டுக்குத் திரும்பிப் போயிருக்கணும்."

"ஏதாவது விட்டுட்டு வந்திருப்பாங்களா."

"அப்படித்தான் இருக்கணும். துண்டு விட்டுட்டாங்கன்னு நினைக்கிறேன். அதுகூட அவங்களுக்கு விடக்கூடாது. திரும்பிப் போயிருக்காங்க! எனக்கு ஒரே வெய்யிலா இருந்திச்சு! என் சிநேகிதி வீடு அதே தெருவிலே இருந்திச்சு! உள்ளே போயிட்டேன்."

"அப்புறம்?"

"ரெண்டாவது நிமிடம் பயங்கரச் சத்தம்! மாடிக் கட்டிடம் நொறுங்கி விழுந்தாச்சு."

அவள் குரல் மெல்ல அடைத்தது. கண்ணின் ஓரத்தில் ஒரு சொட்டு பளிர் என்று அடிக்க ஆரம்பித்தது.

மறுகணம் கைக்குட்டையை எடுத்து அவள் விசிக்க ஆரம்பித்தாள்.

"இந்தா. . . இந்தா. . . . நித்யா அழாதே! இது விதி!"

"அத்தை!" என்றாள் நித்யா விசித்துக் கொண்டு, . . . "என் அம்மாவைக் காப்பாத்த முடியலையேன்னு ரொம்ப வருத்தப்படறேன் அத்தை."

"அந்தப் பெண் நல்லவள் ஸார்," என்றான் லிங்க். காலை பத்து மணி இருக்கும்.

வெளியே சூடு மெல்லிதாக ஏறியது.

சிங் மேசை முன்னால் யோசனை செய்து கொண்டிருந்தார்.

"லிங்க் வந்துட்டியா?" என்றார்.

"எஸ் ஸார்!"

"ரொம்ப நாளாச்சே!"

"ரெண்டு நாள் ஸார்! நான் அந்தப் பெண்ணைத் தொடர்ந்திட்டிருந்தேன்."

"ஏதாவது விஷயம் உண்டா?"

"எதுவுமில்லை ஸார்! எல்லோரையும் போல நித்யா ஒரு குற்றமில்லாத பெண்!"

சிங் பேசவில்லை.

"வின்சன் லெதர் கார்ப்பரேஷன்லே வேலை பார்க்கிறா!"

"ஓ!" என்று திரும்பினார்.

"கம்பெனியிலே நல்ல பேரு! நல்லா வேலை செய்யறா!"

"கேரக்டர் எப்படி?"

"ரொம்ப நல்லவள்னு எல்லோரும் புகழறாங்க."

சிங் நாற்காலியின் கைப்பிடியைப் பிடித்தார்.

"சரி! அவளுக்கு அந்த ஊகம் எப்படி வந்திச்சு?"

"அது ஒண்ணுமில்லை சார். திடீர்னு ஏதோ நினைச்சிருக்கிறா. வெளியிலே போயிருக்கிறா. அவ்வளவு தான். அதை அவள் கொஞ்சம் பெரிசுபடுத்திப் பேசறா. அவ்வளவுதான்."

சிங் புருவத்தை நெறித்தார்.

"வேறே எதுவும் மர்மம் அல்லது அமானுஷ்யம் இல்லையா?"

"இல்லை சார். அவளுக்கு ஒரு காதலன் இருக்காப் போல இருக்கு."

"அப்படியா? யாரு?"

"தெரியலை. நேரம் கொடுத்தா கண்டுபிடிச்சிடலாம்."

சிங் தமது கைகளை நெற்றியில் வைத்தார். கண்களை மூடிக் கொண்டு, "லிங்க்! அதைவிடப் பெரிய சமாச்சாரங்கள் இப்போ வந்திருக்கு. உட்காரு."

"எஸ் ஸார்!"

"நாகசாமின்னு ஒருத்தன் இந்த ப்ளாட்லே இருந்திருக்கான். என். ஆர். நாகசாமி!"

"எஸ். ஸார்!"

"தனியாத்தான் இருந்திருக்கான். விசாரிச்சதுலே ஏதோ நடிகர், பாடகர்னு சொல்றாங்க."

"எஸ் ஸார்!"

"யாரிட்டேயும் அதிகமாப் பழகினதில்லை. அவனைப் பற்றி எனக்குச் சந்தேகம் வருது. முதல்லே இந்த விபத்து நேர்ந்தபோது, வீட்டிலே இருந்திருக்கானா இல்லையான்னு தெரியணும். . ."

லிங்கின் முகம் தீவிரமாகியது.

"ஸார். எடுத்த 32 சடலத்திலே ரெண்டு அடையாளம் கண்டுபிடிக்காம இருக்கு!"

"ரெண்டும் ஆண்தானா?"

"ஒண்ணு ஆண்! இன்னொன்னு சிதைஞ்சு போய் யாருன்னு தெரியலை."

"ரைட்! நாகசாமிக்கு சொந்தக்காரங்க யாரும் வரல்லையா?"

"ஸார்! மார்ச்சுவரியோட தொடர்பு வச்சிட்டுத்தான் இருக்கேன்! ரெண்டு சடலத்துக்கும் யாரும் சொந்தக்காரங்க வரல்லை!"

சிங் தமது பால்பாயிண்ட்டை எடுத்துக் கீழே தட்டினார்.

பிறகு சட்டென்று எடுத்து அலமாரி பக்கம் சென்றார். கதவைத் திறந்தார்.

உள்ளே வரிசையாக அட்டை பைல்கள் நின்று கொண்டிருந்தன.

'N' என்று போட்ட பைலை வெளியே எடுத்தார்.

பக்கங்களைப் புரட்டி மேஜை முன்னால் வந்து அமர்ந்தார்.

"ஆ!" என்றார் அவர். "இந்தா லிங்க்! இங்கே ஒரு சின்ன என்ட்ரி இருக்கு!"

லிங்க் பார்த்தான்.

"நீ ஒண்ணு செய், லிங்க்! கமிஷனர் ஆபீஸ்லே கம்ப்யூட்டர்லே அவனைப் பற்றிக் கேட்டுட்டு வந்திடு."

"12-9-1997 என். ஆர். நாகசாமி. வயது 33. உயரம் 5.6." இடது காது கீழே ஒரு மச்சம்! மதுரை வட்டாரத்திலே ஆறு திருட்டுக் கேஸ்! திருமங்கலம் ரயில் நிலையத்திலே அவனைப் பிடிக்கப்போன போது துப்பாக்கியை காட்டி மிரட்டியிருக்கிறான். தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி பேசத் தெரியும்!"

"கடைசியா கோவில்பட்டி பெட்ரோல் பாங்கிலே வேலை! ரூ. 1,00,000/- யை எடுத்துக்கொண்டு ஓடி விட்டான். கேஸ் பதிவாகி இருக்கிறது. ஆள் அகப்பட்டால் நெல்லை மாவட்ட போலீஸ் அதிகாரிக்குச் செய்தி உடனே அனுப்பவும்!"

லிங்க் காகிதத்தைத் துண்டித்து எடுத்துக் கொண்டான்.

கமிஷனர் ஆபீசை விட்டு வெளிக் கிளம்பியபோது அவனுக்கு ஆச்சரியம் தந்தது.

அதற்குள் அந்த வீட்டு லிஸ்டை வைத்து ஒரு சந்தேக ஆசாமியை சிங் சுட்டிக்காட்டி விட்டாரே!

பத்து நிமிடத்தில் சிங்கிடம் காகிதத்தைக் கொடுத்தான்.

அவர் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. 'நான் சொன்னேன் பார்த்தியா?' என்று காட்டிக் கொள்ளவும் இல்லை.

"லிங்க்! அந்த ரெண்டு சடலமும் பத்திரமா இருக்கு இல்லே!"

"மார்ச்சுவரிக் குளிர்லேதான் இருக்கு!"

"சரி!"

சிங் மௌனமானார். லிங்க் காத்திருந்தான். அவர் யோசனைக்கு இடம் கொடுத்துவிட்டு அப்பால் உள்ள அறைக்குச் சென்றான்.

போய் உட்கார்ந்திருக்க மாட்டான். "லிங்க்!" என்று குரல் கேட்டுத் திரும்பி வந்தான்.

"தெற்குப் பிராந்திய டி. ஐ. ஜிக்கு இந்தக் கடிதத்தை ஃபாக்ஸில் அனுப்பி, நாகசாமி போட்டோ அவசரமாகத் தேவைன்னு சொல்லு."

"எஸ். ஸார்."

"Fax-லே உடனே அனுப்பச் சொல்லு! அவசரம்!"

✧✦✧

# 3

லிங்க் வெளியே வந்தான்.

கமிஷனர் ஆபீஸ் பக்கத்தில்தான் இருந்தது.

ஸ்கூட்டரை உதைத்தான்.

உறுமிக் கொண்டு கிளம்பினான்.

ஸ்கூட்டர் சாலைக்கு வந்ததும் சட்டென திரும்பியது!

அந்தப் பல்மாடி விழுந்த இடத்திற்கு ஸ்கூட்டரை அவன் திருப்பி இருந்தான்.

பத்தாவது நிமிடத்தில் அங்கே இருந்தான்.

அவனுக்கு மனத்தில் அடங்கா ஆவல்!

அவனும் ஏதாவது செய்து சிங்கை அதிசயிக்க வைக்க வேண்டும்.

தவிர சிங் எப்போதும் சொல்லுவார். "லிங்க்! நான் சொல்லித்தான் எப்போதும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்காதே! நீயாக சிலவற்றைக் கண்டுபிடிக்கலாம்!"

அந்தப் பேச்சில் உந்தப்பட்டுதான் அவன் பல்மாடிக் கட்டிடப் பகுதிக்குப் போனான்.

இடிபாடுகளை இன்னும் எடுத்துக் கொண்டிருந் தார்கள்.

ஏற்கனவே சேகரித்த பல பொருள்களை போலீஸ் சிப்பந்திகள் பத்திரமாக வைத்திருந்தார்கள்.

பல பொருட்கள் எரிந்தும், தீய்ந்தும் காணப்பட்டன.

அவற்றைப் பார்த்துவிட்டு, இடிபாடுகளிடையே காலை வைத்து வெளியே வந்தான்.

இப்போ சுற்றிவரக் கூட்டங்கள் இருக்கவில்லை.

ஏதாவது உதிரியாக ஜனங்கள் மட்டும் தென்பட்டார்கள்.

ஸ்கூட்டர் அருகில் போயிருப்பான்.

"ஸார்!" என்று குரல்.

அவனைப் பொறுத்தவரையில் அது மோகனமான குரல்!

திரும்பினான்.

நித்யா!

உடனே அவன் முகத்தில் குறுநகைகளாக ஒழுகின.

"என்ன மேடம்! இங்கே. . ."

"ஸார்! ஏதாவது பார்த்தீங்களா?"

"எது?" என்று புருவத்தை உயர்த்தினான்.

"இடிபாடிலேர்ந்து எடுத்து வைக்கிறாங்களே அது!"

"ஓ! பார்த்தேன். ஒன்றும் முக்கியமில்லை. ஏன் மேடம் உங்களுக்கு. . ." என்று இழுத்தான்.

"ஒண்ணுமில்லை! காகிதம் கீகிதம் ஏதாவது கிடைச்சதோன்னு. . ."

"முக்கியமான காகிதமா?"

"இல்லை ஸார்! என்னென்னமோ வச்சிருந்தோம்! ஏதாவது கிடைச்சதோன்னு. . ."

"எப்படிக் கிடைக்கும் மேடம்! எல்லாம் தீய்ந்து கருகிக் கிடக்குது! நீங்க அதைப் பார்க்கத்தான் தினமும் வர்றீங்களா?"

"அப்படியில்லை ஸார்! வந்து. . . என் அம்மாவை இழந்தது எனக்குத் தாங்க முடியலை! அதுவும் எனக்கு ஊகம் கிடைச்சு, அவளை வெளியில் அழைத்து வந்த பிறகும் விதி அவளை உள்ளே பிடித்து இழுத்து கொன்னிருச்சு! நான் அவளை விட்டிருக்கக் கூடாது! கையோட இழுத்து வந்திருக்கணும்னு மனசு ரொம்ப துடிக்குது ஸார்! ராத்திரி எல்லாம் தூக்கம் இல்லை!"

கண்களைத் துடைத்தாள் அவள்.

'இவளுக்கு வந்த லவ் லெட்டராக இருக்குமோ?' என்று நினைத்தான்.

"என்னம்மா செய்யறது? விதிதான். . ."

"ஸார்! எனக்கு எதுவும் ஓடறதில்லை ஸார்! ஆபீஸ் போகலை. லீவு போட்டு தினமும் இங்கே வந்து அம்மாவுக்காக அழறேன். . ."

திரும்பவும் கண்களைத் துடைத்தாள்.

"அழாதீங்க! ஒவ்வொருத்தரும் உங்களைவிட அதிகமாக இதிலே இழந்திருக்காங்க! யார் இந்த பயங்கர குண்டை வச்சாங்கன்னு தெரியணும். நான் வரேன். நேரமாயிடுத்து!"

லிங்க் அவளைக் கனிவோடு பார்த்தான்.

அவளது கவலையிலும் அவளது களையான முகம் மெருகோடு தெரிந்தது.

மனசில் அதனால் சின்னதாகச் சிலும்பல்.

அந்த அனுபவத்தை ரசித்துக் கொண்டே ஸ்கூட்டரைக் கிளப்பி விட்டுப் பறந்தான்.

ஐந்தே நிமிடங்களில் கமிஷனர் ஆபீஸ் வந்தான்.

உள்ளே கம்ப்யூட்டர் பகுதி சென்று ஃபாக்ஸ் செய்ய ஒரு கடிதத்தை நீட்டினான்.

தெற்குப் பிராந்திய ஐ.ஜி.க்கு அது பறந்தது.

அடுத்த சில நிமிடங்களில் பதில் வந்து விட்டது.

காகிதத்தில் துல்லியமான போட்டோ!

நாகசாமியின் படம்!

எடுத்துக் கொண்டு வெளியே விரைந்தான்.

ஃபாக்ஸ் படத்தை சிங்கிடம் லிங்க் நீட்டினான்.

தீர்க்கமாக அதை அவர் ஒரு பார்வை பார்த்தார்.

உடனே எழுந்தார்.

"வா லிங்க்! உடனே மார்ச்சுவரி போறோம்!" என்றார்.

ஜீப்பில் பறந்தார்கள்.

மார்ச்சுவரி குட்டி அதிகாரி ஜனார்த்தனம் ஒரு கும்பிடு போட்டார்.

உள்ளே போனார்கள்.

முதல் சடலத்தின் பெட்டியை வெளியே இழுத்தார். சிப்பந்தி.

துணியை விலக்கினார்.

உள்ளே சிங் பார்த்தார்.

ஆண் சடலத்தின் முகம் சரியாகத் தெரியவில்லை. அநேக இடங்கள் சிதைந்து கிடந்தது.

"உயரம் குறிச்சிருக்கீங்களா?"

"ஆமாம் ஸார்! இதோ வரேன்."

சிப்பந்தி திரும்பி வந்தார். "ஸார் அஞ்சடி நாலு அங்குலம்! எடை 96 கிலோ! இடது காது கீழே மச்சம்" என்று கூறிக்கொண்டே முகத்தைப் பார்த்தான்.

"எங்கேப்பா இடது காது?"

"அது இல்லாமத்தான் வந்தது ஸார்!" என்றார் சிப்பந்தி.

சிங் கூர்ந்து பார்த்தார். அந்தப் பகுதியே சிதைந்து போயிருந்தது.

வலது காதும் பாதி காணவில்லை.

சிங் தமது பாக்கெட்டுக்குள் கைவிட்டார். நாகசாமியின் போட்டோவை வெளியே எடுத்தார். சுத்தமான கூர்மைக் கண்ணால் சோதித்தார்.

"நோ! லிங்க்! இது அந்த ஆள் இல்லை!" என்றார்.

லிங்க் அவர் அருகில் வந்து போட்டோவை எட்டிப் பார்த்தான்.

"இந்த போட்டோவிலே இருக்கிறவன் 96 கிலோ இருக்க முடியாது புரியுதா?" என்றார்.

ஆச்சரிய மிகுதியில் லிங்கின் கண்கள் விரிந்தன.

சிப்பந்தி இப்போது இடை புகுந்தார்.

"ஸார்! சொல்ல மறந்துட்டேனே! இன்னிக்குக் காலையிலே இந்தப் பிரேதத்தைப் பார்க்கிறதுக்கு ஒரு ஆள் வந்தார்."

சிங் சட்டென்று திரும்பினார்.

"பிரேதத்தைத் திறந்து காண்பிச்சேன்! கொஞ்ச நாழி நின்னான். அப்புறம் அடையாளம் தெரியலைன்னு போயிட்டான்!"

"இந்தா ஜனார்த்தன்! நான்தான் யார் வந்தாலும் போன்லே சொல்லச் சொன்னேனே!" என்று அதிகாரியை நோக்கித் திரும்பி கூறினார் சிங்.

"மன்னிக்கணும் ஸார். அந்த நேரத்திலே அது நினைவுக்கு வரல்லை. தவிர ஸார்! அவர்தான் சொந்தக்காரர் இல்லைன்னு தெரிஞ்சுட்டுதே!"

மீண்டும் சிங்கின் பருத்த கை அவரது பாண்ட் பாக்கெட்டுக்குள் சென்றது.

அடுத்த விநாடி அந்த போட்டோ வெளியே வந்தது.

"மிஸ்டர்!" என்றார் சிங். "காலையிலே வந்த ஆள் இவர்தானா?" என்றார்.

ஜனார்த்தனம் துள்ளாத குறை!

"ஆமா ஸார்!" என்றான் அழுத்தமாக.

சிங் முகத்தில் ஒரு புன்னகை மெல்லிசாக உட்கார்ந்தது.

"லிங்க்! புரியுதா?" என்றார்.

லிங்க் மனசில் எங்கேயோ போயிருந்தான்.

திடுக்கிட்டு நிலைக்கு வந்தான்.

"புரியுதா? இல்லையா?"

இன்னும் லிங்கிற்குப் புரியவில்லை. விழித்தான்.

"இந்தப் பாரப்பா! விபத்து நடந்த அன்னிக்கு நாகசாமி கட்டிடத்து வெளியிலே இருந்திருக்கான். நாகசாமி கட்டிடம் விழுந்தாச்சு. பல பேர் செத்தாச்சு. இதிலே ரெண்டு பேர் பெயர் தெரியாமல் போயாச்சு."

"ஓ! புரியுது சார். அந்தப் பிரேதத்தை நாகசாமின்னு போலீஸ் அடையாளம் சொல்லிக்குமான்னு பார்க்க வந்திருக்கான்."

"ஆமாம்!" என்றார் சிங்.

அடுத்த சடலத்தையும் பார்த்தார்கள். அது முழு உருவமாக இல்லை. இருக்கிற உறுப்புகளைக் கூட அடையாளம் கண்டுபிடிக்க ஊனக் கண்ணால் முடியாது.

சிப்பந்தியிடம் விடைபெற்றுக் கிளம்பினார்கள்.

✧✦✧

# 4

ஆபீசில் அமர்ந்து, ஒரு கப் காப்பி அருந்தியதும், "லிங்க்! இந்த நாகசாமி போட்டோவை காப்பி எடுத்து எல்லா போலீஸ் நிலையத்துக்கும் அனுப்பு. ஆளைப் பார்த்தா பிடிக்கச் சொல்லு."

"எஸ் ஸார்! அவனை நான் இங்கே தேடலாமா ஸார்?"

"தேடலாம் லிங்க்! அதுக்கு முன்னாடி இன்னும் சில வேலைங்க இருக்கு. இந்த கட்டிடத்தில் இன்னும் ரெண்டுபேர் தனியாக இருந்திருக்காங்க."

ஆள் யமகாதர் என்று நினைத்தான் லிங்க்!

அவனுக்கு அந்த விஷயம் தோன்றவில்லையே!

"மார்க்கபந்து என்று ஒருத்தன். அவன் மூணாவது தளத்திலே தனி ப்ளாட்லே இருந்திருக்கான்."

"எஸ். ஸார்."

"கன்னிங்ஹாம் ஹோட்டல்லே கேடரிங் சூபர்வைசராக வேலை செய்திருக்கிறான். இந்த ஆள் உயிர் தப்பிச்சானா தெரியணும். அதை முதல்லே கவனி!"

"எஸ் ஸார்!"

"அடுத்து சந்திரமதின்னு ஒரு பெண்மணி! 38 வயது! இரண்டாவது தளத்திலே ப்ளாட்லே தனியா இருந்திருக்கிறாங்க. என். எஸ். கே. ஸ்கூல்லே மியூசிக் டீச்சரா இருந்திருக்காங்க! அவங்க உயிரோடு இருக்காங்களா?"

"அவங்க இறந்தாச்சு. சடலத்தை சொந்தக்காரங்க அடையாளம் காட்டிட்டாங்க."

"அப்படியா?" என்று யோசனையில் சிங் ஆழ்ந்தார். "அப்புறம் லிங்க்! இன்னொரு விஷயம் நாசூக்கா விசாரிக்கணும்."

"எஸ் ஸார்."

"இங்கே எத்தனையோ பேர் இறந்துட்டாங்க. இதிலே யார் செத்துப் போனா யாருக்காவது சொத்துக்கித்து கிடைக்கிறதான்னு பார்க்கணும். அதுக்கு லிஸ்ட்!"

"செய்துடறேன். அப்புறம் நித்யா!"

லிங்க் பேசவில்லை.

"ரைட்! என்னவோ காதல் இருக்கலாம்னு சொன்னே! அதை விசாரிச்சுக்க. . ."

"எஸ் ஸார்!"

லிங்க்கின் மனம் உள்ளே மறுகியது.

லிங்க் போய்ச் சிறிது நேரம் இராது. சிங்கைத் தேடி யாரோ வந்திருப்பதாக அறிவித்தார்கள்.

"உள்ளே அனுப்பு!" என்றார் சிங்!

கதவு திறந்த போது நிமிர்ந்து பார்த்தார். ஒரு யௌவனப் பெண்மணி கண்ணில் கலக்கத்துடன் உள்ளே வந்தாள்.

"உட்காருங்கம்மா!" என்றார்.

"என் பேரு பார்வதி!" என்றாள் உட்கார்ந்து கொண்டு. முகம் வட்டமான சிவப்பு. கண்களில் உறைய வைக்கும் குளிர்ச்சி! உதடுகள் சின்னதாக அடங்கி இருந்தன."

"என் தங்கை ஒருத்தி! மதனான்னு பேரு! அவளைப் பற்றி உங்ககிட்டே கேட்கணுமின்னு வந்திருக்கேன்."

"என்ன கேட்கணும்?"

"அந்தக் கட்டிடம் இடிஞ்சு விழுந்திச்சே! அன்னியிலேர்ந்து அவள் வீட்டுக்குத் திரும்பலை!"

"ஓ! ஏன் என்ன காரணம்?"

"அந்த விழுந்த கட்டடத்திலேயே நாகசாமின்னு ஒரு நடிகர் இருந்தாரு! டி.வி., ரேடியோவிலே நடிப்பாரு. நாடகமும் எழுதுவாரு. அவர் மேலே அவளுக்கு மனசு போயிட்டுது."

"அவருக்கு என்ன வயது?"

"40 இருக்கும். மதனா ரெண்டு டி வி. நாடகத்திலே நடிச்சா. அதிலேர்ந்து ரெண்டு பேருக்கும் பாசம் வந்துட்டுது."

"சரி!"

"இப்போ எனக்கு மதனா இறந்துட்டாளான்னு தெரியணும்."

டக்கென்று சிங் மேஜை மீது கையை வைத்தார்.

"அன்னிக்கு நாகசாமியைத் தேடி அவள் போனாளா?"

"ஆமாம் ஸார்!"

"சொல்லிட்டுப் போனாளா?"

"இல்லை. அக்கவுண்ட்ஸ் கிளாசுக்குன்னு கிளம்புவா. கொஞ்சம் அதிகம் மேக்-அப் பண்ணிக்கிறது தெரிஞ்சா,

இந்த நாகசாமியைத் தேடித்தான் போயிருப்பான்னு தெரியும்."

"போனவள் திரும்பலையா?"

"இல்லை. அக்கவுண்ட்ஸ் கிளாசுக்கும் போகலை! அதை விசாரிச்சுத் தெரிஞ்சுக்கிட்டேன்."

"சரி! அந்தக் கட்டிடம் இடிஞ்சு விழுந்துட்டுதே! அங்கே போயிருந்தா இனிமே பிழைக்க மாட்டா."

"அது தெரிஞ்சதுதான். யாரும் பிழைக்கலைன்னு பேப்பர்லே போட்டாச்சு. ஆனா எக்ஸ்ட்ரா பாடி கிடைச்சதாக போட்டிருந்தாங்க! அது அவளாத்தான் இருக்கணுமின்னு நினைக்கிறேன்."

"ஒரு சடலம் மார்ச்சுவரியிலே இருக்கு. நீங்க வேணுமின்னா அடையாளம் கண்டுபிடியுங்க. சடலத்தின் சைஸ் கண்டுபிடிக்கிறதே கஷ்டமா இருக்குன்னு சொல்லிட்டாங்க டாக்டருங்க. அந்த அளவு சிதைஞ்சு போயிருக்கு."

"அப்படியா?" என்று அந்தப் பெண்மணி யோசித்தாள்.

"வாயிலே பல்வரிசை இருக்குதா?" என்றாள்.

சிங்குக்குப் பார்த்த நினைவு! "ஏன் மேடம் அதை வச்சுக் கண்டுபிடிப்பீங்களா?"

"ஆமாம். முன்வரிசையிலே ரெண்டு பல்லு பொய்ப் பல்லு! அதைப் பார்த்தவுடனே. . ."

"சரி மேடம்! இப்போ அந்தச் சடலம் உங்க தங்கைன்னு தெரிஞ்சா என்ன செய்யப் போறீங்க?"

பார்வதி கண்களைத் துடைத்தாள். "ஸார்! அவளை அனாதையாக விடறதை விட நல்ல முறையிலே தகனம் செய்யலாமில்லே?"

அவள் சிறிது நேரம் விசித்தாள். பிறகு முகத்தை துடைத்து "அப்புறம் வேறு ஒண்ணு ஸார்!"

"என்ன?"

"அன்னிக்குப் பார்த்து கழுத்திலே நெக்லஸ் போட்டுக்கிட்டுப் போயிருக்கிறா. அது பத்து வருஷம் முந்திய விலையே லட்ச ரூபாய்."

சிங்கின் கண்கள் ஒரு கணம் சுருங்கின. எங்கேயோ ஒரு ஸ்விட்ச் அடிச்சது. "என்ன? லட்ச ரூபாய் மதிப்பா?" என்றார்.

"ஆமாம்! அதையும் தேடத்தான் வந்திருக்கேன். கிடைச்சுதா?"

சிங்குக்குப் புரிந்து விட்டது.

"இதை முன்னாடி ஏன் சொல்லலை?"

"ஸார்! அந்தப் பெண் செஞ்சது எங்களுக்கு அவமானமா இருந்திச்சு. வேற எங்கேயாவது போயிட்டு திரும்பி வந்து விடுவாளோன்னு ஒரு நப்பாசையிலே இருந்தோம். நாள் ஆக ஆக அது சரியில்லைன்னு தோணிப் போச்சு. நெக்லஸ் கிடைச்சுதா?"

"நீங்க என்ன புதுக் கேஸ் உண்டாக்குறீங்க போல இருக்கே! நாங்க இங்கே நெக்லெஸ்ஸையே பார்க்கலை!"

உதடுகள் நடுங்க, அவள் நிமிர்ந்தாள். "அப்போ!" என்றாள்.

"முதல்லே நீங்க பிரேதத்தை அடையாளம் கண்டு பிடியுங்க! வாங்க என்னோடு!" என்றார் சிங்.

திரும்பவும் மார்ச்சுவரிக்கு சிங் இவ்வளவு சீக்கிரம் வருவார் என்பது தெரியாது.

ஜனார்த்தனம் அவருக்காக அந்த இரண்டாம் சடலத்தை இழுத்துக் கொடுத்தார்.

பார்வதி சிறிது நேரம் கண்களை மூடினாள்.

பிறகு திறந்து இரண்டாவது முறை பார்த்த போது பிரேதத்தின் முகம் பூராவும் சிதைந்து கிடப்பதையும், பற்களின் முன் வரிசை மட்டும் வெளியில் தெரிவதையும் பார்த்தாள்.

"பாரம்மா சரியாய்ப் பாரு. முன் வரிசைப் பல்லைப் பாருங்க. . .", பார்த்தாள்.

"ம்! கண்ணை மூடாதீங்க! நல்லாப் பாருங்க!"

பார்த்தாள். "அவள்தாங்க!"

சிப்பந்தி உடனே டிராயரை மூடினான்.

வெளியே அவளை நடத்தி அழைத்து வருவது கஷ்டமாகி விட்டது.

வாசல் முகப்புக்கு வந்ததும், "மேடம்!" என்றார்.

இன்னும் அவள் அழுகை அடங்கவில்லை. "உங்க தங்கை, பல் விஷயமா டாக்டர்கிட்டே போனாளா?"

"ஆமாம்! போயிருக்கிறா!"

"அவர் விலாசம் தர முடியுமில்லே!"

"முடியும்!"

"கேஸ் ஒரு மாதிரி புரியுது ஸார்!" என்றான் விங்க்.

சிங் கண்ணாடிக் குமிழைச் சுற்றிக் கொண்டே வெறுமையாய்ப் பார்த்தார்.

"அந்தப் பெண் மதனாவைத், தன் பிளாட்டுக்கு நாகசாமி வரச் சொல்லி இருக்கான் ஸார். வந்ததும் நெக்லஸைக் கழற்றி வாங்கிட்டு வெளியிலே அவன் போயிட்டான். அதுக்குப் பிறகு குண்டு வெடிச்சிருக்கு சார்! அவள் இறந்து போயிட்டாள்."

"குண்டை யாரு வெடிச்சா?"

"அவன்தான் ஸார்! ஏதோ வழி பண்ணி அதை வெடிச்சிருக்கணும். அது மூலம் நெக்லஸ் அவனுக்குச் சொந்தமாயிருக்கணும்! என் தியரி எப்படி ஸார்?"

சிங் மெல்லிதாகப் புன்னகை விடுத்தார். இதுவும் நடக்கக் கூடியதுதான். ரெண்டு ரூபாய்க்காக கொலை செய்த ஆட்கள் உண்டு. ஒரு நெக்லசுக்காக ஒரு வீட்டையே குளோஸ் பண்ணி இருக்கலாம்.

"ஆனா, இங்கே ஒரு சிக்கல் இருக்கு! இந்த நாகசாமி மூணாவது மாடியிலே இருந்திருக்கிறான். குண்டு அவன் வீட்டிலே வச்சா மேலே நோக்கித்தான் வெடிக்கும். இங்கே அடித்தளத்திலேர்ந்து வெடிச்சிருக்கு!"

"அதைத்தான் நானும் யோசிக்கிறேன். யார் வெடி வைச்சாலும் கீழே போய் வைச்சிருக்காங்க. அது எங்கே வச்சாங்க?"

✧✦✧

# 5

"ஸஸ ரிரி கக ரிரி கக மம மம பப தத"

வாயில் முனகிக் கொண்டு அந்த நாற்பது வயது சுமார் நபர் அந்தச் சின்ன குறுகலான இடைவெளியில் நடந்து சென்றான்.

வரிசையாய்ப் பல வாயில்கள் அந்த இடைவெளியில் இருந்தன.

ஒவ்வொன்றின் உள்ளும் ஒரே அறைக் குடும்பங்கள் முடங்கிக் கிடந்தன.

கடைசிக் கதவைப் போய் 'டொக் டொக்' கென்று தட்டினான்.

"யார்?" என்று பெண் குரல் கேட்டது.

"நான்தான் மதனா!" என்றான் அவன்.

உள்ளே திறக்கப்படும் சப்தம்!

அவன் நுழைந்து கதவை உடனே சாத்தி தாழ்ப்பாள் போட்டான்.

அறையில் ஏதோ ஒரு சன்னல் லேசாக வெளிச்சம் விட்டிருக்க, கீழே மட்டும் கிடந்த இருட்டில் சம்மணமிட்டு அமர்ந்தான்.

"ஏதாவது தெரிஞ்சுதா?" என்றாள் மதனா.

அவள் முகம் முழுதும் வீங்கி இருந்தது.

“விசாரிச்சுட்டேன். உங்க அக்கா உன்னைப் பற்றி கொஞ்சம் கூட கவலைப்படல்லை. அந்தக் கட்டிடத்தோடு நீயும் போயிட்டதாக நினைச்சாங்க.”

மதனா பேசவில்லை. கர்சீப்பை எடுத்து கண்களைத் துடைத்தாள்.

“இல்லை நான் செல்றேன். நான் வீட்டுக்குப் போய் ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்துடறேன்!” என்று கூறி அவனுக்கு முன்னால் தழைய உட்கார்ந்தாள்.

அவளது கலக்கத்தை அவன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

“என்னைத் தேடி யாராவது வந்தாங்களா?” என்றான்.

“யாரோ வந்தாங்க. நாகசாமி! நாகசாமின்னு கூப்பிட்டாங்க!”

ஒரு கணம் அந்த நபர் நெஞ்சில் கை வைத்தான்.

சுவாசம் இழுத்தது.

“யாரு அது?” என்றான் பதட்டத்துடன்.

“சொல்றது முழுதையும் காதிலே வாங்கிக்கிடுங்க! அவர் அடுத்த வீட்டுக்கு வந்திருக்கிறார் போல இருக்கு.”

“என் பெயரைச் சொன்னான் சொன்னியே?”

“இல்லையே! பக்கத்து வீட்டுக்காரர் பேரும் நாகசாமி போல இருக்கு!”

அவனது கலக்கம் நொடியில் விலகியது. சடக்கென்று அவளை இழுத்தான். மடியில் நிறைத்துக் கொண்டு மெள்ள இடையில் கை வைத்தான்.

எத்தனை நாள் இந்த இடை கிடைக்குமா என்று ஏங்கி இருப்பான்?

டி.வி. நாடகம் நடிக்க கோஷ்டி சங்கீதம் பாட எத்தனை டீன் ஏஜ்கள் போட்டி போட்டுக் கொண்டு அவனை மொய்த்தன?

'உனக்கு குரல் பிரமாதமா இருக்கு. உன்னை ஜேசுதாஸ்கிட்டே சேர்த்து விடறேன். உன்னை பாலசுப்ரமணியம்கிட்டே அழைச்சுட்டுப் போறேன்!' என்று எத்தனை பேர்களிடம் சொல்லி அந்தப் பெண்களைச் சொக்க வைத்திருக்கிறான்.

'உன் குரல் இனிமை சொட்டுது போ! டி.வி. ஸ்டேஷன் டைரக்டர் எனக்குத் தெரியும். முதல்லே உன்னைச் செய்தி வாசிப்பாளராக சேர்த்து விடறேன்.'

நாளையே காரியத்தை முடித்து விடுவது போல் எத்தனை பெண்களிடம் கூறியிருக்கிறான்?

அத்தனை பேரும் அவன் பாட்டுக் கிளாசில் படிக்கும் பெண்கள்.

அவர்களைப் புகழ்ந்து பேசுகிற அந்த வேகத்திலேயே அவர்கள் பின்பகுதிகளைச் செல்லமாகத் தட்டுவது, இடுப்பில் சதையைத் தொட்டுக் கிள்ளுவது, தோளில் தட்டிக் கையைக் குழைப்பது, கையைக் குலுக்குவது போல் பிடித்து உள்ளங்கையில் ஒரு விரலால் சுரண்டுவது. . .

இப்படி எத்தனை லீலைகள் பண்ணியிருக்கிறான்?

ஒரு ஆசிரியர் என்கிற முறையில் அவனுக்குக் கிடைத்த லைசென்சுகள் இவை!

இதில்தான் யாராவது வலையில் விழுவார்களா? என்று காத்திருக்க அடேயப்பா, நினைத்தால் கொத்து மீன்கள் கிடைத்து விடுவது போல் தோன்றும்.

சிலவற்றை தாற்காலிக உபயோகத்துக்குக் கூட வைத்துக் கொண்டிருக்கிறான்.

ஆனால் நல்ல உடல் அமைப்போடு, வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஒன்றை என்றைக்காவது தட்டிக் கொண்டு விட வேண்டுமென்று ஆசை.

அதற்கு இலக்கான நபர் இந்த மதனா என்று தெரிந்ததும் எத்தனை நாசூக்காக அவளுக்கு வலை வைத்து வந்தான்?

இப்போது! இதோ, அந்த வசதி வீட்டுப் பெண் அவனுக்கு அடிமையாகி மடியில் கிடக்கிறாள்.

“இந்தப் பாரு! இப்போ நீ போனா நிச்சயம் அகப்படுவே! உன்னாலே நானும் அகப்படுவேன். அதெல்லாம் விட்டுறு! என்னை லவ் பண்றீயா இல்லியா?” என்றான் சாந்திரான குரலில்."

கிட்டத்தட்ட இருபது வயது வித்தியாசத்தில், அந்தப் பெண்ணே அவனைக் காதலிக்கிறேன் என்று சொல்ல வைத்ததே அவனது சாமர்த்தியம்தான்.

காதல் தெய்வீகமானது. அதற்கு ஏற்றத்தாழ்வு கிடையாது. வயது வித்தியாசம் கிடையாது. அது புனிதமானது. காலத்தால் மறையாதது. என்றென்றும் நிலைத்திருப்பது என்று அவன் கூறிக் கொண்டே வர,

அந்தப் பெண் அதுவரை பார்த்த சினிமாக்களும் படித்த புத்தகங்களும் அதே வரிகளையே சொல்லிச் சொல்லி அவள் மனதில் தூபம் போட,

இளம் குறுத்துப் பெண்ணான அவள் மனம் கிறுக்காகி, ஏன் அவனிடம் படிய மாட்டாள்?

“அப்போ உங்க திட்டந்தான் என்ன?” என்றாள் சிணுங்கிக் கொண்டு.

“நாளை ஊட்டிக்குப் போறோம்.”

“போயி. . .”

“உல்லாசமாக கொஞ்ச நாள் இருந்திட்டு வரலாம்.”

அந்தத் திட்டம் அவளுக்குப் பிடித்திருந்தது.

எங்கேயாவது கொஞ்ச நாள் போனால் நன்றாக இருக்கும் போல் இருந்தது.

"ஆச்சரியம் ஸார்! யாரும் நாகசாமியை பார்க்கலைன்னு சொல்றாங்க!" என்றான் லிங்க்.

சிங் தீவிரமாக ஒரு கடிதத்தில் ஈடுபட்டிருந்தார்.

அவன் முடித்ததும் கடிதத்தைத் தாழ்த்திக் கொண்டு நிமிர்ந்து பார்த்தார்.

"ஒருத்தரும் பார்க்கலையா?"

"ஆமா ஸார்! ரேடியோ ஸ்டேஷன்! டி. வி. ஸ்டேஷன்! அக்கம் பக்கம், பாட்டு கிளாஸ் எல்லாத்தையும் தேடியாச்சு!"

"எத்தனை நாளாக காணல்லை?"

"அந்தக் கட்டிடம் விழறதுக்கு ரெண்டு நாள் முன்னாடி கூடப் பார்த்திருக்காங்க!"

சிங் மெள்ள நெற்றியை அழுத்தினார்.

"ஆள் எப்படிப்பட்டவன்னு விசாரிச்சியா?"

"ஆமாம் ஸார்! எல்லோரும் ஒரே மனசாச் சொல்றாங்க! ஆள் நல்லவன்னு. . ."

"ப்ளாட்லே தனியாத்தானே இருந்திருக்கான்?"

"ஆமாம் ஸார்."

"யாராவது அவனோட பழகுவாங்களா."

"அந்த மார்க்கபந்துதான் சமீப காலத்திலே அடிக்கடி வந்ததாகச் சொன்னாங்க!"

"மார்க்கபந்து யாரு? கொஞ்சம் மறந்து போச்சு."

"கன்னிங்ஹாம் ஹோட்டல்லே கேட்டரிங் சூபர்வைசர்."

"ஓ! அவரும் தனியாத்தானே இருந்தார்."

"ஆமாம்! மூணாவது தளத்திலே!"

"சரி! இப்போ நாகசாமிக்கு என்ன செஞ்சிருக்கே!"

"ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்ட், ஏர்போர்ட் எல்லா இடத்திற்கும் தகவல் கொடுத்திருக்கேன்."

"ரைட்! வேறே ஏதாவது துப்பு கிடைக்கிறதா பாரு."

"பார்க்கிறேன் ஸார். அப்புறம் அந்தக் காதலனைக் கண்டுபிடிச்சுட்டேன் ஸார்."

சிங்குக்கு பக்கென்று கோபம் வந்தது.

அடக்கிக் கொண்டார்.

அந்தப் பெண் நித்யாவிடம் தீவிரம் காட்டுகிறான். காட்டட்டும். இளவயது. கொஞ்சம் மயக்கம் இருக்கும்.

"சரி! யார் அது?"

அவன் திருப்திக்காகவே அந்தக் கேள்வியைக் கேட்டார்.

"வசந்த்னு பேர்! பாங்க்லே க்ளார்க்!"

"ஓ! கண்டுபிடிச்சுட்டியா? குட்! அதிலே இப்போ என்ன தெரியுது?"

"ஒண்ணுமில்லை! ஸார்!"

**நா**கசாமி எழுந்து காலையில் நான்கு மணிக்கே வெளியே போய் விட்டான்.

ஆறுமணிக்கு கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்த மதனாவுக்கு ஆச்சரியம்.

இதென்ன ஆள் மாறிவிட்டார். மேலும் கீழும் கண்களைப் பிதுக்கிக் கொண்டு பார்த்தாள்.

"எல்லாம் காரியமாத்தான். முதல்லே கதவை மூடு!"

மதனா கலக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

நாகசாமியின் தலை பாதி போய்விட்டது.

அந்த மீசையையும் எடுத்திருந்தான். மேலே ஜிப்பா போன இடம் தெரியவில்லை.

அதன் இடத்தில் "டி" ஷர்ட் ஒன்று படிந்திருந்தது.

"வா! வா! உடனே எல்லாத்தையும் பாக் பண்ணு! கோவை எக்ஸ்பிரஸ்ஸை பிடிக்கிறோம்!"

"பாக் செய்ய என்ன இருக்கு? அதிகமில்லை."

ஒரு சின்ன கைப்பெட்டியுடன் புறப்பட்டார்கள்.

ஆட்டோவில் ஏறி ரயில் நிலையம் அடைந்தார்கள்.

ரயிலில் அவசரமாக ஏறி உட்கார்ந்தாள்.

அவன் ஒரே பார்வையாக பிளாட்பாரத்திற்கு எதிர்ப்புறம் பார்த்திருந்தான்.

ஜன்னல்கள் பக்கம் திரும்பவே இல்லை.

ரயில் புறப்பட்ட பிறகுதான் திரும்பினான்.

"மதனா!" என்றான் மெதுவாக.

"ஹும்!" என்றாள் மெல்லிதாக.

"இனிமே கவலைப்படாதே! நாம இனிமே பிரமாதமா வாழப் போறோம்."

அவள் கண் லேசாகச் சிலும்பியது "அப்படியா?"

"ஆமாம் நீ என்னை என்னவோ நினைச்சுட்டே. இனிமே பாரு."

பிரயாணத்தில் அவன் அடிக்கடி எழுந்து போய்க் கொண்டிருந்தான்.

ஒன்று, இரண்டு, தடவை அவளும் எழுந்து நடைபாதைப் பக்கம் வந்து அவன் எங்கே போகிறான் என்பதைக் கவனித்திருக்கிறாள்.

ஏன் டாய்லெட்டுக்குள் அடிக்கடி போனான்?

சமயத்தில் கதவைத் திறந்து வெளியைப் பார்த்தவாறே ஏன் நின்றான்?

✧✦✧

# 6

மலை ரயில் மாலையில் ஊட்டியை அடைந்தது. மதனாவும், நாகசாமியும் இறங்கினார்கள். கவீன் ஹோட்டலில் ரூம் எடுத்திருந்தான். ஊட்டியை மதனா முதல் முறை பார்க்கிறாள். இரவில் ஒரே குளிர்! காலையில் எழுந்ததும் டிபன் வரவழைத்துச் சாப்பிட்டார்கள். “ஏங்க? அந்தக் கட்டிடம் இடிஞ்சு விழுந்துட்டதாமே” அவன் முகத்தில் ஒரு சுளிப்பு ஓடியது. “உனக்கு எப்படித் தெரியும்?” “ரயில்லே ஒரு அம்மா பேப்பர் வச்சிட்டிருந்தாங்களே.” “படிச்சியா?” “ஆமாம். உங்களைத் தேடறதா போட்டிருக்கு” மீண்டும் ஒரு சுளிப்பு அவனிடம். “ஏதேனும் உளறாதே!” “ஆமாங்க! உங்களையும் வேறே யாரையுமோ போலீஸ் தேடறாங்க, ஏன் தேடணும்?”

“தெரியலை.”

“செத்துப் போனதாக நினைச்சுக்கட்டுமே! எல்லாரும் செத்தாச்சு இல்லையா?”

“பல பேர் அந்த நேரத்துக்கு வெளியிலே போயிருந்தாங்களாமே.”

“இந்த பாரு நானே பேப்பரைப் பார்த்தாச்சு” கட்டடம் விழுந்தப்போ நான் உள்ளே இருந்தேனா? அல்லது வெளியிலே போயிருந்தேனான்னு பார்க்கிறாங்க.

"எதுக்கு அப்படிச் செய்யறாங்க?'

"எதுக்கும் கணக்கு வேணுமில்லே. இன்னும் ஏதாவது பிரேதம் எங்கேயாவது இருக்குமான்னு.".

"ஆமா நீங்க ஏன் திடீர்னு வேஷத்தை மாத்திட்டீங்க." நாகசாமி ஒரு கடுமைப் பார்வையை வீசினான். மதனாவின் பார்வை அஞ்சிக் கொண்டு பின்வாங்கியது."

"ஏது?" என்று ராகமாக இழுத்தான். "நீ என்ன போலீஸ்காரனா? என்னை 'விசாரிக்கிறே?"

உள்ளே அறை முழுதும் சூடு ஏறிவிட்டது. அவள் பார்வை நடுங்கியது. சிறிது நேரம் நிசப்தம்!

"இதெல்லாம் ஏன் உனக்கு கவலை! மதனா! நான் தான் இருக்கேனே" சட்டென்று அவளை இழுத்தான். இடுப்புக்கு மேல் அவளை தன் மீது சாய்த்துக்கொண்டான்.

மீதிப் பாதி உடலை அப்படியே தூக்கி சோபாவில் நீட்டி வைத்தான். பைத்தியம்! இதிலேதான் என்கிட்டே ஏமாந்தது என்று நினைத்தான்.

அவள் உடம்பை வீணை பிடிப்பதுபோல் பிடித்திருந்தான்.

உண்மையில் அது அவள் குற்றமல்ல. அவளது தேக அமைப்பில் பெற்றோர் வழி வந்த ஜீன்கள் செய்த துரோகம் அது.

சராசரி பெண்களைவிட அவளுக்கு அந்த பி. எச்டி உணர்வுகளை அள்ளிக் கொடுத்திருந்தன.

லேசாக அவள் உடம்பு தொடப்பட்டாலும் போதும், இந்த உணர்வுகள் பெட்ரோலைப் போல் குபீர் பற்றலாகப் பற்றிக் கொண்டன.

இந்த சப்ஜெக்டில் ஒரு 'பி. எச். டி' பண்ணியது போல எல்லாம் அறிந்து வைத்திருந்தான் நாகசாமி.

இந்த ஒரு பலவீனத்தில் மட்டும் அவள் அவனிடம் பெட்டிப் பாம்பு! இல்லாவிட்டால் அந்த இருபது வயது இளம்பெண் பைத்தியமாக நாற்பது வயது ஆசாமியோடு அவ்வளவு தூரம் வீட்டு உறவுகளை இழந்து விட்டு ஓடி வந்திருப்பாளா?

Purchased under RRRLF
Kolkatta Financial Assistance.

அவளை அந்த இன்ப மயக்கங்களில் மெய்மறக்க வைத்துவிட்டு, அவன் எழுந்து வெளியே வந்தான்.

852118

அறைக்கு வெளியே வந்ததும்; 'திடுக்;' திடுக் என்று ஒவ்வொரு நெஞ்சுக்குள் பேப்பர் உலகத்தில் பேப்பரை அவன் பார்த்திருந்தான்.

RRRLF No.
District Central Library
Cuddalore - 607 001.

அவன் அந்த கட்டிட இடிசலோடு இறந்துவிட்டான் என்று போலீஸ் நம்பவில்லை.

சிறிது நேரம் அறையைப் பார்த்து நின்றான். பிறகு அவசரமாக புறப்பட்டான்.

1627195

**நா**கசாமியின் காலடிகள் மறையும் வரை மதனா காத்திருந்தாள். பிறகு மெல்ல எழுந்து கதவைத் தாழ்ப்பாள் போட்டாள்.

26258

இங்கும் அங்கும் கண்களைச் சுழற்றினாள்.

மேஜை மீது பார்வை லயித்தது.

அருகே சென்று அதன் டிராயரைத் திறந்த போது ஹோட்டலின் பெயர் தரித்த லெட்டர் பேடும், பால்பாயிண்டும், வெற்றுக் கவர்களும் இருந்தன.

கடவுளாகவே தனக்கு அவைகளை வைத்திருக்கிறார் என்று நினைத்தாள்.

நாற்காலி மீது அழுத்தமாக உட்கார்ந்தாள்.

'டியர் நளினா!

இதைப்போன்று ஒரு கடிதம் வரும் என்று நீ கனவிலும் எதிர்பார்க்க மாட்டாய்!

நாள் :
606 106

உன் பேச்சை நான் கேட்கவில்லை.

நீ ஏதோ பொறாமையில் சொல்லுகிறாய் என்று நினைத்தேன்.

அவன் என்னை டி. வி. நிலையங்களில் கொண்டு போய் பலரிடம் அறிமுகப்படுத்தியபோது அகமகிழ்ந்து போய்விட்டேன்.

ஒரு விதத்தில் சின்ன ஸ்டாராகவாவது மாற முடியும் என்று எண்ணினேன்.

அதன் வேகத்தில்தான் அவன் பின்னால் ஒரு அடிமைப் பிராணிபோல சுற்ற ஆரம்பித்து விட்டேன்.

இதில் நான் எல்லாவற்றையும் இழந்தாகிவிட்டது.

இப்போது உயிரையும் இழப்பேனோ என்ற ஒரு சந்தேகம் வந்திருக்கிறது.

அதனால்தான் இந்தக் கடிதம் உனக்கு எழுதுகிறேன்.

என்னை ஊட்டிக்கு அழைத்து வந்திருக்கிறான்.

இவன் வசிக்கும் ப்ளாட் இடிந்து விழுந்தபோது நானும் அவனும் அங்கே இல்லை! அதில் எனக்கு ஒரு ஆச்சரியம்!

ஒருவேளை இவனுக்கு அந்தக் கட்டிடம் இடிந்து விழுகிறது தெரியுமோ என்று!

ஏனெனில் அவன் முன்னேற்பாடு போல் ஒரு கச்சா இடத்தில் என்னோடு போய்த் தங்கினான்.

இப்போது கட்டிடம் இடிந்து விழுந்து விட்டதால், இவன் ஒரே உற்சாகத்தில் இருக்கிறான்.

அதுதான் என்னை இவன் மீது சந்தேகம் கொள்ள வைத்தது.

என்னைப் பிடித்திருந்த சனி போச்சு! என்று அடிக்கடி சொல்கிறான்.

அந்த விபத்தில் அவனும் இறந்ததாகக் கருதப்படுவான் என்ற ஒரு சந்தோஷமான எதிர்பார்ப்பு அவனிடம் இருக்கிறது.

அவனும் இறந்தான் என்று அறியப்பட வேண்டும் என்று எண்ணம் அவனுக்கு அதிகமாக இருக்கிறது.

என்னை இப்போது ஊட்டியில் இந்த ஓட்டலில் தங்க வைத்திருக்கிறான். அடுத்து அவன் திட்டம் தெரியாது.

அவன் சொற்பேச்சை நம்பி என் நெக்லஸை நான் போட்டுக் கொண்டு இங்கே வந்துவிட்டேன்.

எனக்கு அவன்மீது நம்பிக்கை குறைந்து வருகிறது. அவனிடமிருந்து கழன்று சீக்கிரம் வந்துவிடுவேன்.'

உன் அன்புள்ள,

**மதனா.**

கடிதத்தைக் கவருள் போட்டு மூடினாள். ஸ்டாம்பு வேண்டுமே. . .

எழுந்தாள். ஆ! அது வேண்டாம் போஸ்டாபீஸில் "DUE" போட்டால் போடட்டும்.

"DUE" முத்திரை குத்தினால் நிச்சயமாக நளினா கையில் போய்ச்சேரும்.

கதவைத்திறந்து மெல்ல வெளியே பார்த்தாள். எச்சரிக்கையோடு வெளியே ஓட்டல் முகப்பில் உள்ள தபால் பெட்டிக்கு வந்தாள். கடிதத்தைப் போட்டுவிட்டு அவசரமாகத் திரும்பினாள்.

ஒரு கணம் யோசித்தாள்.

மனதில் ஒரே படபடப்பு!

இப்போதே இந்த இடத்தைவிட்டு தப்பித்துப் போனால் என்ன?

முடியுமா?

எங்கே போக? எப்படிப் போக?

இரண்டு வழிகள்!

ஒன்று ரயில்!

இன்னொன்று பஸ் ஸ்டாண்ட்!

இரண்டு இடத்திலும் அவளைத்தேடி வந்து விடுவானோ?

திரும்பிப் பார்த்தாள்.

ஹோட்டலையும், அறையையும் பார்க்கும்போதே பகீர் என்றது.

மனசு கேட்கவே இல்லை.

'மதனா! தப்பி விடு! தப்பி விடு!' என்று குரல் கொடுத்துக்கொண்டே இருந்தது.

கால்கள் தாமாக வெளி வாசலை நோக்கிப்போக ஆரம்பித்தன.

'தடும்' 'இடும்' இதயத்துடன் வெளி வாசல் வந்துவிட்டாள்.

குளிர் விறைத்தது.

வெளியே ஒரு குழிவான இடம் வழியே பாதை ஓடியது.

கட்டிடங்கள் தள்ளித் தள்ளி இருந்தன!

நகரங்களில் உள்ளது போல நெருங்கியே இல்லை.

நடந்தாள்.

நடந்துகொண்டே இருந்தாள்.

**ந**ல்லா பாருங்க! என்றார் இன்ஸ்பெக்டர் சிங்!

பல் டாக்டர் ராகவேந்திரா ஃபோர்ஸெப்புடன் விளக்கில் அந்த பல் வரிசையை நீட்டினார்.

திரும்பத் திரும்பப் பார்த்தார். "நோ மிஸ்டர் சிங்" இது மதனா இல்லை.

"வேறே யாரு?"

"தெரியாது!"

"தீர்மானமாவா!"

"தீர்மானம்!"

அந்தப் பெண்ணுக்கு முன் இடது வரிசைப்பல். இல்லே இது முன் வயது வரிசைப்பல்தான்.

சிங் திகைத்தார்.

"டாக்டர் சொந்த அக்காக்காரி அடையாளம் காட்டறா!"

"காட்டினா என்ன? பல்லை எடுத்தவன் நான்தான். என்கிட்டே பல் வரிசைப்படமே இருக்கு."

சிங் முகத்தில் நிழல்!

"ஜனா" என்றார்.

ஜனார்த்தனம் ஓடி வந்தார்.

"இதை அடைச்சுக்குங்க."

சிங்கும் டாக்டர் ராகவேந்திரனும் மார்ச்சுவரியை விட்டு வெளியே வந்தார்கள்.

டாக்டர் விடைபெற்று தமது காரில் ஏறினார். சிங் யோசனையோடு வந்து ஜீப்பில் தாவினார்.

"அப்போ அந்தப் பெண் இல்லை என்றால் அவள் வேறு யார்?"

அது போகட்டும். இப்போது நாகசாமியைச் சுற்றி எழுப்பிய அத்தனை ஊகங்களும் தொப்பென்று விழுந்து விட்டனவே!

மதனா எங்கே போனாள்?

நாகசாமி எங்கே?

**"ம்!** சாப்பிடு" என்றான் நாகசாமி.

"ஆகட்டுங்க!" என்றாள் அவள்.

அவள் குரலில் சுரத்து இல்லை.

வெளியில் போன அவளை, குழிப்பாதை செல்லும் வழியில்,

"ஏய் என்று அதட்டும் குரல் அசரீரி போல் கேட்டது."

இங்கும் அங்கும் திரும்பிப் பார்த்து கடைசியில் மேலே பார்த்தாள்.

மேலே போகும் ரஸ்தாவில் நாகசாமி நின்று கொண்டிருந்தான்.

முதலில் கடு கடு என்று காட்டிய அவன் முகம், அடுத்த விநாடியில் புன்னகையாக மாறியது.

அப்பா எவ்வளவு நடிப்பு அவனிடம்!

"எங்கே புறப்பட்டே?"

"சும்மா இப்படி வாக்கிங், உள்ளே இருக்க முடியலை."

"வெளியே எங்கும் போகாதே திரும்பிடு!"

மரியாதையாகத் திரும்பி விட்டாள்.

அறைக்கு வந்ததிலிருந்து ஒரே தவிப்பு!

மதனாவின் மனது ஆயிரம் மைலில் சென்றது. இந்தக் காப்பியில் ஏதாவது கலந்திருப்பாரோ? அவர் ஏன் காப்பி வாங்கித்தர வேண்டும்.

ரொம்ப அக்கறையாக அவளிடம் கொடுக்கிறாரே மயக்க மருந்து அல்லது விஷம் இதில் போட்டிருப்பாரோ?

"ம், சாப்பிடு சொல்றேன்" என்றான் நாகசாமி கோபமாக.

அவள் மேஜை நோக்கி வந்தாள். படக் படக் என்று மனம் எகிறியது. நாற்காலியில் உட்கார, டெலிபோன் மணி அடிக்க அவன் எழுந்தான்.

போனை நோக்கிப் போக அந்தக் கணத்தில் அவள் நினைத்து அந்த இரு டம்ளர்களையும் மாற்றி வைத்தாள்.

நிமிர்ந்தபோது நெற்றி வியர்த்தது.

நல்லவேளை அவன் கவனிக்கவில்லை.

போன் பக்கத்தில் போய் முதுகைக்காட்டி நின்றான்.

தயக்கமா "ஹலோ" என்றான்.

மதனா அவனை விறைப்பாகக் கவனித்தாள். விநாடிகள் பயங்கர மெதுவில் ஓடின.

"ஆ ரூம் நம்பர் 33 இது மேடம்" 43 இல்லை. ஸாரி!

போன் வைத்தபோது அவன் முகத்தில் வந்த நிம்மதிக்கு எல்லை இல்லை.

மகிழ்ச்சியை ஒரு காலை வெய்யில் போல் அடித்துக் கொண்டு மேஜை முன்னால் வந்து உட்கார்ந்தான். "ஆங்! குடி! நானும் குடிக்கிறேன். நீயும் குடி."

அவள் குடிக்க அவனும் குடித்தான். வா வெளியிலே போகலாம்.

புறப்பட்டார்கள்.

அவள் அடிக்கடி அவனைப் பார்த்தாள். ஏதாவது நடக்குமா?

வெளியே வந்தார்கள். மூடு பனி ஒரு திரைபோலக் கிடந்தது. ஓட்டலின் முகப்பைத் தாண்டி உலகம் மறைந்துவிட்டது.

அவளது தற்போதைய கவலையையும் தாண்டி ஒரு மகிழ்ச்சி வந்தது. ஊட்டியை இப்போதுதான் முதலில் பார்க்கிறாள்.

பனிக்குள் நுழைந்தார்கள். அத்தனையும் சில்! தலைப்பை இழுத்துப் போர்த்தினாள். தனி ரோட்டில் நடந்தார்கள்.

நேரம், ஏற ஏற பனி தூர்ந்து கொண்டிருந்தது.

அங்கங்கு காட்சிகள் டெக்னிக்கலராக வந்தன. மூச்சை நிறுத்தின. கண்களை விரித்து பார்த்தாள்.

அரைமணி போவதற்குள் எலும்புக் குறுத்துக்குள் குளிர் ஒழுகி விட்டது.

"இந்தாங்க திரும்பலாமா?" என்றாள்.

"இன்னும் கொஞ்ச தூரம்தான் அங்கே வந்து பாரு அசந்து போவே."

நடந்தார்கள். ரோடு நின்று ஒற்றையடிப் பாதைகள் கிளை பிரிந்தன.

ஆ இதென்ன? அத்தனை மரங்களும் ஓங்கி எழுந்து ஆகாயத்தை மறைத்துக்கூடு கட்டியிருந்தன. திடீரென்று அந்தி நேரத்துள் வந்தது போல் இருந்தது.

செழிப்பின் அபரிமிதத்தைப் பார்ப்பதில் மனம் திக்காடியது.

சீக்கிரத்தில் இடது பக்கம் திரும்பி இருபதடியில் வந்து நிற்க.

பூலோகமே ஆயிரம் அடிகள் கீழே போய்விட்டது போலிருந்தது.

ஆமாம். ஒரு பரந்த பள்ளத்தாக்கு! கீழே விரிந்து கிடந்தது.

அவர்கள் மேலே விளிம்பில் வந்து நிற்க செங்குத்தான சரிவு ஒன்று கீழே விருட்டென்று அதள பாதாளத்தை நோக்கி இறங்கி இருந்தது.

விளிம்பு அருகில் வந்து நின்றாள்.

ஆச்சரியத்தில் விரிந்த அவளது வாய் அடுத்த கணம் அச்சத்தில் விரிந்தது.

அவள் 'படக்' என்று திரும்பி ஓட முயன்றாள்.

ஆனால் அவளது முதுகின் சோளியை அவன் இறுக்கமாகப் பற்றி இருந்தான்.

அவள் முதுகைப் பிடித்துக் திருப்பினான்.

மறுகணம் கீழே தள்ளினான்.

அவளது 'ஆ' கீழே அவள் நூறு அடி பறந்து போகும் வரை கேட்டது.

கீழே போய்க் கொண்டிருந்தாள்.

புள்ளியாகச் சிறுத்து போய்க்கொண்டே இருந்தாள்.

✧✦✧

# 7

லெதர் கார்ப்பரேஷன் கட்டிடம் அந்தச் சாலைக்கு நாயகன்.

12 மாடி வளர்ந்திருந்தது.

எப்போது பார்த்தாலும் அதன் மீது ஒரு துண்டு ஆகாய மேகம் பின்னணியாக இருக்கும்.

மிருதுவான மூச்சுகள் இடையே லிங்க் அதைப் பார்த்தான்.

டுங் டிங் டிங் என்று இதயம் கிடார் அடித்தது.

கண்கள் பனி அடித்து கனிவாக இறங்கின.

எங்கெங்கோ தாமரைகள் பூக்கின்றன.

மனம் வசன கவிதை பேசியது.

சாதாரணத் தாமரைகள் அல்ல! எழில் மிகும் சொர்க்கத் தாமரைகள்.

இப்போது ஒரு பழக்கமாகி விட்டது. அது அவனை மீறிய பழக்கம்.

5.30 ஆகிவிட்டால் அந்த மாடிக் கட்டிடத்து அருகே போய் நின்று விடுவான்.

நித்யா ஆயிரத்தில் ஒருத்தி!

விழி, மொழி எதிலும் அவள் வித்தியாசப்பட்டவள்.

யார் பார்த்தாலும் காயம் படாமல் இருக்க மாட்டார்கள். அவள் அழகுக்கு அவ்வளவு உக்கிரம்.

மெல்லிய உடம்பைத் தாங்கி, ஒவ்வொரு பூ அடியாக வைத்துப் போகும் போது, லிங்கின் மனசில் கிறுக்கலாக ஒரு வசனப் பாடல் வந்தது.

மணியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று மேகம் கவிழ்ந்து சீக்கிரம் இருட்டாகி விட்டது.

5-45க்கு அவள் படிகளில் இறங்கினாள். பிளாட் பாரத்தில் நடக்க ஆரம்பித்தாள்.

அவள் அவனை நெருங்கும்போது அலைகள் பெரிது பெரிதாக அவனை வந்து மோதின.

ஓரமாக மறைந்திருந்தான்.

அவனை அவள் தாண்டிப் போகும்போது சுவாசம் தடுமாறியது.

சற்று தூரம் முன்னால் போக விட்டுவிட்டு அவளைப் பின்தொடர ஆரம்பித்தான்.

அவளது பின்புறச் சாயல்கூட அவனைக் கவர்ந்தது.

அதில் ஒரு மயக்கமான சுழற்சி இருந்தது.

அவள் தலைக் கூந்தலின் மெல்லிய ஆட்டம், கைகளின் மென்மை அசைவுகள் எல்லாமே மனதில் அழுத்திப் பதிந்தன.

மனதை மெள்ள, மெள்ள அரித்துக்கொண்டிருந்தன.

அவளைப் பின்பற்றுவது அவனது உத்தியோக வேலையாகச் செய்கிறானா?

அல்லது மனத்தில் பதிந்துவிட்ட பழக்க தோஷத்தால் செய்கிறானா?

அவனால் அதை அறிய முடியவில்லை?

அவள் நேராகச் சாலையில் சென்று, வலது சாலையில் திரும்பினாள்.

அங்கே சிறிது தூரம் சென்றதும் நேரு பார்க்கில் நுழைந்தாள்.

பார்க்கில் அவள் எங்கே போய்க் காத்திருப்பாள் என்பது தெரியும்.

அவளைக் கவனித்துக்கொள்ள, அவன் உள்ளே போக வேண்டியதில்லை. வேலிக்கு வெளிப்புறம் வழியாகப் போய் குறிப்பிட்ட இடத்தில் நின்றால் போதும்.

செடி இடுக்குகள் வழியே அவளை நன்றாகக் கவனிக்கலாம்.

இன்றும் வெளியே போய் நின்றான்.

லிங்க்கின் தனி வாழ்க்கையில் இதுபோன்ற ஒருபெண் மயக்கம் எப்போதும் ஏற்பட்டதில்லை.

எத்தனைப் பெண்களைப் பார்த்திருக்கிறான்.

அவன் எதிர்பார்த்தது போல, அவள் உள் பெஞ்சில் வந்து அமர்ந்து ஒரு நிமிடம் ஆயிருக்காது.

வசந்த் எங்கிருந்தோ முளைத்து விட்டான். அவளை நோக்கி வருவது கண்டு லிங்க்குக்கு பெரிய வெப்ப மூச்சு வந்தது.

இரண்டு தட்டுத்தட்டிக் கீழே தள்ளுவோமா என்று தோன்றியது.

கிணிங், கிணிங்.

ஒரு சைக்கிள் அவனை நோக்கி வந்தது.

லிங்க் சற்று ஒதுங்க, "ரோட் நடுவிலே நிக்காதீங்க மிஸ்டர்'' என்று குரல் கொடுத்து சைக்கிள்காரன் அவனைக் கிட்டத்தட்ட உரசிவிட்டுச் சென்றான்.

லிங்க் ரொம்ப ஓரம் வந்தான்.

வசந்த் இதற்குள் அந்தப் பெண்ணிடம் சீண்ட ஆரம்பித்திருந்தான்.

அது காதலா! ஆவேசமா!

இரண்டு, மூன்று நாட்களாக அதுதான் சந்தேகம்!

முதலில் காதலாகத் தோன்றினாலும் பயமுறுத்தல் போலவும் தோன்றியது.

இன்று பார்த்தால். . .

ஆ! அவன் பேசிய பேச்சு கோபப்பேச்சு என்று நன்றாகத் தெரிந்தது.

கையை வெகுவாக ஆட்டி ஆத்திரமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

குரலின் சில தொனிகள் ஓங்கித்தெறித்து. வெளிப்புறம் வரை எகிறின.

லிங்க்கின் மனம் பதறியது.

உண்மையில் அவை ஆத்திர வார்த்தைகள்தான்.

நித்யா தலைகுனிந்து விம்மிக்கொண்டிருந்தாள்.

லிங்க்கின் மனம் பதறியது.

"அடப்பாவி, அந்தப் பெண் எப்படிப்பட்டவள். அவளைப் போய். . ." என்று மனத்துக்குள் எரிந்தான்.

கிட்டத்தட்ட அரைமணி நேரம் அங்கேயே இருந்திருப்பான்.

வசந்த்தின் ஆத்திரம் குறையவேயில்லை.

“ஸார்” ஒரே ஒரு நிமிஷம் உங்ககிட்டே பேசிட்டுப் போயிடறேன்” என்றான் அந்த இளைஞன்.

சிங் அவனைப் பார்த்ததில்லை.

கொஞ்சம் தயக்கம் காட்டியே அவனை ‘உட்கார்’ என்று சைகை செய்தார்.

அதுவே அவனை அடங்க வைக்கும் என்று நினைத்தார்.

அவர் நினைத்தது சரியாக இருந்தது.

ஏனெனில் அவன் மீண்டும் பேச ஆரம்பித்தபோது, தொனி மாறி விட்டது.

“ஸார்” உங்க ஆபீஸ்லேர்ந்து வர்ற யாரோ ஒரு அதிகாரி தினம் சாயங்காலம் என்னைக் கண்காணிக்கிறார் ஸார். இது நல்லா இல்லை.”

சிங் திடுக்கிட்டார்.

இதுபோல யாரும் அவரிடம் வந்து குற்றம் சொன்னது கிடையாது.

நெற்றியைச் சுருக்கிக் கொண்டு, “முதல்லே நீ யாரு?” என்றார்.

“ஸாரி ஸார்” முதல்லே சொல்லியிருக்கணும்! என் பேர் வசந்த் ஸார். நானும் நித்யாவும் லவ்வர்ஸ்!

“யார் அது நித்யா? சினிமா ஆக்ட்ரஸ்ஸா? என்று வேண்டுமென்றே கேட்டார் சிங்!

“இல்லை ஸார்!” அந்த இடிஞ்ச கட்டிடத்திலிருந்த ஒரு ப்ளாட்லே இருந்த பெண்!”

“ஓ, நீங்க என்ன செய்யறீங்க.”

“பாங்க்லே கிளார்க்கா இருக்கேன்.”

“என்ன விஷயம்.”

"நானும் நித்யாவும் லவ்வர்ஸ்"

"சரி"

"நாங்க ரெண்டுபேரும் தினம் நேரு பார்க்கிலே சந்திப்போம்."

"சரி!"

"அங்கே ஒரு போலீஸ் அதிகாரி தினம் வந்து எங்களைக் கவனிக்கிறார் ஸார்."

"பைத்தியமா என்ன?"

"அது எங்களுக்கு எப்படி தெரியும் ஸார்."

"அல்லது நீங்க பைத்தியம் மாதிரி நடந்துக் கிட்டீங்களா"

முதலில் மிதப்பில் பேசிய அவனுக்கு ஒரு சவுக்கடி விழுந்தது போல் இருந்தது.

"இல்லையே ஸார்! அப்படி நடக்கலையே!"

"சிலவங்க அப்படி நடந்துக்கிறாங்க. பொது ஜனங்க வர்ற பார்க்கிலே கட்டிக்கிறாங்க. கிஸ் பண்றாங்க. அதெல்லாம் சரியில்லைதானே?"

"ஆமாம் ஸார்."

"நியூஸென்ஸ் ஆக்ட் கீழே அதை நாங்க தடுப்போம். எங்க ஆபீசர் அங்கே வந்தது அதுக்காகத்தான்."

"ஸார் எங்களைப் பல நாளாக அவர் கவனிக்கிறாரு! நாங்க அந்த மாதிரி லவ் ஆர்ட் எதுவும் செய்யலை. சொல்லப் போனா சண்டை போட்டுக்கிட்டிருந்தோம் ஸார்."

"அதுவும் பொது ஜன பார்க்கிலே தவறுதான்."

இளைஞன் முகம் வெளிறியது.

"ஸாரி ஸார்" நான் இங்கு புகார் கொடுக்க வந்திருக்கக்கூடாது. வர்றேன் ஸார்.

எழுந்தான்.

"மிஸ்டர் உட்காருங்க."

உட்கார்ந்தான்.

"நீங்க சண்டை போட்டுக்கிறதாகச் சொன்னீங்க. எதுக்குன்னு சொல்ல முடியுமா?"

வசந்த் திகைத்தான்.

"எங்க ரெண்டு பேருக்கும் அபிப்பிராய பேதம் ஸார்."

"எங்க போலீஸ் ஆபீசர் சொல்றார், நீங்க அவளை ப்ளாக் மெயில் பண்றீங்கன்னு. சரிதானா?"

"நோ! நோ! சத்தியமா இல்லை. 'திக் லவ்வர்ஸ்' இடையே இதைப்போல சண்டை வரும்தான் ஸார்."

"நீங்க அவளை உண்மையா காதலிக்கறீங்களா?"

"ஆமாம் ஸார்! அவளைத் திருமணம் செய்துக்கப் போறேன்."

"ரைட் வசந்த்! நீங்க. போகலாம். இனிமே யாரும் உங்களைக் கண்காணிக்க மாட்டாங்க."

வசந்த் வெளியேறினான்.

'நீ செஞ்சது சுத்த அநாகரிகம்."

என்று சொல்லி சிங் பைலைத் தூக்கி மேஜை மீது விளாசலோடு தட்டினார்.

'படார்' என்று சத்தம்.

அது விளக்கை அடித்தது போல் இருந்தது.

சிங் இதைப்போல் லிங்க்கிடம் உறைத்துப் பேசியதில்லை. லிங்கின் விரல்கள் திடுதிடுத்தன.

“உன்னை நான் கண்காணிக்கச் சொல்லலியே! நீ எப்படிப் போலாம்?”

லிங்க் மெள்ள மேலே நிமிர்ந்தான்.

“தப்புதான் சார்.”

“இப்படி பொதுஜனம் வந்து நம்மைக் குற்றம் சாட்டுகிற மாதிரி வச்சுக்கிட்டயே.”

“ஸாரி சார்.”

“அப்படியாவது நாசுக்காகப் பார்க்கத் தெரியுதா.”

“நான் நாசுக்காகத்தான் பார்த்தேன் ஸார்.”

“பின்னே எப்படி அவனுக்குத் தெரிஞ்சது.”

“அவன் சினேகிதங்க ஸார். அவனைப் பார்க்கிலே கொண்டு விட்டுட்டுப் போகும் போது என்னைக் கவனிச்சிருக்காங்க.”

“அதுக்கு நீ இடம் கொடுக்கலாமா?”

“கூடாது ஸார். தவறு பண்ணிட்டேன். ஸாரி.”

சிங் மேலே பேசவில்லை. மேசை மீது கிடந்த ரிப்போர்ட்டில் ஒரு பக்கம் புரட்டிப் பார்த்தார்.

“அப்புறம் லிங்க் நீயாக ஏன் இந்தக் காரியம் செய்யறே?”

“ஸாரி ஸார். தவறுதான் ஸார்.”

சிங் மௌனமானார். லிங்க் சிறிது நின்றான். பிறகு அடுத்த மேஜையை நோக்கிச் சென்றான்.

நிமிடங்கள் ஓடின.

"லிங்க்" என்றார் சிங். குரலில் கொஞ்சம் நைச்சியம் தெரிந்தது.

லிங்க்குக்கு அந்தக் குரல் கேட்டு ஆறுதலாக இருந்தது.

"எஸ் ஸார். . . என்று வந்தான்."

''அந்த மாதிரி ஏன் செஞ்சே?'' என்று சற்றே ஆவலாதியாகக் கேட்டார் சிங்.

அவர் முகம் நிமிரவில்லை.

லிங்குக்குக் கொஞ்சம் உயிர் வந்தது.

"ஸார் சில காரியங்க என் போக்குப்படி செய்வேன் ஸார். அது சில சமயம் பலன் கொடுத்திருக்கு. அதனாலேதான் இங்கேயும். . ."

சிங் பேசவில்லை. அவன் பேசியது அவருக்குச் சரியாகத் தோன்றியிருக்கும்.

"இப்போ ஸார், அந்த வசந்த் அந்தப் பெண்ணை ரொம்ப மிரட்டியிருக்கான் ஸார். அது அழுகையா அழுகுது. அந்தப் பெண்ணை அவன் பிளாக்மெயில் பண்றானோன்னு தோணுது ஸார்."

சட்டென்று சிங் நிமிர்ந்தார்.

அதே ப்ளாக் மெயில் வார்த்தையைத்தான் அவரும் சற்று முன் உபயோகித்தார்.

"லிங்க் உனக்கு அப்படித் தோணுதா?"

"ஆமாம் ஸார்."

சிங் தமது கையை மேஜை மீது அகல விரித்தார்.

"அப்போ அவங்களைக் கண்காணிக்கணும். ஆனா இப்படி நாட்டுப்புறத்தான் மாதிரி வேலி ஓரம் நின்னு பார்க்காதே! வேறே நாகரிக வழியா எடுத்துக்க!"

"சரிதான் ஸார்!"

கன்னிங்ஹாம் ஓட்டல் லவுஞ்சில் புகுந்து கவுண்டர் அருகில் இருக்கும் மானேஜர் அறைக்குள் நுழைந்தார் சிங்.

மானேஜர் குப்தா, "வாங்க, வாங்க" என்றார்.

அவரை உட்கார்த்திவிட்டு குப்தா இன்டர்காமில் பேசினார்.

உணவு டிபார்ட்மெண்ட் கோபாலன் நாயர் அடுத்த இரண்டாவது நிமிடம் அங்கே குதித்தார்.

"நாயர்! ஸார்! போலீஸ் டிபார்ட்மெண்டிலேர்ந்து வந்திருக்கார்."

"வணக்கம் ஸார்!"

"மார்க்கபந்து பற்றி அவருக்குத் தெரியணும்."

"அப்படிங்களா? நல்ல மனுஷன். சமையல்லே கெட்டி! தான் உண்டு தான் பாடு உண்டுன்னு. . ."

சிங் நிதானித்தார்.

"இப்போ ஓட்டலை விட்டுப் போயிட்டாரா?"

"ஆமாம்."

"எங்கே போயிட்டார்".

"வேலை தேடி வடக்கே போயிட்டாரு."

"நிச்சயமாத் தெரியுமா?"

"அப்டித்தான் சொன்னாரு."

"எப்போ போனாரு?"

பதினைந்து நாளைக்கு முன்னாடி போய்ட்டாரு."

"கணக்கு எல்லாம் ஸெட்டில் ஆயிடுத்தா?"

"ஆயிடுத்து."

"அவர் சொந்த வாழ்க்கையிலே எப்படிப்பட்டவரு?"

"குறை சொல்றதுக்கு ஒண்ணுமில்லை."

"எதிலேயாவது தனி இன்ட்ரெஸ்ட் உண்டா?"

"பேப்பரை விழுந்து விழுந்து படிப்பார்."

"அரசியல்லே ஆர்வம் இருக்குமா?"

"படிக்கிறதோடு சரி. ஒரு பேச்சு கிடையாது."

"அப்படிப் படிக்கிறவங்க சும்மா இருக்க மாட்டாங்களே?"

"நீங்க சொல்றது சரிதான்! இந்த வேலைக்கு வர்றதுக்கு முன்னாடி காரசாரமா அரசியல் பேசுவாராம்."

"சரி."

"ஒரு தரம் நண்பர்களுக்குள்ளே தகராறு ஆகி போலீஸ் வரை வந்து லாக்அப்பிலே போட்டுட்டாங்களாம்."

சிங்கின் ஆர்வம் டிகிரி டிகிரியாக ஏறியது.

விசாரணையில் எத்தனை விஷயங்கள் உதிர்கின்றன?

"அப்புறம் போலீஸே எச்சரிக்கை பண்ணி அனுப்பிச் சாங்களாம்? அதிலேர்ந்து யாரிட்டேயும் அரசியல் பேசறதில்லை."

"அது உண்மைதானா?"

"ஆமா ஸார்! ஒருத்தர் வழிக்கும் போக மாட்டார். தான் உண்டு தன் காரியம் உண்டுன்னு இருப்பாரு! பணம் நிறைய சேர்த்து ஒரு இடத்திலே அக்கடான்னு இருக்கணுமின்னு நினைப்பாரு! படிக்கிறதிலே இருக்கிற ருசி அவருக்கு வேலையிலே இருந்ததில்லை."

"உங்க ஓட்டலிலே வேலையை ஒழுங்காகச் செய்வார் இல்லையா?"

"செய்வாரு! அதிலே குற்றமே சொல்ல முடியாது. கொஞ்சம் டயம் கிடைச்சாலும் ஏதாவது புத்தகம் படிக்க ஆரம்பிச்சுடுவாரு! ஏதாவது புத்தகம் படிக்கணும்.

பணக்காரனா இருந்தா படிச்சுக்கிட்டே இருப்பேன்னு சொல்வாரு."

"பெண் விஷயம் ஏதாவது உண்டா?"

"எனக்குத் தெரிந்து எதுவும் இல்லை."

சிங் ஆபீஸ் திரும்பியதும் லிங்க்கை அழைத்தார். மார்க்கபந்து பற்றி கம்ப்யூட்டர் ரிக்கார்ட் ஏதாவது சொல்கிறதா என்று பார்த்து வரச் சொன்னார்.

ஒரு மணி நேரத்தில் அவன் திரும்பி வந்தான்.

ஒரு ப்ரிண்ட் அவுட் அவன் கையில் இருப்பதைப் பார்த்ததும் முகம் மலர்ந்தது.

வாங்கிப் படிக்க ஆரம்பித்தார்.

எல். ஆர். மார்க்கபந்து வயது 42, உயரம் 5 அடி 6 அங்குலம் படிப்பு எட்டாவது வகுப்பு!

'செங்கதிர் இயக்கம்' என்ற அணியில் சேர்ந்து இருந்தார்.

மதுரையில் இருந்தபோது இந்த இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்ட சில அராஜகச் செயல்களைச் செய்தார்.

பின்னர் திருச்சியில் இருந்தபோது ஊர்வலம் ஆர்ப்பாட்டம் போன்றவற்றில் ஈடுபட்டார்.

அப்போது ஒரு மாதம் சிறை தண்டனை அடைந்த பிறகு மன்னிப்பு கேட்டு வெளியே வந்தார்.

பின்னர் கோவைக்குப் போனார். அங்கே அமைதியாக ஒரு ஓட்டலில் வேலை பார்த்தாகச் செய்தி. . .

லிங்க்கை நிமிர்ந்து பார்த்தார்.

"ஸார் ஒரு சந்தேகம்! இந்த ஆளுக்கு போலீஸ் ரிக்கார்ட் இருக்கும்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"எப்போ ஆர்பாட்டம் கலாட்டாவிலே ஈடு பட்டாச்சோ அப்போ நிச்சயம் ரிக்கார்ட் இருக்கணுமின்னு தோணிப்போச்சு. இப்போ என்ன சொல்றே?"

"சந்தேகம் வந்துருச்சு ஸார்! கட்டிடம் இடிகிறதுக்கு மூணு நாள் முன்னாடி வேலையை விட்டுட்டுப் போயிருக்கான்."

"போன இடத்தக் குறிப்பிட்டுச் சொல்லலை. என்னைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு இடம் போக முடியும்." என்றார் சிங்.

"எங்கே?"

"பெங்களூர்."

"ரைட் ஸார்! அங்கே ஓட்டல்கள்லே இருப்பான் பிடிச்சுடலாம்."

"ஒரு விஷயம் லிங்க்!"

"எஸ். ஸார்."

"இந்தக் கட்டிடம் இடிஞ்சு விழறதிலே அவனுக்கு என்ன லாபம்?" லிங்க் யோசித்தான்.

"ஏதாவது இருக்கணும்."

"நாகசாமிக்காவது நெக்லஸ் லாபம் கிடைச்சுது. இவனுக்கு லாபம் என்னனு தெரியலை. அடுத்தது கட்டிடம் இடிஞ்சு விழறதுக்கு மூணுநாள் முன்னாடியே வேலையை விட்டிருக்கான். அதையும் கவனி!"

"ஸார் எதுக்கும் விசாரிச்சுட்டாப் போவுது. ஒரு விஷயம் தெரியுது. கட்டிடம் இடிஞ்ச போது இவன் அதுக்குள்ளே இல்லை. இருந்திருந்தா சடலம் கிடைச்சிருக்கும்."

"ரைட் விசாரி!"

லிங்குக்குப் பெரிய கோபம்!

வசந்த் மீது?

சிங்கிடம் ரிப்போர்ட் செய்து அவனுக்கு (லிங்குக்கு) டோஸ் வாங்கிக் கொடுத்துவிட்டான்.

இந்த வசந்த் ஏன் நித்யாவை மிரட்டுகிறான்? ஏதாவது விஷயம் இருக்குமோ?

பல நாட்கள் ரகசியமாக நேரு பார்க் போய் வந்தான்.

ஆச்சரியம். வசந்த் நித்யா ஜோடி அங்கே வருவது நின்றுவிட்டது.

வேறு பார்க்கைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். அதை எப்படிக்கண்டு பிடிப்பது?

சாயங்காலம் 5-30 லெதர் கார்ப்பரேஷன் வாசலை மறைவாக இருந்து கண்காணித்தான்.

ஒரு வாரம் மட்டும் செய்திருப்பான்.

ஆனால் நித்யா வெளியே வரவே இல்லை. என்ன ஆனாள் அவள்?

ஒரு திங்கட்கிழமை பகலில் லிங்க் அந்த ஆபீசில் நுழைந்தான்.

இரண்டாவது தளத்தில் பெரிய காரியாலயமாக இருந்தது.

ரிசப்ஷனிஸ்ட் பெண் இதமாகப் பேசினாள்.

தன்னை நித்யாவுக்கு உறவினனாகக் கூறிக் கொண்டான்.

நித்யாவைக் பார்க்க வேண்டும் என்றான்.

ரிசப்னிஸ்ட் போனை எடுத்துச் சிறிது நேரம் பேசினாள்.

பிறகு "ஸாரி ஸார்! அவங்க ஒரு வாரமா ஆபீஸ் வரல்லை என்றாள்."

"உடம்பு சரியில்லையா?"

"தெரியாது ஸார். நோ ரிப்போர்ட்" என்றாள்.

"தாங்க்ஸ்!"

லிங்க் யோசனையோடு வெளியே வந்தான்.

டயரியை எடுத்தான்.

பக்கங்களைப் புரட்ட நித்யாவின் அத்தை விலாசம் கிடைத்தது.

நேராக அதை நோக்கிப் புறப்பட்டான்.

லிங்க்கின் இளமனம் அந்த மாடியில் ஏறும்போது படபடத்தது.

அவனது மனதின் ராணி அங்கே வாழ்கிறாள் என்று எண்ணினான்.

இந்தப் படிகளில்தானே அவள் தினம் ஏறி இறங்குவாள்? இவை புனிதம் பெற்றவை.

உண்மையில் ஒவ்வொரு படியிலும் அவன் நிதானித்து நிதானித்து ஏறினான்.

மனம் அவ்வப்போது வசன கவிதைகளைச் சொல்லி மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தது.

யாராவது அவனை அப்போது பார்த்தால் பைத்தியக்காரனோ என்று நினைத்திருப்பார்கள்.

அவனுக்கே தனது செய்கை அப்படித்தான் தோன்றியது.

ஏன் இந்தப் பெண்ணிடம் அவ்வளவு மயக்கம்?

மேலே வாசல் நிலை வந்தது. அருகே மணியடிக்கும் முனை!

அதைக்கூட அவன் உணர்ச்சிப் பெருக்காகப் பார்த்தான்.

இதில் எத்தனை முறை அவளது புனித விரல்கள் அழுந்தியிருக்கும். பெருமூச்சு!

கடைசியில் மணியை அழுத்தினான். உள்ளே சில துணுக்கு மணிகளை அது உதிர்த்தது.

காலடிகள்!

பிறகு கதவு திறக்கப்பட்டது.

ஏமாற்றம்!

யார் இது?

"நீங்க யாரு? என்றாள் அந்த நடுத்தர வயதுப் பெண்மணி."

"நான் போலீஸ் இலாகா!" என்றான்.

"ஆ! வாங்க! வாங்க!"

உள்ளே கொண்டு போய் சோபாவில் உட்கார்த்தினாள். சன்னல்கள் மேன்மையான வெளிச்சம் சொரிந்தன.

இந்த அறையில் அவள் உலாவி இருப்பாள்!

"மேடம் இந்த வீட்டிலேதானே நித்யா இருக்காங்க?"

"ஆமாம்."

"இப்போ நித்யாவைப் பார்த்து விசாரிக்கணுமே!"

"ஒரு வாரமா அவள் இந்த வீட்டிலே இல்லை."

"இல்லையா? எங்கே பேனாள்?"

"என்கிட்டே எதுவுமே சொல்லலை. ஆபீஸிலே இருந்து போன் செஞ்சா இதைப் போல என் சிநேகிதியோட வெளியூர் போறேன். திரும்பி வந்த பிறகு வரேன்னு!"

"ஓ! அப்படிப் போறது வழக்கமா?"

"வழக்கமே கிடையாது. நான் கூடக் கேட்டேன். இப்படி மாற்றுப் புடவை கூட எடுத்துக்காமல் போறயேன்னு. அவசரம்னு பதில் சொன்னா!"

"அப்புறம் செய்தி ஏதாவது வந்திச்சா?"

"எதுவும் வரலை. எனக்குக் கவலையா இருக்கு."

"இதுவரையும் செய்தி தெரியாது?"

"தெரியாது. ஆபீஸ்லேர்ந்து ரெண்டு மூணு வாட்டி கேட்டுட்டாங்க."

"அவளுக்கு சிநேகிதி யாரு?"

"அது யாருன்னு தெரியலை. ஆனா சிநேகிதன் ஒருத்தன் உண்டு."

"யாரு அது?"

"வசந்த்னு ஒருத்தன்! மகாலட்சுமி பாங்கிலே வேலையா இருக்கான்."

"அட்ரஸ் தெரியுமா?"

"தெரியாது."

"அவனோட அவள் எங்கேயாவது. . ."

"ஸார் அவள் நல்ல பெண். அதைப்போல எதுவும் செய்ய மாட்டாள். எங்க குடும்பங்களிலேயே அவளுக்கு நல்ல பெயர். ஆனா இப்போ. . ."

"இப்போ' என்ன சொல்றீங்க?"

"இந்த நடவடிக்கைதான் புரியலை."

"உங்ககிட்டே அதைப்பற்றி ஏதாவது சொல்லி இருக்காங்களா?"

"ஒரு வார்த்தை கிடையாது."

"இங்கே இருந்தபோது அவள் மனநிலை எப்படி இருந்திச்சு."

"அம்மாவை நினைச்சு தினம் கண்ணீர் விடுவா! சோகமாகவே இருப்பா... இங்கே வந்து தங்கினாளே தவிர அவளுக்கு இங்கே இருப்புக்கொள்ளவே இல்லை தவிச்சிட்டிருந்தாங்க."

"ஏன்னு கேட்டீங்களா?"

"கேட்கவே வேண்டாம். அவள் நிலையிலே யாரும் அப்படித்தான் இருப்பாங்க."

"அந்த வசந்த் யாரு? நல்ல பையனா?"

"பார்க்க நல்லா இருக்கான். வசதியான குடும்பம்னு தெரியுது."

"இங்கே வந்திருக்கானா?"

"ஒரு வாட்டி அழைச்சிட்டு வந்தா!"

"சரி மேடம்! நித்யாவுக்கு வேறே உறவுக்காரங்க யாராவது உண்டா."

"சொல்லும்படி யாரும் கிடையாது. சுற்றிச்சுற்றி நான்தான்."

"சரி அவளைப்பற்றி தகவல் தெரிஞ்சா எங்களுக்குச் சொல்லுங்க."

லிங்க் ஒரு கார்டை எடுத்து அவள் கையில் கொடுத்தான்.

"நீங்க ஏன் அவளைப்பற்றி விசாரிக்கிறீங்க?"

"அந்தக் கட்டிடம் இடிஞ்சது சம்பந்தமா விசாரணை நடத்தறோம். அதிலே இவங்க கிட்டேயும் பேச வேண்டி வருது..."

"அந்தக் கட்டிடம் இடியப்போறது அவளுக்கு முன்பே தெரியும்னு சொன்னா."

எழுவதற்கு இருந்த லிங்க் உட்கார்ந்தான்.

"அவங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நானும் கேட்டேன். ஏதோ ஊகம் வந்ததா சொன்னா."

அவளுக்கு ஜோஸ்யம் ஏதாவது தெரியுமா?"

லேசாகச் சிரித்தாள் அத்தை.

"அப்படி இல்லை அவளுக்கு அது எப்படித் தெரிஞ்சுதோ? அதுவும் பாருங்க. தன்னைக் காப்பத்தினவள் தன் அம்மாவைக் காப்பாத்த முடியாமல் போச்சு."

இன்ஸ்பெக்டர் சிங் அந்தக் கடிதத்தை வாசித்துப் பார்த்தார்.

அவர் புருவம் சுருங்கியது.

இரண்டாம் முறை படித்தார்.

எதிரே இருந்த பெண்ணை நோக்கி "உன் பேர் என்னம்மா? என்றார்."

"நளினா!"

"உனக்குத்தான் இந்த லெட்டர் வந்திருக்கு இல்லையா?"

"ஆமாம்."

"மதனா உன்னுடைய உயிர்த்தோழி."

"ஆமா ஸார்."

"சரி இங்கே இருக்கும்போது நாகசாமியோட பரிச்சயம் இருக்கிறதை சொல்லியிருக்காளா?"

"ஜாடையா சொல்லியிருக்கா?"

"சரி! இவ்வளவு வயதான ஒரு பாட்டுக்காரர் கிட்டே இந்தப்பெண் எப்படி மயங்கினா?"

"தலை எழுத்து ஸார். ஒரு பின்னணியும் உண்டு ஸார்."

"என்ன?"

"அவங்க அக்காவோடுதான் அவள் இருந்தா! அக்கா அவளைச் சரியாகக் கவனிக்கிறதில்லை."

"ஓ அன்பு இல்லாமல் போச்சா?"

"ஆமா ஸார்! தவிர அக்கா புருஷன் சரும நோய் உடைய ஆசாமி! அவன்வேறே இந்தப் பெண்ணுக்கு 'லவ் லெட்டர்' கொடுத்துக்கிட்டே இருந்திருக்கான். என் சொல்படி நட, இல்லாட்டி இல்லாதும் பொல்லாதும் சொல்லி உன் அக்காவைக் கொண்டே வீட்டை விட்டு விரட்டச் சொல்வேன்னு பயமுறுத்தி இருக்கான்.

"ஓ வீட்டுப் பின்னணி சரியில்லாமல் போச்சு!"

"ஆமாம்."

"ரைட் மேடம். இந்த லெட்டரைக் கொண்டுவந்து கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி. உங்களை ஊட்டிக்கு ரொம்ப அவசரமாகக் கூப்பிட்டா துணையோடு வர முடியுமா?"

"என் தோழிக்கு உதவணுமின்னா வரேன்."

"ரெடியா இருங்க. சொல்றேன்."

"ரைட் ஸார். ஆனா தயவு செய்து அவங்க அக்காவுக்கு செய்தி போக வேண்டாம்."

"நிச்சயம் போகாது."

"அவள் போனபிறகு சிங் வெகுநேரம் யோசித்து உட்கார்ந்திருந்தார் பிறகு "லிங்க்!" என்றார்.

லிங்க் உள்ளே ஓடினான்.

✧✦✧

# 8

“இந்தப் போட்டோவைப் பாருங்க! என்றான் லிங்க். ஓட்டல் சிப்பந்தி அதைப் பார்த்தார்.”

“பிறகு நினைவைத் தட்டினார். கையில் படத்தை இப்படியும் அப்படியும் வெளிச்சம் பிடித்தார்.”

“ஆமா நினைவு இருக்கு ஸார்” ரூம் முப்பத்து மூணுக்கு வந்திருந்தங்க! ஒரு அப்பாவும், பெண்ணும்.

“அப்பா இல்லை! பாட்டு டீச்சர்.”

சிப்பந்தி திகைத்தார்.

“தலையைக் குளோசாக வெட்டிக்கிட்டு. . . என்று இழுத்தார்.”

“இல்லை, பாகவதர் மாதிரி அடர்த்தியா இருக்கும்.”

“மீசை உண்டு இல்லே!”

“கிடையாது.”

“அப்போ அவர் இல்லை” என்றார் சிப்பந்தி.

லிங்க் யோசித்தான்.

அவன் அருகில் நளினாவும் அவள் அண்ணன் உமாகாந்த்தும் நின்றார்கள்.

அவர்களுக்கே அந்தப் பதில் திகைப்பாக இருந்தது.

சில கணங்கள்தான். லிங்க் யோசனையிலிருந்து உடனே மீண்டான்.

நளினாவின் கையிலிருந்த போட்டோவை வாங்கினான்.

''இந்தாங்க பெரியவரே'' இந்தப் பெண்தான் அன்னிக்கு வந்தது. அது நிச்சயம்தானே?"

"ஆமா ஸார்" நான்தான் ராத்திரி அந்த ரூமுக்கு சப்ளை செய்தது.

"இவளோட வந்த ஆண்பிள்ளைதான் நாங்க சொல்ற அடையாளத்திலே இல்லை சரிதானே!"

"ஆமா ஸார்."

"பரவாயில்லை" மறுநாள் காலையிலே நீங்கதான் காப்பி சப்ளை செய்தீங்களா?"

''இல்லை. அந்த ஆளே வந்து வாங்கிட்டுப் போயிட்டாரு.

"ஓகோ."

லிங்க் யோசித்தான்.

"சரி" அப்புறம் நீங்க எப்போ அந்த அறைக்குப் போனீங்க?"

"டிபன் வேணுமான்னு கேட்கப் போனேங்க. அப்போ கதவு பூட்டியிருந்திச்சு. காலையிலே சிலவங்க ஊட்டியிலே 'வாக்' போவாங்க. அப்புறம் வரலாம்னு திரும்பிட்டேன்.

"சரி"

"அப்புறம் ஒரு மணி நேரம் கழிச்சு சுமார் ஒன்பது ஒன்பதே காலுக்கு திரும்பிப் போனேன்."

"அவர் இருந்தாரா?"

"இருந்தார். அந்தப் பெண் இல்லை. டிபன் வேணுமான்னு கேட்டேன். இட்லி, வடை, காப்பி ஆர்டர் கொடுத்தார். நான் கதவைத் தாண்டிப் போயிருக்க மாட்டேன். சர்வர்ன்னு கூப்பிட்டார். திரும்பினேன். அவளுக்கும் வேணும். இன்னொரு செட் எல்லாமே கொண்டு வந்துடுங்கன்னு சொன்னார்" என்றார் அவர்.

ஓ! பெரிய ஆளா இருக்கான் என்றான் லிங்க். "அப்புறம் என்னாச்சு?"

"டிபன் கொடுத்துட்டு வந்துட்டேன். என் முறை முடிஞ்சு போச்சு. இனிமே வீட்டுக்குப் போயி சாப்பிட்டு நான் வரணும். கிளம்பிப் போயிட்டேன். அப்புறம் சாப்பிட்டு விட்டு திரும்ப ஓட்டலுக்கு வந்திட்டிருந்தேன். அந்த ஆசாமி மட்டுமே கையிலே பெட்டியைத் தூக்கிக்கிட்டு போய்ட்டிருந்தார். நாங்க நேருக்கு நேர் பார்த்துட்டோம். கிளம்பியாச்சு போல இருக்குன்னேன்."

ஆமான்னு சொல்லி பைக்குள்ளே கையைவிட்டு ஒரு ஐம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்தார். இனாம் எனக்கு! அவங்களை எங்கேன்னு கேட்டேன். முன்னாலே போயிட்டாங்கன்னு சொன்னார்.

நான் உத்தரவு வாங்கிக்கிட்டு வந்தேன். மனசிலே நெருடித்து, பொண்ணு முன்னாடி போறதாகச் சொல்றானே, இது நேர் ரோடுதானே! அவள் முன்னாடி போயிருந்தா கூட நம்ம எதிரே வந்திருக்கணுமேன்னு நினைச்சேன்.

ஒருவாட்டி ரோட்டைத் திரும்பிப் பார்த்திடுவோம். அவள் முன்னாடி போனா இங்கேருந்தே தெரியும்னு நினைச்சு, நான் திரும்பிப் பார்த்தேன்.

அதே நேரம் அவன் என்னைத் திரும்பிப் பார்த்தான். எனக்கு கஷ்டமா போச்சு.

லிங்க் குறுக்கிட்டான். "அந்தப் பெண் தெரிஞ்சாளா?"

"இல்லை ஸார். நேரே ஒரே ரோடுதான். அந்தக் கடைசி வரைக்கும் யாரும் தெரியலை.

"குட்! நல்லா கவனிச்சிருக்கீங்க. வேற ஏதாவது விஷயம் உண்டா?" "ஒரு சின்ன சமாச்சாரம் உண்டு."

"சொல்லுங்க."

"நான் எப்பவாவது பேப்பர் படிப்பேன். இரண்டு நாள் தாண்டி 'கோவை முரசு' படிச்சேன். அதிலே கோரம்பள்ளம் என்கிற இடத்துக்குப் பக்கத்திலே ஒரு பெண் பிரேதம் உருக்குலைஞ்சு கிடக்கிறதாகப் போட்டிருந்திச்சு! அது இந்தப் பெண்ணாக இருக்குமான்னு எனக்கு ஒரு ஊகம்."

லிங்க் குறுக்கிட்டான். "அப்போ அந்தப் பெண்ணை அவன் கொன்னுட்டான்னு தோணுதா?"

"வெறும் ஊகம்தான்."

**ஊ**ட்டி சீசன் முடிந்து கொண்டிருந்த நேரம் அது.

ஊட்டி காலியாகிக் கொண்டிருந்தது.

லிங்க் மேலும் ஒருநாள் ஏதாவது துப்பு கிடைக்குமா என்று அலைந்தான்.

பலரை சந்தித்து விசாரணை நடத்தினான்.

எதுவும் பெயரவில்லை.

இரண்டாம் நாள் ஊட்டி வரைபடம் வாங்கி வந்தான்.

கோரம்பள்ளம் எங்கே இருக்கிறது என்று குறித்து, அதன் மேல்மட்டங்களில் ஊட்டி மேல்பகுதி எங்கே இருக்கிறது என்பதைக் கவனித்தான்.

பிறகு கையில் பைனாகுலர்ஸை வைத்துக் கொண்டு சுற்ற ஆரம்பித்தான்.

மறுநாள் மலையை விட்டுக் கீழே இறங்கி கோரம் பள்ளம் போலீஸ் நிலையத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

அந்த நிலையத்தார் பிரேதத்தின் போட்டோவை எடுத்து வைத்திருந்தார்கள்.

அதிகம் உருக்குலைந்திருந்ததால் அதை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

நல்லவேளையாக சடலத்தோடு கிடந்த ஸாரியை எடுத்து வைத்திருந்தார்கள்.

அதைக் கொணர்ந்ததுதான் தாமதம்! நளினா அங்கேயே அழ ஆரம்பித்துவிட்டாள்.

"குட்" லிங்க்! இதுவரை செஞ்சதே அபூர்வம்! இப்போதான் உண்மையிலே சிக்கல் அதிகமாயிருக்கு! என்றார் சிங்.

"ஏதாவது புதுச் செய்தி கிடைச்சிருக்கா ஸார்!"

"முதல்லே அந்த வசந்த் வேலை செய்யற பாங்கிலே போய்ப் பார்த்தேன். அவன் வேலையை ராஜினாமா பண்ணிட்டுப் போயிட்டான்.

"ஐயோ! என்று நிமிர்ந்தான் லிங்க்." "உண்மையிலே ஸார் எனக்கு அவன் மேலே ரொம்ப சந்தேகம் ஸார்." அவனை அரெஸ்ட் பண்ணி இருந்தாக் கூடத் தேவலை! அந்தப் பெண்கிட்டே 'நீ என்னைக் கல்யாணம் பண்ணிக் காட்டி விடமாட்டேன்'னு கத்தினான். ஸார்!"

சிங் சட்டென்று ஒரு விசேடப் பார்வை அவன் மீது பதித்தார்.

"இந்தா லிங்க்! இந்த மிரட்டல் வார்த்தையை நீ என்கிட்டே சொல்லலையே!"

"சொல்லியிருப்பேன் ஸார்" நீங்க அதை விரும்ப மாட்டீங்கன்னு நினைச்சேன்."

"அப்படி ஒரு இம்ப்ரஷனை நான் உனக்குக் கொடுத்திருந்தேன்னா அது என் தப்புதான்!"

"சரியா ப்ளாக்மெயில் பண்ணினான் ஸார்."

சிங் எழுந்தார். வழக்கம்போல் யோசனையின் வெப்பத்தோடு உலாவ ஆரம்பித்தார்.

இரண்டு யுகமான நிமிடங்கள் சென்றன.

"லிங்க் ஒரு விஷயத்தைக் கவனிச்சியா?" ஊரை விட்டு மூணு செட் ஆளுங்க வெளியே போயிருக்காங்க!"

லிங்க் யோசித்தான்.

"இந்த மார்க்கபந்து நம்பர் ஒன்! நாகசாமியும் மதனாவும் நம்பர் டூ. வசந்தும் நித்யாவும் நம்பர் த்ரி!"

என்று அடுக்கினார் சிங்! பிறகு உலாத்திக்கொண்டே, "இந்த மூணு பேருக்கு மட்டும் கட்டிடம் இடிஞ்சு விழப்போற விஷயம் தெரிஞ்சிருக்கு, அதனாலேதான் போயிருக்காங்க!"

"எஸ் சார்! நம்ம விசாரணை சூடு பிடிச்சதும் அத்தனை பேரும் மறைஞ்சுட்டாங்க!"

சிங் பேசவில்லை.

"ஏன் சார் பாங்க்லே விசாரிச்சாங்களே! வசந்த் ஏன் வேலையை விட்டுட்டுப் போனான்?"

"அவன் நல்ல வசதியானவனாம், சமீபத்திலே அவன் அத்தை யாரோ இறந்ததிலே ஏராளமான சொத்து அவனுக்கு வந்திருக்காம். இனிமே ஏன் வேலைன்னு சொல்லி போயிட்டானாம்.

லிங்க் கண்ணை மூடித் திறந்தான். "ஸார்! அவ்வளவு வச்தி வந்தாச்சுன்னா அவன் ஏன் சாதாரண நடுத்தர வர்க்கத்து நித்யாவை மணக்க முயற்சி செய்யணும்."

"அவள் நல்ல அழகிதானே?"

"ஆமா ஸார்! அவனுக்கு இதைவிட நல்ல அழகி கிடைச்சுடுமே உயர் மட்டத்திலேர்ந்து!"

சிங் உலாவினார்.

இதிலே வேடிக்கை! இந்த மூணு செட் நபர்களுக்கும் ஒருத்தருக்கொருத்தர் எந்த முகாந்திரமும் கிடையாது. ஒரே தொடர்பு அந்தக் கட்டிடத்தோடு வந்திருக்கிற தொடர்புதான்.

"ஸார் வசந்த் எங்கே இருக்கார்னு கேட்டீங்களா?"

"கேட்டாச்சு! வீட்டு அட்ரஸ் சொன்னாங்க! அங்கிருந்து அவன் காலி பண்ணிட்டுப் போயாச்சு!"

"ஆ! ஸார்! ஸார்! நாம் அப்போதே வசந்த்தை அரெஸ்ட் செய்திருக்கணும்."

சிங் மென்மையாகச் சிரித்தார்.

"லிங்க் இப்படித்தான் எத்தனையோ சமயங்களிலே நடக்கும். கவலைப்படாதே! எங்கே ஓடிடப் போறாங்க? பிடிச்சுடலாம். இப்போ மார்க்கபந்து எதோ ஹைதராபாத் ஓட்டல்லே இருக்கிறதாகக் கேள்விப்பட்டோமில்லே, அதை உறுதிப்படுத்திக்கிட்டு அந்த ஊர் போலீசுக்கு போன் பண்ணு. அவனை அரெஸ்ட் பண்ணி கஸ்டடியிலே வைக்கச் சொல்லு!" என்றார்.

லிங்க் எழுந்தான். போன் அறைக்குச் சென்றான். பேச ஆரம்பித்தான். அரைமணி நேரம் கழித்து திரும்பி வந்தான்.

"சார்! மார்க்கபந்து ஒரு வாரமா ஹோட்டலுக்கு வரலையாம்! எங்கே போனான்னு தெரியாதாம்!" என்றான்.

இரவு ஏழு மணிக்கு அந்த ஆபீஸ் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

ஆபீசைச் சுற்றி சற்று பெரிதான காம்பவுண்ட்!

அதில் பாதி மங்கலாக விளக்குகள் எரிந்து கொண்டிருந்தாலும், ஒரு மூலையில் மட்டும் பிரகாச விளக்குகள் ஜொலித்துக் கொண்டிருந்தன.

சிங் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தார். இரவு ஒன்பது மணி இருக்கும்.

நகரின் சத்தங்கள் மெல்லிதாகிக் கொண்டிருந்தன.

பூசினால் போல் ஒரு குளிர் எங்கும் நிறைந்து இருந்தது.

சிங் ஒரு ஸ்டூலில் உட்கார்ந்திருந்தார்.

அவர் எதிரே அந்த மூலையில் ஏராளமான சப்புச் சவறுகள் குவிக்கப்பட்டிருந்தன.

இடிந்த கட்டிடத்தில் உறவினர்கள் எடுத்துக் கொண்டது போக மீதி உடைந்த, பிளந்த, உபயோகமற்ற சாமான்கள் அத்தனையும் அங்கே கிடந்தன.

அவற்றை ஏற்கனவே சிங் ஒரு முறை மேற்பூச்சாகப் பார்த்துவிட்டார்.

அப்படிச் செய்து சில வாரங்கள் ஓடி விட்டன.

இப்போது ஒரு தீவிரத்துடன் பார்க்க அங்கே உட்கார்ந்திருந்தார்.

இரண்டே இரண்டு போலீஸ் சிப்பந்திகளும், இரண்டு கூலி ஆட்களும் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

முதலில் வீட்டுச் சாமான்களாகத் தெரிந்தவை அனைத்தையும் அப்புறப்படுத்தச் சொல்லியிருந்தார் அவர்.

அப்படி எல்லாவற்றையும் தனியாக வைக்கச் சொல்லியிருந்தார்.

தெரியாத பொருள் ஏதாவது இருந்தால் அதைத் தம்மிடம் கேட்கச் சொல்லியிருந்தார் சிங்.

அந்த வேலைகள் நடந்து கொண்டிருந்தபோதே, சிங் பெரிய லிஸ்ட்களைக் கையில் வைத்துக் கொண்டு, அவற்றைக் கண்ணால் ஆய்ந்து கொண்டிருந்தார்.

மனத்தில் பெரிய கவலை வீசியது.

கேஸ் நல்ல சிக்கலாக இருந்தது.

அதற்கு உதவக்கூடிய நபர்கள் எல்லோருமே அந்த விபத்தில் இறந்து விட்டார்கள்.

லிஸ்டில்தான் அவர் கவனம் அடிக்கடி திரும்பியது.

மனசு பெரும்பாலும் அதில் இழுபடும்போது அவர் அதைவிட்டு விடுவது வழக்கம்!

மனசு ஏன் லிஸ்ட் மீது அலை பாய்கிறது?

ஒவ்வொரு கடிதத்தையும் அதன் ஆண், பெண் பெயர்களையும் அவரவர் வயது! என்னென்ன செய்து கொண்டிருந்தார்கள் ஆகிய எல்லா விவரங்களையுமே பார்த்துக் கொண்டிருந்தார்.

மனம் சுழிந்து எங்கெல்லாமோ வழிந்து கொண்டிருந்தது.

கடைசியில் இரண்டாவது தளத்தில் அந்த இரண்டாவது ப்ளாட்டில் லயித்தது.

அங்கே இரண்டு ஆண் நண்பர்கள் மட்டுமே வசித்து வந்தார்கள்.

நாற்பது வயது நாற்பத்தைந்து வயது!

'தொழில் ஆர்டிஸ்டுகள்' என்று போட்டிருந்தது.

அக்கம் பக்கம் விசாரித்ததில் அவர்கள்தான் ரொம்ப வசதியாக வாழ்ந்தவர்கள் என்று தெரிய வந்தது.

எரிந்து கிடந்த பர்னிச்சர், பீரோ இவைகளில் நிறைய எண்ணிக்கைகள் அவர்களது ப்ளாட்டின் பொருள்கள் என்று பலர் அடையாளம் காட்டினார்கள்.

ஃப்ரிட்ஜ் இருந்தது.

ஸோனி டி. வி. 29 அங்குல ஸ்க்ரீன் இருந்தது.

வாட்டர் ஹீட்டர்! வொயர்லெஸ் டெலிபோன் என்று பல நவீன நாகரிகங்கள் அந்த பிளாட்டில் இருந்தன.

தவிர, முழு பிளாட்டுமே ஏ. ஸி. செய்யப்பட்டிருந்தது என்றார்கள்.

சாமான் இடிபாடுகளில் நிறைய அவர்களுடையதாக இருந்தது!

அவர்களில் ஒருவர் பெயர் கணபதி. மற்றவர் பசுபதி!

இரு பதிகளுமே அன்யோன்யமாக இருந்தார்கள் என்று கூறினார்கள்.

குடும்பம் ஏன் இல்லை?

அதற்குப் பதில் யாருமே கொடுக்கவில்லை.

சரி, அப்போ பெண் விஷயம் உண்டா? அல்லது குடி உண்டா?

அந்த இரண்டில் எது இருந்தாலும், இரண்டுமே இருந்தாலும் அதை அவர்கள் வெளியில்தான் வைத்துக் கொண்டிருப்பார்கள்!

இங்கே பிளாட்டில் எதுவும் செய்ய மாட்டார்கள்!

வேலை செய்வது, சாப்பிடுவது. உறங்குவதோடு சரி!

சாப்பாட்டுக்கு வெளியே போய் ஓட்டலில் சாப்பிடுவார்கள்.

அல்லது யாராவது பையன் எடுப்புச் சாப்பாடு எடுத்து வருவான்.

மற்றவர்களிடம் பழகுவார்களா?

பழக்கம் எல்லாம் வெறும் ஹலோடு சரி!

மற்றவர்களுடன் பேசுவதற்கு நேரம் கிடையாது.

அவர்கள் உண்டு. அவர்கள் வேலை உண்டு.

"ஸார்! இதைப் பாருங்க!"

ஏதோ கனமான கட்டை போல இருந்தது.

சிங் வாங்கிப் பார்த்தார்.

3 அங்குலத்திற்கு 4 அங்குலம் நீண்ட சதுரக் கட்டை!

ஓரங்களில் சிறு ஆணி அடித்த குழிகள் ஒருவேளை ஏதாவது பிளக்குகளாக இருக்கலாம்.

"இங்கே இருக்கட்டும்! என்று சொல்லி தம் பக்கத்தில் அதைப் போட்டுக் கொண்டார்."

பிறகு மீண்டும் லிஸ்டில் கண்ணோட்டம் இட்டார்.

அந்தச் சின்னப் பெண் நினைவுக்கு வந்தாள்.

பாவம்!

இப்போது யார் பொறுப்பில் இருக்கிறாளோ?

ஸ்கூட்டர் வரும் சத்தம் திடீரென்று கேட்டது. லிங்க்தான் வந்து கொண்டிருந்தான்.

விசாரணைக்கு அவனை அனுப்பி இருந்தார்.

காம்பவுண்டு ஓரம் வாகனத்தை நிறுத்தி, சிங்கை நோக்கி சற்று அவசரமாக வந்தான்.

அருகில் காலடி வந்ததும் அவர் நிமிர்ந்தார்.

"குட் ஈவினிங் ஸார்!"

"உட்காரு லிங்க்"

சிப்பந்தி ஸ்டூலைக் கொண்டு போட அமர்ந்தான்.

"வா இப்படித் தள்ளி உட்காரலாம்!" என்று சிங் சொல்ல, இருவரும் தள்ளிப் போனார்கள்.

"ஸார்! நீங்க சொன்னதை விசாரிச்சுட்டேன்!"

"சரி!"

"வசந்துக்கும் அந்த கட்டிடத்துக்கும் எப்படி தொடர்பு வந்ததுன்னு கேட்டீங்க! நல்லவேளையாக பாங்க் ஊழியர் ஒருவரே அதே தெருவிலே இருந்தார். சொன்னார்."

சிங் நிமிர்ந்தார்.

"பாங்க்லே ஏதோ ஸாவனிர் போட்டாங்களாம். அதுக்கு வசந்த்தான் பொறுப்பா இருந்தானாம். வசந்த்துக்கு எப்போதுமே ஹை டேஸ்ட் உண்டாம்."

"நல்ல லே-அவுட் பண்ணி, பத்திரிகைங்க தீபாவளி மலர் போடற மாதிரி, ஸாவனிர் கொண்டுவர விரும்பினானாம். அதுக்காக அந்த கணபதி, பசுவதி கிட்டே வந்தானாம். அதிலேர்ந்து தொடர்பு ஆரம்பிச்சதாம்.

"ஓ! இப்போ புரியுது."

"ஸாவனிர் பிரசுரிக்கிற வேலைக்காக மூணு மாசம் அடிக்கடி வந்தானாம். அப்போதான் அந்த நித்யாவோட பழக்கம் ஏற்பட்டுதாம்!"

"ஓ" ரைட்!

"மார்க்கபந்துவும், நாகசாமியும் நண்பர்கள். ஒருத்தர் பிளாட்டுக்கு ஒருத்தர் போவார்களாம்."

"சரி".

"பொதுவா அந்த வீட்டிலே இருக்கிற எல்லா ஆண்பிள்ளைகளுமே நித்யாகிட்டே ஒரு வார்த்தை இரண்டு வார்த்தை பேசிட்டுப் போவார்களாம்."

"எல்லோருக்கும் அவள் மீது பிரியம் உண்டாம். காரணம் அவள் அழகினாலே!

"ரைட்!"

"அவளும் யார் பேசினாலும் சுபாவமாகப் பேசுவாளாம்! ஆனா தன் பழக்க வழக்கத்திலே ரொம்ப கரெக்டா இருப்பாளாம்! ஒரு குறை இருக்காதாம்."

"நல்ல காரெக்டர், இல்லையா?"

"ஆமாம் ஸார் ரொம்ப நல்லவளாம். யாரும் அவள்கிட்டே வரம்பு மீறிட முடியாதாம்."

சிங் விரல்களால் கண்ணை விழித்தார்.

"ஸார்! அந்த வசந்த் அவளை ப்ளாக்மெயில் பண்ணியிருக்கணும்."

"எதை வைத்து பண்ணியிருக்க முடியும்? அவள் எதுக்காகப் பயப்படணும்?"

லிங்க் கண்ணை விலக்கினான்.

"அங்கேதான் ஸார் எனக்கும் இடிக்குது."

"ஏன் லிங்க் அவளுக்கும், இந்த வெடிகுண்டு விபத்துக்கும் ஏதாவது தொடர்பு இருக்க முடியுமா?"

லிங்க் கண்ணைத் தாழ்த்தினான். "இருக்க முடியாது ஸார்."

"அவளையே விடு" வேறு யாருக்காவது தொடர்பு இருக்க முடியுமா? யாருக்கு அந்த அரக்க மனம் இருக்கும்? அத்தனை குடும்பத்தையும் கொல்கிற மாதிரி வெடி வச்சு. . .

"இதெல்லாம் பயங்கரவாதிகள் பண்ணுகிற வேலை!"

"அப்போ அதுக்குத் தொடர்பு உடைய ஆசாமி மார்க்கபந்துதான்."

சிப்பந்தி ஒருவர் வந்து இன்னொரு பொருளைக் கொடுத்தார்.

சின்னதாக இருந்தது.

உலோகம் போல இருந்தது. ஆனால் ஒரு காகிதத்தைப் போல கிழிந்து இருந்தது.

சின்னத் துண்டுதான் அது! அலுமினியமா, ஈயமா!

"இங்கே கிடக்கட்டும்" என்று பக்கத்தில் போட்டார் சிங்.

இப்போதுதான் அவருக்குச் சட்டென்று நினைவு வந்தது.

அந்த நீண்ட சதுரக் கட்டை இந்த உலோகத் தகடு இதெல்லாம் அச்சடிக்கிற ப்ளாக் சம்பந்தமாக இருக்க வேண்டும். இரண்டு பதிகளும் லே-அவுட் ஆர்டிஸ்டுகள் ஆயிற்றே. சில சின்ன ப்ரஸ்லே இன்றும் இந்த ப்ளாக் உபயோகப்படுது.

"மார்க்கபந்து என்று உச்சரித்தார் சிங்!" "அந்த ஆள் ஏன் இப்போ தலைமறைவாய் போகணும்."

"அவன் மட்டுமில்லை ஸார். இந்த நாகசாமி, வசந்த் எல்லோருமே ஏன் தலைமறைவாகணும்."

"அது நல்ல பாயிண்ட் லிங்க்."

சிங் முகவாயை வருடினார்.

சிப்பந்திகள் இன்னும் பல பொருட்களைக் கொண்டு வந்தார்கள்.

அவைகளையும் தம் அருகே வாங்கி வைத்துக் கொண்டார்.

அந்த பிரிக்கும் வேலை ஒரு மணி நேரம் எடுத்தது.

கடைசியில் அவர்கள் ஒரு நசுங்கிய குப்பைக் கூடையைக் கொண்டு கொடுத்தார்கள்.

உள்ளே பல காகிதங்கள் கசக்கப்பட்டு கிடந்தன. ஒன்றை எடுத்தார் சிங்!

திறந்து பார்த்தபோது, அது கணபதி, பசுபதியின் 'லெட்டர் ஹெட்'டாக இருந்தது.

"இது இங்கே இருக்கட்டும்" என்று வைத்துக் கொண்டார் சிங்!

அதற்கு மேல் சிங் யோசனையிலேயே இருந்தார்.

சிப்பந்திகள் அவ்வப்போது பொருள்களை கொண்டு காட்டிய வண்ணம் இருந்தார்கள்.

இரவு பதினோரு மணிக்கு வேலைகளை நிறுத்தினார்கள்.

சிங் பொறுக்கி வைத்த சாமான்களை சிப்பந்திகள் ஆபீசில் கொண்டு வைத்துவிட்டு விடைபெற்று போனார்கள்.

சிங்கும், லிங்க்கும் மெள்ள போனார்கள்.

"லிங்க்! இப்போ ஒன்று செய்யலாம்! இந்த வசந்த், நித்யா மேலே கவனம் செலுத்துவோம். அவங்க எங்கே போனாங்கன்னு கண்டுபிடிச்சா நம்ம கேசுக்கு வழி பிறக்குதான்னு பார்ப்போம்."

✧✦✧

# 9

மறுநாள் காலையில் சீக்கிரமே சிங் வந்ததும் முந்தைய இரவு எடுத்த பொருள்கள் ஒரு கூடை அளவு இருந்தன.

அவற்றை கீழே சிதற விட்டார் சிங்! இப்போது பகல் வெளிச்சத்தில் ஒவ்வொன்றாகப் பார்க்க ஆரம்பித்தார்.

குப்பை கூடைக் காகிதங்களைத்தான் முதலில் பார்த்தார்.

கசங்கிய காகிதங்கள்! ஒவ்வொன்றிலும் கணக்குகள் போடப்பட்டு இருந்தன. அவை வரவு செலவு கணக்குகள் என்று தோன்றின.

அவைகளை ஒதுக்கிவிடப் போன சிங், சட்டென்று திகைப்பு அடைந்தவராய் நிறுத்தினார்.

காகிதங்களை மீண்டும் திறந்து பார்த்தார்.

கணக்குகளை மீண்டும் பார்த்தார்.

எல்லாமே ஐந்து ஸ்தானங்களில் இருந்தன.

சில ஆறு ஸ்தானங்களுக்குமே போயிருந்தன.

பத்தாயிரங்களிலும், லட்சங்களிலுமாக கணக்கு.

வெறும் பாடப்புத்தகக் கணக்குகளா? அல்லது உண்மையான வரவு செலவுக் கணக்குகளா?

ஒரு கணம் சிங்கின் எண்ணம் சீறிப் பறந்தது.

ஒருவேளை இந்த இரண்டு பேர்களுக்கும் வரவு செலவுகள் இந்தத் தொகைகளில் இருக்குமா?

கணக்குகளின் கூட்டல் கழித்தல்களைக் கவனித்தார்.

நிச்சயம் தெரிந்து அவை கற்பனைக் கணக்குகள் அல்ல!

நிசமான கணக்குகள்தான். இல்லாவிட்டால் இத்தனை விதத் தொகைகள் வராது.

குபீர் என்று ரத்தம் அவர் தலைக்கு ஓடியது.

ஒவ்வொரு தொகைக்கு எதிராகவும் ஏதோ ஆங்கில எழுத்துக்கள் மிகப் பொடியாக எழுதப்பட்டிருந்தன.

அவைகளைக் கண்டுபிடித்தும் வெப்பமான மூச்சு சிங்குக்கு வந்தது.

இந்தத் தொகைக்குரியவர்கள் பற்றிய குறிப்பு எழுத்துக்கள்தான் அவை என்று தெரிந்தது.

அதெல்லாம் என்ன கொடுக்கல் வாங்கல்கள்? இவ்வளவு தொகையா பரிமாற்றம் நடக்கிறது?

வெறும் லே-அவுட் ஆர்டிஸ்டுகள்தானா இந்த கணபதி, பசுபதிகள்! அல்லது வேறு ஏதாவது ரகசிய வியாபாரம் செய்து கொண்டிருந்தார்களா?

நினைக்க நிகைக்க அவரது நரம்புகள் புடைத்தன.

இப்போது புரிந்தது. கணபதி, பசுபதிகள் ப்ளாட்டில் அத்தனை நவீன வசதிகளும் இருந்தது என்றால்,

அவர்கள் இப்படி சம்பாதிப்பவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

அப்படியானால். . .

அந்த வீட்டின் வெடிகுண்டு மர்மம் இங்கேதான் இருக்கிறதா?

அந்தக் கணமே ஏதோ தீர்வு கண்டது போல தோன்ற சிங் உடனே துள்ள வேண்டும் என்று நினைத்தார்.

ஆனால் அவர் ஒரு பழுத்த அனுபவசாலி! வெற்றிப் பழம் கையில் சிக்கென அகப்பட்டது என்று தெரிந்தால் தவிர,

எந்தவித உற்சாக உணர்வுகளுக்கும் அவர் இடம் கொடுக்க மாட்டார்.

இந்த இரண்டு பதிகளும் பணத்தை எப்படிக் கொடுத்தார்கள்?

போதைப் பொருள் ஏதாவது கடத்தல் செய்தார்களா?

அவர்கள் இருவரும் ஒதுங்கி இருந்தார்கள் என்பதே இந்த வியாபாரத்தைத்தானே குறிக்கிறது.

சிங் யோசித்தார்.

ஒருவேளை பணத்தை ஏராளமாக யாருக்காவது கொடுத்து,

அவர்கள் அதைத் திருப்பித் தர முடியாமல் இந்த பதிகள் இருக்கும் வீட்டுக்கு குண்டு வைத்தார்களோ!

அடப்பாவமே! கிடைத்த 32 சடலங்களில் இவர்கள் இருவர்களது சடலங்களும் இருந்தனவே! இப்படியா இவர்கள் இறக்க வேண்டும்.

சட்டென்று மறுயோசனை.

ஒருவேளை மார்க்கபந்துவாவது நாகசாமியாவது இவர்களிடம் கடன் வாங்கிவிட்டு வீட்டுக்கு வெடிகுண்டு வைத்தார்களோ?

அல்லது இளைஞன் வசந்தான் இதைச் செய்திருப் பானோ?

அடுத்த மற்ற காகிதங்களையும் எடுத்துப் பிரித்தார்.

'ஸாகர் ஓட்டல்.'

'பெங்களூர்.'

என்று ஒரு காகிதத்தில் எழுதியிருந்தது.

இன்னொரு காகிதத்தில் பிரதிமா கெஸ்ட் ஹவுஸ்.

ரேஸ் கோர்ஸ் ரோட்,

பெங்களூர்

என்று காட்டி இருந்தது.

எதற்காவது உதவும் என்று சிங் இந்தக் காகிதங்களை மடித்துப் பையில் போட்டுக் கொண்டார்.

கடைசியாக ஒரு காகிதம்! அதில் வசந்த் என்று போட்டு ஒரு போன் நம்பர் கொடுக்கப்பட்டிருந்தது.

96983475

குறித்துக் கொண்டார் சிங்!

எல்லாக் காகிதங்களையுமே ஒரு பையில் போட்டுக் கொண்டார்.

இதரப் பொருள்கள் கூடையில் அப்படியே இருந்தன.

இப்போது பார்க்க விருப்பமில்லை.

காகிதக் குறிப்புகளோடு போன் முன்னால் உட்கார்ந்தார்.

அந்த போன் நம்பர் அவர் கண்களை உறுத்தின.

ரிசீவரை எடுத்தார். டயலைச் சுழற்றினார்.

ஒரு கனத்த குரல் மறுமுனையில் கேட்டது.

"96983475"

"எஸ்."

"வசந்த் இருக்கிற இடம் தெரியணும்!"

"நீங்க யாரு?"

ஒரு கணம் திகைத்தார் சிங்.

மறுகணம், "குரல் தெரியலையா?" என்றார் இன்னும் கனத்த குரலில்.

"தெரியும்" வி. எஸ். கிரிதானே!

"குட்" என்றார் சிங். அதை உறுதி செய்வதுபோல!

"கொஞ்சம் ரகசியமா வச்சுக்கணும்."

"ஓ"

"வசந்த் இப்போ பெங்களூரிலே" அப்புறம் கிரி அந்த எண்பதினாயிரம் என்னாச்சி?"

டக்கென்று துண்டித்தார் சிங். அதற்கு மேல் பேசினால் ஆபத்து!

ஒரு பெரிய லாபம்! வசந்த் பெங்களூரில் இருக்கிறான் என்பது?

மணியை அடித்தார்.

சிப்பந்தி ஓடி வந்து சல்யூட் அடித்தார்.

"லிங்க் வந்ததாச்சா?"

"இன்னும் வரல்லை."

"நான் நேரே ஏர்போர்ட் போறேன். லிங்க்கை அங்கே வரச் சொல்லு."

சிங் தமது கைப்பெட்டியை எடுத்து விர் என்று கிளம்பினார்.

மேஜையில் ஏதோ சத்தம்.

அவர் கைப்பெட்டியை எடுத்த அவசரத்தில் மேஜை யிலிருந்து கண்ணாடிக் குமிழி அந்தக் கூடைக்குள் விழுந்தது.

ஒரு கணம் நின்றார் சிங்!

அவர் மூடநம்பிக்கைக்காரர் அல்ல!

எனினும் ஏதோ தடைப்பட்டதுபோல இருக்க, திரும்பி வந்து மேஜை முன்னால் உட்கார்ந்தார்.

சற்று களைப்பாறுவதுபோல் நாற்காலி முதுகில் சாய்ந்து கொண்டார்.

அவர் பார்வை தாமாக அந்தக் கூடை மீது சென்றது.

சட்டென்று ஒரு யோசனை.

குப்பைக் காகிதங்களை மட்டும் பார்த்தோம்.

இந்தப் பொருட்களையும் பார்த்துவிட வேண்டியது தானே!

ஏன் இவைகளை விட்டு வைக்க வேண்டும்?

பொறுமையாக ஒவ்வொன்றையும் பார்த்து அப்பால் வைத்தார்.

அவருக்குத் தேவைப்படாது என்று தோன்றியது.

எல்லாப் பொருள்களும் முடியும் நிலையில் அந்தப் பொருள் ஒன்றுதான் அவர் கையில் தங்கி நின்றது.

அலுமினியத் தகடா அல்லது ஈயத் தகடா?

மேஜை மீது அந்தத் துணுக்கைப் பரப்பி வைத்துப் பார்த்தார்.

வெறும் தகடு!

இதன் ஓரங்களில் இவை என்ன?

பூப்போட்டது போல இருக்கிறதே!

பூவா? அல்லது மந்திர எழுத்தா?

இது ஏதாவது மாந்திரிக சமாச்சாரமாக இருக்குமோ. . .

யோசித்துக் கொண்டே இருக்கும்போது பளீர் என்று மனத்தில் ஒரு மின்னல் எழுந்தது.

எதையோ அதிசயமாகக் கண்டவர் போல் அந்தத் தகட்டை மகிழ்ச்சியோடு எடுத்து பாக்கெட்டில் போட்டார்.

எழுந்தார்.

லிங்க் எதிரே தென்பட,

"ஸிங்க்! உடனே வா! பெங்களூர் போறோம்!" என்றார்.

# 10

பெங்களூர் 'எமாகல்' ஓட்டலில் இறங்கி இரண்டு நாளாகி விட்டது.

பிரதிமா கெஸ்ட் ஹவுசிலும், ஸாகர் ஓட்டலிலும் விசாரித்து விட்டார்.

வசந்த் தென்படவில்லை.

எமாகல் ஓட்டலில் உட்கார்ந்து கொண்டே மற்ற எல்லா ஓட்டல்களுக்கும் போன் அடித்துப் பார்த்தார்.

வசந்த் அகப்படவில்லை.

"லிங்க்" என்றார்.

"எஸ் ஸார்."

"இனிமே வேறே வழியில்லை ஒவ்வொரு இடமாத் தேட வேண்டியதுதான்!"

இருவரும் அன்று மாலை மெஜஸ்டிக் சர்க்கிளுக்குப் புறப்பட்டார்கள்.

5.45 சுமார்!

சாலைகள் நிரம்பி வழிந்தன.

சிங் கூட்டத்தில் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தார்.

அநேகமாகப் பலரும் அவரை விலகிப் போக வேண்டி வந்தது.

சிங் யாரையும் பொருட்படுத்தவில்லை.

அவர் கண்கள் அந்த ஜன வெள்ளத்தில் நீந்திச் சென்றன.

சினிமா போவோர், வருவோர், ஷாப்பிங் போவோர், வருவோர், உல்லாசம் தேடுவோர், அதற்கு அழைப்போர்.

இப்படியாக சகலவித நபர்களும் மெய் மறந்து அந்த வெள்ள அலையில் மிதந்து கொண்டிருக்க,

சிங் ஒவ்வொரு முகத்தையும் விடாது பார்த்தார்.

அவர் மனசில் பெரிய உறுதி இருந்தது.

ஆற்று மணலில் கடுகைத் தேடுவேன் என்று முனைந்தார்.

பிள்ளையார் கோயில் பக்கம் ஆரம்பித்தவர்கள்,

சுபேதார் சத்திரம் ரோட் திருப்பம் வரை வந்து விட்டார்கள்.

அப்போது சட்டென்று லிங்கின் கைகளைப் பிடித்து அமுக்கினார் சிங்.

லிங்க் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

சிங் ஜாடை காட்டினார்.

அவர் காட்டிய இடத்தில் லிங்க் பார்த்தவுடன் விசில் அடிக்காத குறை!

அவன் எத்தனையோ தடவை அந்த உருவத்தை மனத்தில் பதிய வைத்துக் கொண்டிருக்கிறான். அந்த ஆசாமி இங்கேயா இருக்கிறான்?

"மார்க்கபந்துதானே"

"ஆமாம் ஸார்."

"லிங்க் அவனைப் பின்தொடர்வோம்."

இருவரும் தொடர்ந்தார்கள்.

மார்க்கபந்துதான் குறிக்கோள்!

பந்து அங்குமிங்கும் நாசூக்காகப் பார்த்தவாறு சத்திரம் ரோட்டில் நடந்தான்.

சிங் ஒரு தூரத்திலும், அவருக்குப் பின் லிங்கும் பின்தொடர்ந்தார்கள்.

சேஷாத்திரி புறம் போனதும்,

மார்க்கபந்து இடதுபுறம் திரும்பினான்.

அடுத்து இரண்டு மூன்று சந்துகளைக் கடந்தான்.

கடைசியில் ஒரு பெரிய காம்பவுண்ட்.

அதில் தனித்தனி வீடுகள் ஐந்து இருந்தன.

அதில் ஒன்று நோக்கி மணி அடித்தான்.

கதவு திறக்கப்பட்டதும் உள்ளே நுழைந்தான்.

நன்றாக இருட்டி விட்டது. அங்கே நிழல்கள் அதிகமாக இருந்தன.

சிங் வாசலில் போய் கதவை அழுத்திப் பார்த்தார்.

உள்ளே பூட்டியிருந்தது. பிறகு அவர் பரபரத்தார்.

அந்த பெரிய மாளிகையைச் சுற்றி ஒருமுறை வலம் வந்தார்.

உள்ளே எல்லாம் இருட்டாக இருந்தது.

இரண்டாம் முறை சுற்றியபோது,

ஒரு அறை சட்டென்று பிரகாசமாகியது.

அறை சின்னதாக பளீர் என்று அடித்தது.

சிங் மெள்ள அதன் அருகில் வந்தார்.

உள்ளே சத்தம் கேட்டது.

“இந்தா மார்க்கபந்து” என்னை அவிழ்த்து விடு. என்கிட்டேயிருந்து நிறையப் பணம் வாங்கியாச்சு! இதுக்கு மேலும் எதிர்பார்க்காதே!”

சிங் சட்டென்று லிங்க்கை இழுத்து அந்த வார்த்தைகளைக் கேட்க வைத்தார்.

லிங்க் சிங்கின் காது அருகில் போய், “வசந்த்” என்றான்.

“ரைட். எனக்குத் தெரிஞ்சாச்சு!” என்றார் சிங்.

“பணம் தந்தே வாஸ்தவந்தான்! அப்புறம் என்னைக் கொல்லப் பார்த்தியே பிரதர்! அதற்கு என்ன சொல்றே?” என்றான் மார்க்கபந்து.

‘‘அது உங்களைக் கொல்றதுக்கு இல்லை! உங்களுக்குத் தெரியாதா?” என்றான்.

சிரித்தான் மார்க்கபந்து.

அந்தக் கணத்தில் தடால் என்று ஒரு சத்தம்.

அதைத் தொடர்ந்து பல ஓசைகள்.

சிங் சட்டென்று திரையை லேசாக விலக்கிப் பார்த்தார்.

உள்ளே இரண்டு பேரும் கைகலப்பில் ஈடுபட்டிருந்தார்கள்.

வசந்த் தன்னைச் சுற்றிய கயிற்றை மெள்ள மெள்ள அவிழ்ந்திருக்க வேண்டும்.

அந்தக் காரியத்தை மார்க்கபந்து வருவதற்குள்ளே முடிந்திருக்க வேண்டும்.

மார்க்கபந்துவிடம் இன்னும் அவன் (வசந்த்) கட்டுப்பட்டிருப்பது போலவே பேசியிருக்க வேண்டும்.

உள்ளே பலத்த கைகலப்பு!

தம்தம் என்று ஓசைகள் வந்த வண்ணம் இருந்தன.

வசந்தின் கைதான் ஓங்கி இருந்தது. பிரமாத இளைஞனாக திகழ்ந்தான். சீக்கிரத்தில் மார்க்கப்பந்துவை கீழே உருட்டி, ஆயாசப்படுத்தி விட்டான்.

பிறகு தாவிப் போய், தாம்புக் கயிற்றை எடுத்து வந்து, அவன் கைகால்களைக் கட்டினான். பிறகு வசந்த் வீராவேசமாக எழுந்து, "என் ரகசியம் தெரிஞ்சு என்னை ப்ளாக்மெயில் பண்ணினே இல்லே" உன்னை என்ன செய்யறேன்! என்று கறுவிக் கொண்டு கிளம்பினான்.

அவசரமாக அவன் வாசலுக்கு வருவது தெரிந்தது. பிறகு ஓட்டமும், நடையுமாக காம்பவுண்ட்டுக்கு வெளியே போனான்.

சிங்கும், லிங்கும் தொடர்ந்தார்கள்.

சாலைக்கு வந்ததும் அவன் ஒரு ஆட்டோவைக் கைகாட்டி ஏறினான்.

சிங்கும் உடனே ஆட்டோவில் ஏறி அவனைப் பின்பற்றினார்.

ஹோட்டல் ரஞ்சித் முன்னால் வாசலில் ஆட்டோ நின்றது.

அவன் இறங்கி உள்ளே போக, சிங்கும் லிங்கும் உள்ளே நுழைந்தார்கள்.

கவுண்டரில் தங்கள் அடையாளக் கார்டை காட்டி அவர்களது உதவி பெற்றார்கள்.

மேலே 733-ஆம் நம்பர் அறை!

அதை அடைந்தபோது, உள்ளே வசந்தின் குரல் சாவித் துவாரத்தில் நன்றாகக் கேட்டது.

"இந்தா நித்யா! இனிமேலும் பொறுக்க முடியாது. நீ என்னைத் திருமணம் செய்துக்கப் போறியா இல்லையா?"

அதற்குப் பதில் இல்லை. சிரிப்புதான் கேட்டது.

"சொல்லு, பண்ணிக்கப் போறியா இல்லையா?"

"பண்ணிக்க மாட்டேன்னா என்ன செய்வீங்க?"

"என்ன செய்வேனா? முந்தி மாதிரி தீமை செஞ்சுடுவேன்னு நினைக்காதே. இப்போ நான் துணிஞ்சாச்சு. நாளைக்கே விஷம் குடிச்சு செத்துடுவேன்."

மௌனம்.

"நீ அதனாலே தப்பிச்சுடலாம்னு நினைக்காதே."

"நீதான் அந்த வீட்டிலே வெடிகுண்டு வச்சே, எனக்கு உடந்தையா இருந்தேன்னு போலீசுக்கு லெட்டர் எழுதிட்டுத்தான் சாவேன்."

"அதனாலே நான் இறந்தா நிம்மதியா ஒரு நல்ல ஆளைத் தேடிப் பண்ணிக்கலாம்னு நினைக்காதே."

"போலீஸிலேயும், கோர்ட்லேயும் உன்பேர் சிரிச்சு ரிப்பேர் ஆயிடும்."

"உன்னை எவனும் கல்யாணம் பண்ணிக்க மாட்டான்."

மௌனம்.

"இந்தா பதில் சொல்லப் போறியா இல்லையா?"

"இந்தாங்க! போலீசுக்குச் சொல்லிடுவேன்னு பயமுறுத்தி பெங்களூருக்கு என்னை இழுத்துட்டு வந்தாச்சு."

"திருமணம் செஞ்சுக்கன்னு வற்புறுத்தறீங்க!"

"இஷ்டம் இல்லாதவளை ஏன் வற்புறுத்துறீங்க?"

"இஷ்டமில்லையா? அப்போ ஏன் என்னை லவ் பண்ணினே?"

"முதல்லே நல்லவன்னு நினைச்சுப் பண்ணினேன்."

"அப்புறம்?"

'ஆ' என்று குரல்! அது நித்யாவின் குரல்தான்.

சிங் உடனே கதவைத் தட்டினார். பலமாகத் தட்டினார்.

"யாரது?" என்று கோபமாகக் கேட்டு வசந்த் கதவைத் திறந்தான்.

லிங்கும், சிங்கும் உள்ளே போய் அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

நித்யாவுக்கு அவர்கள் போலீசார் என்று புரிந்துகொள்ள சற்று நேரம் ஆகியது.

சிங்குக்குத் தெரியும் நித்யா ஒருத்திக்குத்தான் கதை பூராவும் தெரியும் என்று.

"சொல்லம்மா! உனக்கு என்ன நேர்ந்திச்சு?" நித்யா ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஒன்னுமில்லை ஸார். அவரோடு கொஞ்ச நாள் பழகிட்டிந்தேன் ஸார். அப்புறம் விட்டுட்டேன் ஸார். என்னைத் திருமணம் செய்துகொள்ள வற்புறுத்தினார் ஸார்."

"ஏன் அவரை விடறே?"

"அது. . . அது. . . சில அபிப்பிராய பேதங்கள்."

"இப்போ உன்னைக் கொல்வேன்னு சொன்னாரே."

"காதல் வந்தாச்சுன்னா இதுபோல வார்த்தைங்க இளவயசுக்காரங்களுக்குச் சுலபமா வரும்."

"வசந்த்தைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?"

"அதிகமாகத் தெரியாது."

"அவன் சமீபத்தில் ஏதாவது தீய காரியம் செய்தானா?"

"எனக்குத் தெரியாது."

சிங்குக்கு புன்னகை வந்தது. உண்மையில் நித்யா ஒரு நல்ல பெண். இவ்வளவு கஷ்டம் வந்த போதிலும் அவள் வசந்த்தைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை.

"இந்தா நித்யா, எல்லாம் எங்களுக்குத் தெரிஞ்சாச்சு! அந்த கணபதியும், பசுபதியும் நூறு ரூபாய் நோட்டு கள்ளத்தனமா தயாரிச்சாங்க இல்லே?"

திடுக்கிட்டாள் அவள்.

"இதோ பாரு" என்று சிங் தமது பையிலிருந்து அந்த ஈயத் தகட்டுத் துண்டை எடுத்துக் காட்டினார்.

"வசந்த் இந்த ஆட்களோடு சேர்ந்தான். இவங்க நோட் அடிச்சுக் கொடுத்தாங்க.

வசந்த் அதை தனது பாங்க் மூலம் விநியோகம் பண்ணினான்.

அவள் கண்கள் பெரிதாகின.

"நிறைய கள்ள நோட்டு புழங்கறதுன்னு எங்களுக்கு ரிப்போர்ட் வந்தாச்சு! நாங்க அதன் காரணத்தைக் கண்டுபிடிச்சாச்சு! வசந்த்தான் காரணம். . ."

அவள் கண்கள் கலங்கின.

"அடிக்கடி வசந்த் அந்த பிளாட்டுக்கு வந்தபோது உனக்கும் அவனுக்கும் பழக்கம்."

"நீ முதல்லே காதலிச்சே! ஆனா பின்னாடி அவன் மேலே சந்தேகம் வந்துட்டுது."

"வசந்த் இருக்கானே, அவனும் அந்த பதிகளும் சேர்ந்து நோட் அடிக்கிற விஷயம் மார்க்கபந்துக்குத் தெரிஞ்சது."

நாகசாமிக்கும் தெரிஞ்சது.

இரண்டு பேரும் வசந்த்தை ப்ளாக்மெயில் பண்ணி பணம் வாங்கினாங்க."

வாங்கிட்டே இருந்தாங்க!

கொடுக்கலைன்னா பயமுறுத்தினாங்க!

சிங் இங்கே நிறுத்தினார். பிறகு நித்யாவைப் பார்த்து,

"இதுவரை என் ஊகம்."

"இதுக்கு மேலே சொல்லிவிடு அம்மா!"

அவள் விசித்தாள்.

"சொல்லு அம்மா!"

"இல்லாட்டியும் நாங்க கண்டுபிடிப்போம்!"

"ஆனா அதுக்கு இன்னும் கஷ்டப்படணும்!"

"இன்ஸ்பெக்டர்!"

"சொல்றேன் இன்ஸ்பெக்டர்."

"வசந்த்தை அவங்க ரெண்டு பேரும் ப்ளாக் மெயில் செஞ்சாங்க!

அவருக்கு பயம் வந்துட்டுது!

விஷயம் எப்படியாவது வெளியிலே போயிடும்னு பயம்!"

"ஒரு திட்டம் போட்டார்."

நாகசாமி, மார்க்கபந்து ரெண்டு பேரையும் அந்த பதிகள் வீட்டிலே சந்திக்கிற மாதிரி.

அவர்கள் சந்திக்கிற நேரத்திலே டைம்பாம் வச்சு இந்தக் கட்டிடத்தைத் தகர்த்துடறதாக! ஆனா ஜாடை மாடையாய் அவர் வீட்டிலே குண்டு வைக்கப் போறது எனக்குத் தெரிஞ்சு போச்சு!

என் தாயாரை அழைச்சுட்டு அத்தை வீட்டுக்குப் போகச் சொன்னார். அதிலேர்ந்து புரிஞ்சுக்கிட்டேன்! அப்புறம் அவர் பேச்சிலே 'டைனமைட்' என்கிற பேர் எதேச்சையாக கேட்டுது! அதுதான் வெடிமருந்துன்னு தெரிஞ்சு போச்சு! நான் அந்தக் கட்டிடத்துக்கு நேரக் கூடிய ஆபத்தைச் சொன்னேன்.

அவங்க அதிலேருந்து தப்பிச்சாங்க! அது மட்டுமில்லே நயவஞ்சகமாக பின்னும் வசந்தை 'ப்ளாக் மெயில்' பண்ண ஆரம்பிச்சாங்க. . .

இப்போ என்னை இவர் கல்யாணம் செய்து கொள்றது மூலம் ஒரு பெண்டாட்டி தன் கணவனுக்கு எதிரா எதுவும் சொல்ல மாட்டான்னு நினைக்கிறார். எனக்கு அதிலே இஷ்டமில்லை! இதுக்கு அவர் என்னை மிரட்டறார்.

"இன்னும் ஒரே ஒரு விஷயம் சொல்லம்மா. அந்த நாகசாமி இங்கே இருக்கானா?"

"இருக்காரு! அசோகா ஓட்டல்லே தங்கி இருக்காரு. பிடியுங்க! பொண்ணுகளை ஏமாத்தறவரு!"

"மதனாவைக் கொன்னுட்டாரு."

"பாவி கொன்னுட்டாரா?"

"ஆமாம் கொலைக்காகக் காதல் பண்ணி அவளை கொன்னுட்டாரு."

"என் விஷயத்திலேயும் அப்படித்தான் நடந்திருக்கும் இன்ஸ்பெக்டர். என்னை இவர் காதலிச்சது! திருமணம் செய்ய நினைக்கிறது எல்லாம் ஒரே ஒரு குறிக்கோளோடு தான்! என்னை எப்படியும் பின்னாலே கொன்னுடனும்னு நினைச்சிருப்பார்!"

சரியான கிராதகர்னு தெரியும்! பைத்தியக்காரத் தனமாக அகப்பட்டதனாலே அவருக்கு கொஞ்சம் பரிஞ்சு பேசிட்டேன்! அதை இப்போ மறந்துடுங்க இன்ஸ்பெக்டர்! இப்போ அவரைக் கைது செய்யுங்க! நான் சாட்சி சொல்றேன்!"

வராந்தாவில் கட்டி வைத்திருந்த வசந்த்தை பின்னர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள்.

(முற்றும்)

# கடைசி வரை காதல்

# கடைசி வரை காதல்!

## 1

காஷ்மீரில் கார்கில் பிரதேசம்.

காலை உதயசூரியன் எங்கோ ஒளிந்திருந்தது.

ஒரு மூடிய கூடாரத்தை திறந்து வெளியே இரு சிப்பாய்கள் வந்தார்கள்.

இருவரும் பனிப் பிரதேச கம்பளி யூனிபாரங்களை அணிந்திருந்தார்கள்.

கண்ணில் பாதுகாப்புக் கண்ணாடியை அணிந் திருந்தார்கள்.

காலில் பருமனான பூட்சுகளைத் தரித்து இருந்தார்கள்.

ஒரு பரந்த மலை பூமி அவர்களை வரவேற்றது.

அதில் சில குட்டை மரங்களும், புதர்களும், செடிகளும் வீசியிருந்தன.

இரண்டு சிப்பாய்களும் இளைஞர்கள்.

ஒருவன் நித்யன். மற்றொருவன் நிர்மல்.

இருவரும் இந்திய வேவு அணியைச் சேர்ந்தவர்கள்.

நித்யனுக்கு அன்றைக்கு மனம் சரியில்லை.

இடது கண்ணில் ஒரு அழுத்தம்.

அது நேர்ந்தால் அவனுக்கு ஏதாவது விபரீதம் நடக்கும்.

எத்தனையோ முறை பார்த்திருக்கிறான்.

கண் அழுத்தும் போது, அதை உடனே துடைத்து அதன் துர்ச்சகுணத்தைத் தடுக்க முயல்வான்.

என்ன செய்து கண் அழுத்தத்தை நிறுத்தினாலும், அதன் விபரீதம் நேரத்தான் செய்தது.

இன்றும் அப்படி ஏதாவது நடக்கும் என்று ஒரு கலக்கம் வந்தது.

அதை நிர்மலிடம் தெரிவித்தான்.

"எதுவும் நடக்காது! ஏன் கலங்கறே?"

நிர்மல் தைரியம் கூறினான்.

அதே நேரத்தில் நிர்மலுக்கு உள்ளூர பயம்.

அவனது சகாக்கள் மூன்று பேர் கடந்த ஒரு வாரத்தில் குண்டுக்கு இரையாகி இறந்து விட்டார்கள்.

அது அவனுக்கு ஒரு அமானுஷ்ய அச்சத்தைக் கொடுத்திருந்தது.

எனினும் பயத்தை அவன் வெளியில் காட்டவில்லை.

நித்யன் அவனை மறித்துச் சொன்னான் "நிர்மல் இது ஒரு முறையான சண்டையானா நிச்சயம் கவலைப்பட வேண்டாம். இது சண்டையும் இல்லை. சண்டையாகவும் இருக்கு. அதனாலே கஷ்டமா இருக்கு!" என்றான்.

குரலில் கவலை ஓடியது.

"நீ சொல்றது சரிதான்!" என்றான் நிர்மல்.

இருவரும் பைனாக்குலர்ஸை எடுத்து திசைகளில் பார்த்தார்கள்.

சரியான தூரங்களுக்கு அது ஒருவித தரிசை நில வெளிதான்.

எங்கே தீவிரவாதிகள் மறைந்து இருக்கிறார்களோ! எங்கே வெடிக் கண்ணிகள் ஒளிந்து இருக்கின்றனவோ! ஒவ்வொரு விநாடியும் அவர்களுக்கு 'பக்' 'பக்' தான்.

எனினும் படை முன்னேறுமுன் இந்த வேவு அணியினர்தான் முன்னால் போய்ப் பார்க்க வேண்டும்.

அவர்கள் ஜோடி ஜோடியாகவோ, உதிரிகளாகவோ வெவ்வேறு திசைகளில் முன்னேறிப் போவார்கள்.

எதிரிகள் எங்கே இருக்கிறார்கள். என்னென்ன தயாரிப்புகளுடன் தென்படுகிறார்கள் என்பனவற்றை ரகசியமாக அறிந்து, தலைமையகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

அவர்கள் கொடுக்கும் தகவலின் பேரில்தான் ராணுவ அதிகாரிகள் தரைப்படையை முன்னேற அனுமதிப்பார்கள்.

வேவு பார்த்தல் ஒரு ஆபத்தான தொழில்.

அடி அடியாக இருவரும் முன்னால் நடந்தார்கள்.

நூறு கஜம் போயிருக்க மாட்டார்கள். 'படீர்' 'படீர்' என்று பயங்கர சத்தங்கள் பூமியை உடைத்துக் கொண்டு கிளம்பின.

பக்கென்று அடைத்தது அவர்கள் மார்பு!

திரும்பிப் பார்த்தார்கள். அரை பர்லாங் தூரத்தில், மண்ணும், மணலும், புகையும், தீயுமாக ஒரு 'வீ' வடிவத்தில் எழுந்து ஆகாயத்தை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன.

மேலே ஆகாயம் அலை அலையாக ஒலியில் அதிர்ந்தது!

கீழே சத்தம் வீறிட்டுக் கொண்டு பாய்ந்து ஓடியது.

அந்த உக்கிரங்களும் அதிர்ச்சிகளும் ஓய்வதற்கு நிமிடங்கள் ஆகின.

இருவரும் வெறித்துப் பார்த்தார்கள்.

சுவாசம் இரைத்தது.

"யாரு இதிலே போனாங்களோ!" என்றான் நித்யன்.

வெடி வெடித்த திசைகளில் வேவுக்கு யார் போயிருப்பார்களோ?

நிர்மல் மனசு துடித்தது.

"இந்தா! கீழே பார்த்து நட! கண்ணி வச்சிருக்கப் போறாங்க!" என்றான் நித்யன்.

"அதான் நானும் சொல்றேன். ஆட்களும் மறைஞ்சு நின்னு சுடறாங்க. குண்டும் மறைஞ்சிருந்து வெடிக்குது."

"இது ஒரு யுத்தமா?" என்று சொல்லி நடந்தான் அவன்.

குண்டுகள் வெடித்த சில நிமிடங்களில் அந்தப் பகுதியை நோக்கி உதவியாட்களும், இதரர்களும் ஓடி வந்தார்கள்.

முதலில் வந்தவர்கள் உதவியாட்கள்!

யாராவது அடிபட்டார்களா என்று தேடினார்கள்.

இதோ என்று ஒருவர் கத்தினார்.

மற்றவர்கள் விரைந்தார்கள்.

ஒரு பள்ளத்தில் இரு சிப்பாய்கள் இறந்து கிடந்தார்கள்.

ஒருவரது கையும், காலும் போன இடம் தெரியவில்லை. முகம் மட்டும் தெளிவாக இருந்தது.

மற்றவரது முகம் கூட தெரியவில்லை. ஒரு மாமிசக் களறியாக இருந்தது.

இருவருக்கும் உடம்பெல்லாம் தீப்புகை பட்டிருந்தது.

அருகில் இருந்த சகாவின் கண்கள் பெரிதாகி இருந்தன.

அந்தக் கோரக் காட்சியின் பயங்கரம் அவனை உலுக்கி இருந்தது.

மூச்சு விடவில்லை.

எழுவதற்குத் திணறினான். முதல் உதவியாள் பள்ளத்தின் விளிம்பில் இறங்கினான்.

இறந்து கிடந்த சிப்பாயின் பைக்குள் கையை சொருகி அவனது அடையாளக் கார்டை எடுத்துப் பார்த்தான்.

'ராமமூர்த்தி' என்று பெயர் இருந்தது.

இரண்டாவது இறந்தவனின் அடையாள கார்டைப் பார்த்தான்.

'சேகர்' என்று தெரிந்தது.

அந்த உதவிச் சிப்பாயின் கண்கள் கலங்கின.

காலையில்தான் அவர்கள் எல்லோரும் ஒரு அட்டகாசமான டீயை குடித்திருந்தார்கள்.

வெளியில் புறப்பட்ட 30 நிமிடங்களுக்குள் இந்த இருவரும் உலக எல்லையை விட்டு ஓடிவிட்டார்கள். மரணத்திற்கு இப்படி ஒரு சுருக்கு வழியா?

சில நிமிடங்கள் பறக்க, ராணுவத்தினர் 'திமு' 'திமு' வென்று வந்து விட்டார்கள்.

லாரிகள் வந்தன.

டாங்க் ஒன்று மெல்ல ஊர்ந்து விசாரணைக்கு வந்தது.

ஆராய்ந்ததில் அது கண்ணி வெடி வெடித்து பூமியைப் பாளமாக்கி விட்டது என்று தெரிந்தது.

ஒரு நிம்மதி மூச்சு எல்லோரும் விட்டார்கள்.

அது இல்லையேல் அந்த இடத்தில் யுத்தம் மூண்டிருக்கும் என்று தெரியும்.

ரத்தக் களறியான யுத்தமாக மாறியிருக்கும். ஏனெனில் சிப்பாய்கள் யாராவது கொல்லப்பட்டால் இந்திய வீரர்களுக்கு ஒரு வெறி ஏறி விடும்!

அந்த மரணத்திற்குக் காரணமானவர்களை கண்டு பிடித்துக் கொன்று விட்டுத்தான் இரவில் கூடாரங் களுக்குத் திரும்புவார்கள்.

லாரி ஒன்று தற்காலிக ஆம்புலன்சாக மாறியிருந்தது.

அதில் இரு சடலங்களையும் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். களத்துக்கு வெகுதூரத்திலிருந்த பேஸ் காம்ப்பில் சலசலப்பு ஏற்பட்டது.

தினம் தினம் ஏதாவது சிப்பாய்கள் தீவிரவாதிகளால் கொல்லப்படுகிறார்கள்.

அவர்களுக்கு அது மிகவும் வேதனை அளித்தது.

இன்று அந்த வட்டாரத்தில் மேலும் வேதனை.

எல்லோரும் சடலங்களை விநயத்தோடு வந்து பார்த்தார்கள். அநேகருக்கு கண்ணில் நீர் வந்து விட்டது.

இறந்தது 'சேகர்!' என்று நிர்மலுக்குச் செய்தி கிடைத்தது.

சேகர், அவனது அத்யந்த நண்பன்.

அரைநிமிட நேரம் நிர்மலுக்கு திக் பிரமை அடித்தது.

மூச்சு விடவில்லை.

பிறகுதான் லேசான சுவாசம் இழைந்தது.

நின்றான்.

கூடாரம் தூரத்தில் தெரிந்தது.

அதைச் சுற்றி கூட்டங்கள் தெரிந்தன.

நிர்மல் அதை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

சண்டை நடக்கும்போது கூட அவ்வளவு வேகத்தில் ஓடியது கிடையாது.

சீக்கிரம் அந்த இடத்தை அடைந்தான்.

அவன் எதிர்பார்த்தபடி வாசல் நிழலில் கட்டில்களில் மாலை போட்டு இருவர் சடலங்களும் வைக்கப்பட்டிருந்தன.

முழுதும் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்தன.

அலங்கோலமாக ஓடிவரும் நிர்மலை இரண்டு நண்பர்கள் நிறுத்தினார்கள்.

"நில்லு! நில்லு! ஏன் இப்படி ஒரேயடியா அழறே?" என்று கூறினார்கள்.

பெரிதாக இழைந்தான் நிர்மல்.

கர்ச்சீப்பை எடுத்து முகத்தைத் துடைத்தான்.

உண்மையில் அவனுக்கு விம்மல்கள் எழுந்தன. யாரையாவது பிடித்து அழ வேண்டும்போல் தோன்றியது.

சத்தம் போட்டு அழ வேண்டும். சாதாரண அழுகையல்ல.

ஆனால் களத்தில் அதெல்லாம் செய்வது நாகரீகம் அல்ல.

துக்கத்தைக் கூட அமுக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

சேகர் போயிட்டானே! என்று புலம்பல்கள் எழுந்தன. மற்ற சிப்பாய்கள் ஆறுதல் சொன்னார்கள்.

அவனை அழைத்துக் கொண்டு கட்டில் அருகில் வந்தார்கள்.

அவன் மனநிலையை அவர்கள் புரிந்து கொண்டார்கள். அவனை விட்டால் எது வேண்டுமானாலும் செய்வான் என்று தோன்றியது.

கட்டிலைப் பார்த்ததும், நிர்மல் அரற்றிக் கொண்டு அவனை நோக்கி ஓடினான்.

மற்ற இருவர் பிடித்துக் கொண்டார்கள்.

அவனை மெதுவாக நடக்க வைத்து, கட்டிலின் அருகே கொண்டு போய் நிறுத்தினார்கள்.

கீழே உடனே மண்டியிட்டான் அவன்.

கால் பகுதியைப் பிடித்து தேம்பி அழுதான்.

பிறகு முகத்தைப் பார்க்கவேண்டும் என்றான்.

அருகில் நின்றிருந்த சிப்பாய், வேண்டாம் என்றார்.

“இல்லை பார்க்கணும்” என்றான்.

அப்போ ஒரே ஒரு நிபந்தனை. ஐந்தடி தள்ளி நில்லுங்க! என்றார் சிப்பாய்.

நின்றான் நிர்மல்.

துணியை விருட்டென்று திறந்து அதே வேகத்தில் மூடினார் சிப்பாய்.

ஒரு வீறல்தான் நிர்மலின் வாயிலிருந்து கிளம்பியது.

நண்பன் சேகரின் புன்னகை தோய்ந்த முகமோ அமைதி நிறைந்த கண்களோ அங்கே காணவில்லை.

அதற்குப் பதிலாக,

ரத்தக் களறியான மாமிசக் குழம்புதான் இருந்தது.

“சேகர்!” என்று கத்தினான்.

அதற்குள் ஆபீசர் வருகிறார் என்ற செய்தி பரவ அவனது வாயை யாரோ மூடினார்கள்.

நண்பர்கள் அவனைத் தாங்காமல் அந்த இடத்திலிருந்து அப்புறம் போகத் தொடங்கினார்கள்.

பத்தடி போவதற்குள் எதிரே அதிகாரி வந்து விட்டார். அவர் நேராக நிர்மலைப் பார்த்தார்.

இரு சிப்பாய்களும் விரைப்பாக நின்று சல்யூட் அடித்தார்கள்.

அங்கே, நின்றிருந்த நிர்மலைப் பார்த்து, திடுக்கிட்ட அதிகாரி,

"இவர்தானே இறந்தார்னு சொன்னாங்க! அது பொய்ச் செய்திதானா? என்று கேட்டார்."

சிப்பாய்க்கு விஷயம் புரிந்து விட்டது.

ஏனெனில் நிர்மலுக்கும், இறந்து போன சேகருக்கும், அப்படி ஒரு முக ஒற்றுமை. சாதாரண ஒற்றுமை அல்ல. ஆச்சரியப்படும்படியான ஒற்றுமை!

அதனால்தான் அதிகாரி அவனை சேகர் என்று நினைத்து விட்டார்.

"இல்லை. இவர் வேறு! என்று சொல்லி நிர்மலை அப்பால் அழைத்துப் போனார்.

மற்றொரு சிப்பாய் தமது அதிகாரிக்கு நிலைமையை விளக்கினார்.

✠✠✠

# 2

இராமநாதபுரத்தில் அவன் இறங்கிய போது மாலை நேரமாகி விட்டது. எங்கும் சூரிய வெளிச்சம் குறைய ஆரம்பித்தது. அங்கிருந்து தாயங்குளம் கிராமத்துக்கு அவன் செல்ல வேண்டும்.

அதுதான் இறந்துபோன சேகரின் குடும்பம் இருக்கும் ஊர்.

ஏற்கனவே, சேகரும் நிர்மலும் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

அவர்களில் யாராவது ஒருவர் இறந்து விட்டால், மற்றவர் அவர்களின் ஊருக்குச் சென்று குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறவேண்டும்.

இப்படி உறுதி எடுத்திருந்தார்கள்.

"இதிலே இன்னொரு விஷயமும் அடங்கியிருக்கு நிர்மல்!" என்று கூறியிருந்தான் சேகர்.

"என்ன?" என்று நிர்மல் கேட்டான்.

"இப்போ நான் போயிட்டேன்னு வச்சுக்க. நீ எனக்குப் பதிலா என் வீட்டிலே போய் சொல்றேன்னு வச்சுக்கோ. உண்மையிலே உன்னைக் கண்டா அவங்களுக்கு ஆறுதல் வரும்." என்றான் சேகர்.

"எப்படி?" என்றான் நிர்மல்.

"இரண்டு பேரும் ஒன்றா இருக்கிறதினாலேயா?" என்றான் நிர்மல்.

"ஆமாம்! நிச்சயமா ஒரு சமயம் பார்த்தா நானேதான் உயிரோடு வந்தட்டதாக நினைப்பாங்க!" என்றான் சேகர்.

"நீ சாகமாட்டே, நான்தான் செத்தா சாவேன். எனக்கு கவலையில்லை. நான் வெறும் ஒற்றைக் கட்டைதான்! திருமணம் ஆகாதவன்!" என்றான் நிர்மல்.

இந்த உரையாடல்கள் முழுவதும் அவனுக்கு நினைவுக்கு வர நிர்மலின் கண்களில் நீர் துளித்தது.

**தா**யங்குளத்திற்கு போவதற்கு என்ன வாகனம் இருக்கிறது என்று சோதித்தபோது ஒற்றைக் காளை வண்டி கிடைத்தது.

"கடவுளே இன்னும் இந்த வண்டிதானா இங்கே?" என்று நினைத்தான் நிர்மல்.

"வண்டிக்காரன் அவன் முன்னால் பவ்யமாக நின்றான்.

"வாங்க ஐயா போவலாம்."

நிர்மல் வண்டியில் தன்னை அமர்த்திக் கொண்டான்.

நகர எல்லையை விட்டு பொட்டலான பாதையில் தனியாக வண்டி சென்றது.

காலை வானம் மெல்லிய தங்கத் தகடாகிக் கொண்டிருந்தது. லேசான காற்று வண்டிக் கூரைகளின் மீது முணுமுணுத்தது.

காளை தனது கழுத்து மணியின் ஓட்டத்துக்கு ஏற்ப தாளம் பிசகாமல் நடைபோட்டுச் சென்றது.

நிர்மலின் மனம் குறுகுறுத்தது.

வண்டிக்காரனைப் பார்த்தான். சுற்றிவரப் பார்த்தான்.

வண்டிக்காரன் இதற்குள் திரும்பினான்.

"ஐயா!" என்றான். . .

என்ன என்பதுபோல் நிர்மல் கண்ணைத் தூக்கினான்.

நீங்க நம்மூர் சண்முகம் மவன்தானே?

நிர்மல் பேசவில்லை.

சின்னப் புன்னகை உதட்டில் ஒட்டியது.

"சேகர்னு உங்களைக் கூப்பிடுவாங்க இல்லே?"

நிர்மலின் புன்னகை பெரிதாகியது.

"பட்டாளத்திலே சேர்ந்தீங்க இல்லே?" மீண்டும் புன்னகை. நிர்மலின் முகத்தில்.

"அஞ்சாறு வருஷம் ஆயிருக்குமே! தீப்பாஞ்ச அம்மன் கொடை நடக்கும் போது ஊரைவிட்டுப் போனீங்க. இல்லே!" என்றான் வண்டிக்காரன் தொடர்ந்து.

அவன் சொல்வதை வெறுமனே ரசிப்பது போல் லேசாகத் தலை ஆட்டினான் நிர்மல்.

வண்டிக்காரன் பிறகு முகத்தைத் திருப்பி வண்டி ஓட்ட ஆரம்பித்தான்.

வண்டி கிணு கிணு என்ற மணிச் சத்தத்தில் ஓடியது.

பாதை நெளிந்து வளைந்து சென்றது.

ஆ... முதல் சகுனமே நன்றாக இருக்கிறதே. அவனை சேகர் என்று வண்டிக்காரனே நினைத்து விட்டானே!

அவன் மனம் குதூகலித்தது.

நல்லவேளை வண்டிக்காரன் எக்கச்சக்கமாக கேள்வி எதுவும் கேட்கவில்லை.

அது ஒரு விஷயம்.

இரண்டாவது, கேள்விகளுக்கு நிர்மல் இப்போது வெறும் புன்னகை அல்லது தலை ஆட்டத்தில் பதில் தெரிவித்தது போல் தெரிவித்தால் அது பெரிய வெற்றி.

நிர்மல், பிரமாதமடா! என்று அவன் மனம் அவனுக்கு தைரியம் கொடுத்தது.

**வ**ண்டி மெல்ல ஓடியது.

வண்டியின் ஆட்டத்தை சகித்துக் கொண்டு நிர்மல் அந்தப் பகுதிகளை விநோதமாகப் பார்த்தான்.

எல்லாம் புஞ்சை வெளியாக இருந்தது.

வண்டிக்காரனின் பேச்சு அவனை மென்மையாகக் கலக்கின.

நினைவுகள் மெல்ல அவிழ ஆரம்பித்தன.

வண்டியின் வைக்கோல் மெத்தையில் கடத்தி இருந்த தனது பெட்டியை எடுத்தான்.

அதன் முகப்பைத் திருப்பி மெல்லத் திறந்தான்.

உள்ளே ஒரு பை இருந்தது.

அதற்குள் கை செலுத்தி ஒரு பெரிய கவரை வெளியே மென்மையாக எடுத்தான். கண் கொஞ்சம் இன்பமாகச் சொருகியது. சுவாசம் ஒரு முறை நிறைந்து வெளிவந்தது.

கவரின் மேலே உள்ள எழுத்துக்களைப் படித்தான்.

பாமா என்று எழுதியிருந்தது.

அந்த வார்த்தை மனசில் ஜாலம் செய்தது.

சத்தமில்லாமல் 'பாமா' என்று உச்சரித்தான்.

உச்சரிப்பில் கூட ஒரு சிலிர்ப்பு ஓடியது.

பின்னர் தனது வலது இரு விரல்களை கவருக்குள் மெல்லச் செலுத்தினான்.

அந்த போட்டோவை நலுங்காமல் வெளியே எடுத்தான்.

எத்தனை ஜாக்கிரதையை அதில் கையாண்டான். புஷ்பத்தை எடுப்பதுபோல்!

கடைசியில் போட்டோவைத் தன் பார்வைக்குத் திருப்பினான்.

ஒரு மின்னல் அவனுக்குள் பாய்ந்தது. கண்கள் பனித்து விட்டன. என்ன அழகு அவள்! சேகரின் மனைவி. அப்சரஸ்தான்! முகம் ஒரு மென்மை நிலவு! கண்கள்தான் என்ன கூர்மை! மனசில் கொக்கி போட்டு இழுக்கிறதே!

பாமா!

எத்தனை காலம் உன்னைக் காதலித்துக் கொண்டிருக்கிறேன். தெரியுமா? இரண்டு வருடங்களுக்கு முன் உன் படத்தை சேகர் காட்டியதிலிருந்து உன்னைக் காதலிக்கிறேன்.

முதல் பார்வையிலேயே உன்மீது மோகமாகி விட்டேன்.

அன்றிலிருந்து உன் அடிமை நான்!

இனி என் மனத்தை மாற்றவே முடியாது.

உன்னை மானசீகமாக வழிபட்டு வருகிறேன்.

ஆமாம் தெய்வத்தைப் போலவே உன்னை அர்ச்சிக்கிறேன்.

உன் படம் ஒன்று என்னிடம் இருக்க வேண்டும் என்று என்ன செய்தேன் தெரியுமா பாமா?

உன் கணவரிடம், டேய் சேகர்! உன் படம் ஒன்று, என்கூட எப்போதும் இருக்கணும் என்று சொன்னேன்.

அவன் வெகுளி! திருமணத்திற்கு எடுத்த தம்பதி போட்டோவை அப்படியே கொடுத்து விட்டான். அதில் உன் படத்தை மட்டும் கத்தரித்து எடுத்து விட்டேன்.

நினைவுகள் சரம் சரமாக அவிழ,

வண்டி ஒரு மேட்டில் ஏறியது.

இருட்டு ஒன்று கிழக்கோர மூலையில் முணுமுணு வென்று கிளம்பியது.

"இன்னும் ஊர் வரல்லையா?" என்றான்.

வண்டிக்காரர் திரும்பினார். 26258

"இப்பத்தானே பாதி தூரம் வந்திருக்கோம்!" என்றான்.

மனசு பக்கென்றது.

இன்னும் ஒரு மணி நேரம் பயணமா?

மணியைப் பார்த்தான். ஏழு பதினைந்து, போய்ச்சேர எட்டேகால் ஆகிவிடும். பாமா படித்துக் கொண்டிருப் பாளா? தூங்குவாளா?

அவள் வீட்டில் போய்க் கதவைத் தட்டினால். . .

அவள் விளக்கைப் போடுவாள். கதவைத் திறப்பாள். என்னைப் பார்த்தால் அசப்பில் சேகர் மாதிரி இருக்கும்.

திடுக்கிட்டுப் போய் விடுவாள்.

உணர்ச்சிப் பெருக்கில் என்னையே அவள் கணவன் என்று நினைத்துக் கட்டிக் கொண்டாலும் கட்டிக்கொள்வாள்.

சேகர் இறந்த செய்தி தந்தியாக வந்திருக்குமே!

அப்படியானால். . .

இங்கே நிர்மலின் நினைவு அறுபட்டது. மேலே என்ன நடக்கும் என்று யோசிக்க முடியவில்லை. ஆனாலும் மனசு அவனுக்காக இன்பமாகவே நினைக்க ஆரம்பித்தது. ஒரு சொர்க்கத்தையே அவன் மனம் தேடியது.

✠✠✠

# 3

**வ**ண்டி போய் ஊர்த் தெருவில் திரும்பியது. நீளமான பழைய தெரு. மின் விளக்குகள் சில பூஞ்சையாக எரிந்தன. வெளிச்சத்தைக் காட்டிலும் இருட்டைத்தான் அதிகமாகக் காட்டின.

"இந்தாப்பா! வண்டியை நிறுத்திக்க!" என்றான் நிர்மல்.

வண்டி நின்றது.

"வீட்டிலே கொண்டு விடறேனே ஐயா!" என்றார் வண்டிக்காரன்.

வண்டிக்காரன் வீடு வரை வருவதை நிர்மல் விரும்பவில்லை.

பாமா அவனை எப்படி வரவேற்கப் போகிறாளோ?

சரியாகவும் இருக்கும். அல்லது. . .

அதையெல்லாம் வண்டிக்காரன் ஏன் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்.

"இல்லைப்பா வண்டிக்காரரே! பக்கம்தானே! நான் நடந்தே போயிடுவேன்!" என்றான்.

வண்டியிலிருந்து இறங்கினான்.

தோளில் கைப்பையைத் தொங்கவிட்டுக் கொண்டு, கையில் பெரிய பெட்டியை தூக்கிக் கொண்டு, நடக்க ஆரம்பித்தான்.

"வாங்க சேகர் ஸார்!" என்று குரல் கேட்டது.

திரும்பினான்.

ஊர்க் கோவில் பூசாரி நின்று கொண்டிருந்தார் உயரமானவர். விளக்குக் கம்பத்து அடியில் அவன் வண்டியிலிருந்து இறங்குவதைப் பார்த்துவிட்டார். ஒரு கணம் ஏதோ மறுப்புச் சொல்ல மனம் ஓடியது.

மறுகணம் அந்த உணர்வை அமுக்கிக் கொண்டு. . . வணக்கம்! என்றான்.

"ரொம்ப காலம் ஆச்சே போயி. ஊரை மறந்துடலாமா? வடக்கே நிலைமை எப்படி இருக்கு?" என்றார்.

"அப்படியேதான் இருக்கு!" என்றான். அதைச் சொல்லும்போதே குரலைக் கண்டுபிடித்து விடுவாரே என்று பயம்.

அவர் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

"காலம் கலிகாலம்ப்பா! எல்லாம் மாறிட்டு வருது! இந்த ஊரிலே இட நெருக்கடி வந்து பார்த்திருக்கியா? காலம் காலமா அப்படியேதான் இருந்திச்சு. இப்ப பாரு புது ஆளுங்க வந்தாச்சு. . . பஞ்சாயத்து வந்து, உங்க வீட்டு நம்பரைக் கூட மாற்றியாச்சு!"

"அப்படியா?"

"புது நம்பர் 82."

அவன் மேலே நடந்தான். சில அடிகள் மெல்ல நடந்தான். மனம் திக் திக் என்று அடித்துக் கொண்டது.

அவன் செய்வது சரியா? என்று மனம் கேட்டது. மூச்சே சமயத்தில் இழைத்தது. நடந்தான்.

ஒரு பெரியவர் எதிரே மெல்ல நடந்து வந்தார்.

எழுபதுக்கு மேல் இருக்கும்.

அவனைப் பார்த்து, யாரு? என்று ஆவலுடன் கேட்டு நின்றார்.

உரிமையுடன் அவர் அழைப்பதைப் பார்த்தால் ஊருக்கு ஒரு முக்கியஸ்தர் என்று நிர்மல் நினைத்தான்.

அவருக்கு பதில் சொல்லாமல் போகக் கூடாது.

என்ன சொல்வது?

அதுதானே கஷ்டம். யோசித்தான். கடைசியில், . . . என்னைத் தெரியலையா? என்றான் பொதுப்படையாக.

பெரியவர் கண்களை இடுக்கிக் கொண்டு அவனைப் பார்த்தார்.

இருட்டும் அவரைச் சதி செய்தது. அவனுக்கு அது நிம்மதி. எனினும் ஏதாவது சொல்ல வேண்டுமே. . .

''ஆறு வருஷத்துக்கு முன்னாடி இங்கேதானே இருந்தேன்.'' என்றான்.

''அப்படியா?''

''மறந்துட்டீங்களா?''

''புதுசுப் புதுசா ஊருக்கு ஆளுங்க இப்போ வந்திருக்காங்க.

''அப்படியா?''

''உனக்குத் தெரியாதா? ஊர்லே புதுசா ஒரு சிமெண்ட் பாக்டரி வந்திருக்கு.''

''ஆ!'' என்றான் பொதுப்படையாக தெரிந்த மாதிரியும், தெரியாத மாதிரியும் இருக்கட்டும் என்று!

"அங்கே வேலை செய்யப் புதுசுப் புதுசா ஆளுங்க வராங்களா! ஊர்லே இப்போ இடத்துக்குக் கிராக்கி!"

"அப்படித்தானே ஆகும்!"

"இதிலே ஆளுங்களை ஞாபகம் வச்சுக்க முடியற தில்லை. நீ யாரப்பா?"

"நான் வந்து. . . குரல் தெரியுதா பாருங்கோ!"

"சுத்தமா தெரியலை!" காது கொஞ்சம் மந்தமாயிடுத்து.

அந்தச் செய்தியும் அவனுக்கு மகிழ்ச்சி கொடுத்தது.

"நான் மிலிடிரியிலே சேர்ந்துட்டேன். . ."

"பேரு?"

"சேகர். . .

"அடடே. . . சண்முகம் மகனா?"

"ஆமாம்."

"என்னப்பா? குரலே மாறிப்போச்சு. என்னை தாத்தான்னு அழைப்பியே! மறந்துட்டியா! எப்படி மறந்தே?"

அவன் பதில் சொல்லவில்லை.

உள்ளே சிறு கலக்கம் எழுந்தது. கடவுளே ஊரிலே ஆள் மாறாட்டத்தை கண்டுபிடிச்சுடுவாங்களா? எத்தனை பேரை சந்திக்க வேண்டுமோ? என்னென்ன கேட்பாங்களோ?

"யப்பா தம்பி!"

"என்ன தாத்தா?"

"அவங்க காலி பண்ணிட்டுப் போயிட்டாங்க போல இருக்கே!"

"அப்படியா?"

"உனக்குத் தெரியாதா?"

"தெரியாது."

"எதுக்கும் விசாரிச்சுப் பாரு! எனக்கு இப்போ புத்தி மழுங்கிட்டு வருது.

நடந்தான்.

வீட்டைப் பார்த்துக்கொண்டே!

ஒவ்வொரு வீடாக நம்பர் பார்க்கும் போது மனது அடித்தது. எப்படி சேகர் என்று சொல்லிக்கொள்ள முடியும்.

எப்படியும் எங்கேயாவது சிக்கிக் கொண்டால். . .

ராணுவத்தில் அவர்களைப் பார்ப்பவர்கள் எல்லாம், . . நீங்கள் என்ன, ரெட்டையர்களா? என்று கேட்பார்களே!

சில அம்சங்களில் மட்டும் ஒற்றுமை இருந்ததை வைத்துக் கேட்டிருப்பார்களோ?

உண்மையில் மற்றவர்கள் கண்களுக்கு அதிக வித்தியாசங்கள் தெரியுமோ? நல்லவேளை வண்டிக்காரர் கவனிக்கவில்லை. பொழுது விடிந்தால் மற்றவர்கள் கண்டுபிடித்து விடுவார்களோ?

மின்சார ரூபத்தில் ஒரே ஒரு நவீனம் மட்டும் அவைகளை வெளிச்சமாக்கி வெளியாருக்குக் காட்டிக் கொண்டிருந்தது.

எனினும் நல்ல இருட்டு.

கிராமம் அடங்கிவிட்டது.

சில வீடுகள் மட்டும் உசும்பி இருந்தன. மற்றவை பூட்டிக் கொண்டு உள்ளே அடங்கிவிட்டன.

எழுபதிலிருந்து வீடுகளை ஒவ்வொன்றாக எண்ண ஆரம்பித்தான்.

75 தாண்டியது. 76, 77. . . . . . 80, 81 வந்தது.

82. . . வாசலில் நின்றான். திடுக்கிட்டான். வீடு பூட்டிக் கிடந்தது. சத்தத்தைக் கேட்டு அடுத்த வீட்டுக்காரர் வருவது தெரிந்தது.

"ஸார்! இந்த வீட்டுக்காரங்க? . . . என்று சொல்லி நிறுத்தினான் அவன்.

"அடடே! 82-ம் நம்பரா?" என்றார் அவர்.

நிர்மல் வாய் அடைத்து இருந்தான்.

"அவங்க எல்லாம் போயி ரெண்டு மூணு வருஷங்களாச்சே! என்று இழுத்தார் அவர்.

"எங்கே போயிட்டாங்க?"

"தெரியாதுங்களே! பக்கத்திலே கேட்டுப் பார்க்கலாங்க! நான் புதுசு!"

அடுத்த வீட்டை நோக்கிப் போனான்.

"ஐயா!" என்று அதன் இருட்டை நோக்கி ஒரு கூவல் கூவினான்.

கிராமத்துப் புழக்கடை வரை கூட அந்தச் சத்தம் கேட்டிருக்கும்.

ஒரு முப்பது வயது நபர் வெளி விளக்குப் போட்டுக் கதவைத் திறந்து வந்தார்.

"யாரு? ன்ன வேணும்?" என்று கேட்க.

"அந்த நபரும் மேலே துண்டு போட்டிருந்தார்."

நிர்மலை உறுத்துப் பார்த்தார்.

பரிச்சயம் அடைந்ததாகத் தெரியவில்லை.

பிறகு "அவங்களெல்லாம் போயி மூணு வருஷம் ஆச்சுங்களே!" என்றார் நிறைய யோசனையோடு.

அவன் பேசவில்லை.

"அடடா! உங்களுக்கு விஷயம் தெரியாது போல இருக்கு" என்று அங்கலாய்த்தார் அவர்.

"கள்ளியூர் போறதாச் சொன்னாங்க! என்றார் பனியன்காரர் தொடர்ந்து.

"ஓ!" என்றான் அவன்.

"ஆமாங்க. 80 மைல் தாண்டி! பஸ் கிடைக்கும். உடனே போங்க!"

பஸ் ஸ்டாண்டுக்கு வழி கூறினார்.

✠✠✠

# 4

அந்த பழைய நீண்ட கடிதம் டாக்டர் காந்தன் முன்னால் கிடந்தது. காந்தன் ஒரு மனநோய் டாக்டர். கொஞ்சம் பெயர் எடுத்தவர்.

அந்தக் கடிதம் எப்படி திடீரென்று திரும்பக் கிடைத்தது?

அலமாரியில் எத்தனையோ கட்டுகள்.

அதில் ஏதோ ஒரு கட்டு வேண்டி வந்தது. அதை எடுத்து மேஜை மேலே போட, இந்த கடிதமும் வந்துவிட்டது.

அதைப் பார்த்ததுமே அவர் மனசு அடித்துக் கொண்டது.

உண்மையில் மனதில் ஒரு வலியே ஏற்பட்டது.

ஏழு ஆண்டுகளுக்கு முன் வந்த கடிதம். யாரோ ஒருவன் தன் மனத்தை வெளிக்காட்டி இருந்தான். அது இப்போது திடீரென்று தோன்றியதே ஆச்சரியம். அதை எடுத்தார். படிக்க ஆரம்பித்தார். கடிதம் ஒரு ரயில் பிரயாணத்தில் தொடங்கியது.

அந்த பாசஞ்சர் ரயிலில் அந்த ஸ்டைல் இளைஞன் மிக நாசுக்காக தன் தலையை அடிக்கடி சீர்படுத்திக் கொண்டிருந்தான்.

தனது ஒவ்வொரு அசைப்பிலும் ஸ்டைல் காட்டினான்.

அதுவும் மாலை மங்கி இரவு வந்தது.

எதிரே பெஞ்சில் ஒரு பெண்மணியும் இரண்டு இளைசுகளும்.

'பதின்' வயது இளசுகள். இருவரும் சுடிதார் அணிந்து தமது புஷ்டியான உடம்புகளைக் காண்பித்துக் கொண்டிருந்தன.

புசு புசு என்றுதான் கையும் காலும்! பச்சை மேனி! வெள்ளியாக நிறம்! முகத்தில் குறுகுறுத்த லட்சணம்!

இரு இளசுகளையும், அடிக்கடி நாசுக்காக ஸ்டைல் இளைஞன் பார்த்தான்.

ஒவ்வொரு முறைக்கும் ஒவ்வொரு டிகிரி சூடு ஏறியது.

அடிக்கடி பெருமூச்சு வந்தது.

மனசை பிரளயக் கலக்கம் செய்தனர் அந்த இரண்டு இளசுகள்.

"நீங்க எங்கே போறீங்க? என்று அந்தப் பெண்மணி அந்த இளசுகளைப் பார்த்துக் கேட்டாள்.

அந்தக் கணத்தில்தான் அந்த ஸ்டைல் இளைஞனுக்கு, பெண்மணிக்கும் அந்த இளசுகளுக்கும் சம்பந்தம் கிடையாது என்று தெரிந்தது.

இளசு சொன்ன பதில் அவன் காதில் விழவில்லை.

ஏதோ பரீட்சை எழுதிவிட்டுப் போவதாகக் கூறியது மட்டும் தெரிந்தது.

இளைஞனுக்கு அவர்களைப் பற்றிய செய்திகள் அனைத்தும் சேர்ந்து ஒரு பெரிய புயலை உண்டு பண்ணியிருந்தன.

ஒரு பெண்ணைப் பார்ப்பான்.

பிறகு அடுத்தப் பெண்ணைப் பார்ப்பான். அவன் எந்தப் பெண்ணை எங்கே பார்க்கிறானோ அந்த இடத்திலேயே கண்கள் நின்று விடும். சன்னல் வழியே வெளியே பார்த்தான். பார்வைதான் வெளியே போயிருக்குமே தவிர மனப்பார்வையில் அந்தப் பெண்களின் மீது வந்துவிடும்.

மனசில் தத்தளித்துப் போவான்.

இந்த நிலையில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரப் பிரயாணத்தில் அவன் மனம் தீப்பிழம்பாக மாறிவிட்டது.

அந்தப் பெண்களின் சாதாரண அசைவுகள் கூட அவன் மனத்தைப் புயலாக்கிக் கொண்டிருந்தன.

என்ன காரணமோ தெரியவில்லை. அன்று ரயில் தாமதமாகப் போய் கொண்டிருந்தது.

அது மட்டுமல்ல. வழக்கமான கூட்டமும் இல்லை.

அவன் இருந்த கம்பார்ட்மெண்டில் மொத்தம் பத்து பேர்தான் இருந்தார்கள்.

அதுவும் அவனது அடைப்புக்குள் அந்த ஒரு பெண் மணியும், இரு சிறுசுகளையும் தவிர அவன் ஒருத்தன்தான்.

ரயில் நின்றதும் அந்தப் பெண்மணி இறங்கிப் போனாள். மற்றவர்களும் கம்பார்ட்மெண்டிலிருந்து இறங்கி விட்டார்கள்.

இரு இளசுகளும் இப்போது தனியானார்கள். இப்பொழுதுதான் அவனது அந்தரங்கம் கடகடவென்று வேலை செய்ய ஆரம்பித்தன.

அவன் உடம்பு அவன் வசமில்லை. ஏதோ ஒரு பூகம்பம் ஒன்று அதைத் தனியான ஒரு செயலுக்கு இழுத்துக் கொண்டிருந்தது.

திடீரென்று வண்டி நின்றது.

"ரயில் நின்னு போச்சுங்க!" என்று கூறினான் அந்த இளைஞன்.

அப்போது இரவு ஒன்பது மணி இருக்கும்.

ரயில் 'பந்தலூர்' என்ற ஒரு வழிப்போக்கு அனாதை ஸ்டேஷனில் நின்றது. ஸ்டேஷனே தெரியவில்லை. அத்தனையும் இருட்டுக்குள் மூழ்கியிருந்தது. இங்கே ரயில் நின்றதும் அவனுக்கு அது சாதகம் போல் தோன்றியது. சிறிது நேரம் காத்திருந்தான். எதிரே வரும் ரயிலுக்காக இந்த ரயில் காத்திருக்கிறது என்று நினைத்தான்.

ஆனால் எந்த ரயிலும் வருவதாக இல்லை. பின் ஏன் நிற்கிறது? எழுந்தான். கம்பார்ட்மெண்டின் நெடுக நடந்தான்.

வெளியே எட்டிப் பார்த்தான். அவனைப் போல் பலபேர் கீழே இறங்கியிருந்தார்கள்.

அவனும் இறங்கினான்.

வினவியபோது முன்னால் போன ரயில் விபத்துக்குள்ளாகி நடுவழியில் நிற்கிறது என்று தெரிய வந்தது.

இப்போதைக்கு அந்த இடத்தைவிட்டு அவர்கள் ரயில் கிளம்புவதற்கு இல்லை.

அது ஒரு பாஞ்சர் வண்டி. அன்று அதிகப் பிரயாணிகளும் இல்லை. மங்கலான வெளிச்சத்துடன் ரயில் அந்த நிலையத்தில் தவம் கிடக்க ஆரம்பித்தது.

இளைஞன் திரும்பி வந்தான்.

அந்த இரண்டு இளசுகளையும் பார்த்து "வண்டி இங்கேதான் நிற்கப் போகுது. இனிமே போகாது!" என்றான்.

திடுக்கிட்டு அவர்கள் இருவரும் ஜன்னல் வழியாகப் பார்த்தார்கள்.

"என்ன விஷயம்?"

"இதுக்கு முன்னாலே போன ரயில் விபத்துலே மாட்டிக்கிட்டு இருக்கு."

"இப்ப என்ன செய்யறது?"

"கொஞ்சம் இருங்க. நான் பார்த்துச் சொல்றேன்."

பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்ச்சி.

பேசும்போது அவர்கள் கண்களை நேரில் பார்க்க முடிந்தது.

திரும்பவும் கீழே இறங்கினான். பிளாட்பாரத்தில் உலாவினான். சிலர் பைகளோடு இறங்கிப் போவது தெரிந்தது. மரத்தடியில் நின்று யோசித்தான்.

ஒருமுறை அல்ல. பலமுறை அதற்கு அனுசரணையாக அவனுள் எழுந்திருந்த அந்த நெருப்பு இப்போது எரிமலையாக மாறி இருந்தது.

வண்டியை நோக்கி திரும்பி வரும்போது அவன் பழைய இளைஞனாக இல்லை. அவனுக்குள் ஒரு தீர்மானம் வந்திருந்தது.

அவர்களைப் பார்த்து, "ரயில் இனிமேல் போகாது. பக்கத்திலே ரோட் இருக்கு. பஸ்லே போகலாம்" என்று கூறினான்.

பதிலுக்கு காத்திராமல் தன் சாமான்களை எடுத்துக் கொள்ள ஆரம்பித்தான்.

"பஸ் கிடைக்குமா?" என்று கேட்டாள் ஒரு பெண்.

"நிறையப் போகுது!" என்றான் அவன்.

"எல்லோரும் போறாங்களா?"

"போறாங்க பாருங்க!"

அவர்கள் சீக்கிரம் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அவனோடு பஸ் ஏறுவது என்று தீர்மானித்தார்கள்.

தங்களது பைகளை எடுத்துக் கொண்டு வண்டியை விட்டு இறங்கினார்கள்.

பல பிரயாணிகள் அப்போது இறங்கிப் போவது தெரிந்தது. அவர்களைப் பார்த்ததில் இரு பெண்களுக்கும் சற்று தைரியம் வந்தது.

"சரி, போகலாம்! என்று கூறினார்கள்.

மத்தவங்களுக்கு முன்னாடி நாம்ப குறுக்கே போயிடலாம். இல்லாட்டி பஸ்ஸிலே இடம் கிடைக்காது! என்று கூறினான் அவன்.

"ஓகே!"

பிறகு அவர்கள், பிளாட்பாரத்தின் முனை வழியாக வெளியே வந்தார்கள்.

இருட்டு மையமாக இருந்தது.

எதுவும் தெரியவில்லை.

"இவ்வளவு மோசமாக இருக்கே" என்றாள் ஒரு பெண்.

"பரவாயில்லை! அந்த மேட்டைத் தாண்டிட்டா ரோடுதான்! என்று கூறினான் அவன். மேடு தெரியவில்லை.

மேடு தெரியவில்லை என்று சொல்லவும் கூச்சம்.

அவன் முன்னால் போக, அவர்கள் பின்னால் சென்றார்கள்.

அந்தப் பகுதி முழுவதும் மரங்களும் செடிகளும் நிறைந்த ஒரு புதர்ப் பிரதேசம். சில நிமிடங்கள் நடந்திருப்பார்கள்.

அதற்குள் அந்தப் பெண்கள் தாம் வந்த இடத்தை திரும்பிப் பார்த்தார்கள்.

ஸ்டேஷன் அவர்களுக்குத் தெரியவில்லை. ரோடும் தெரியவில்லை.

"எங்கே ரோடு?" என்று பதட்டத்துடன் கேட்டாள் ஒருத்தி.

"இதோ வந்திடும்!" என்று கூறினான் அவன்.

அந்தப் பெண் விடவில்லை.

''எங்கே சொல்லுங்க? சொல்லுங்க?'' என்று கத்தினாள்.

"இதோ! என்று சொல்லிக் கொண்டு அவர்களை மரத்தடியில் அழைத்துச் சென்றான்.

அங்கே சென்றதுதான் தாமதம், சட்டென்று இருவரது கைகளையும் பிடித்துக் கொண்டான்.

"ஐயோ!" என்று கூவினாள் ஒருத்தி!

"கத்தாதே!" என்று இரைந்தான் அவன்.

அவள் மீண்டும் 'ஐயோ' என்று கூவ, கையை சட்டென்று ஓங்கி ஒரு அடி அவள் முதுகில் வைத்தான்.

சுருண்டு விட்டாள் அவள்.

பிறகு அவளை மீண்டும் பார்த்துக் கொண்டான்.

"இந்தப் பாருங்க. யாராவது கத்தினீங்கன்னா கொன்னுடுவேன்!" என்றான்.

சுற்று முற்றும் பார்த்தான்.

அவர்களை கீழே அமுக்கி உட்கார வைத்தான். அவனும் உட்கார்ந்து கொண்டு ஒரு பெண்ணை பிடித்துக் கொண்டான். "உன் பெயர் என்ன?" என்றான்.

பெயர் சொன்னாள்.

"உன் பேரென்ன?" அடுத்தப் பெண்ணைக் கேட்டான்.

அவளும் சொன்னாள்.

அவள் தயங்கி, "ஐயா உங்களைக் கெஞ்சி கேட்டுக்கிறேன். . ." என்று சொல்ல ஆரம்பித்தாள்.

கையை எடுத்துப் பிடரியில் ஓங்கி அடித்தான்.

மற்றவளையும் ஒரு அடி.

அவளைக் கலக்கியிருக்க வேண்டும்.

அவன் ஆசை முடிந்து எழுந்து கண்ணைத் திறந்து பார்க்கும்போது வித்யா காணாமல் போயிருப்பது தெரிந்தது.

எல்லா இடங்களிலும் ஓடித் தேடிப் பார்த்தான்.

எந்த திசையில் ஓடினாள்? எங்கே ஒளிந்து கொண்டாள்? உன்மத்தமாகத் திரிந்தான். சுற்றிச் சுற்றி அலைந்தான்.

கடைசியில் காணாமல் போன பழைய இடத்திற்கே வந்தான். கீழே அவள் படுத்திருந்த அதே நிலையில் கிடந்தாள்.

ஏன் எழுந்திருக்கவில்லை?

கீழே குனிந்து பார்த்தபோது கண்கள் திறந்தவை அப்படியே இருந்தன. திடுக்கிட்டான்.

"இந்தா! இந்தா!" என்று உலுப்பி எழுப்பிப் பார்த்தான். அசையவில்லை மூச்சு இருக்கிறதா என்று பார்த்தான். புரிந்து விட்டது. அவள் இறந்து விட்டாள்.

அந்தக் கணத்தில் அவன் மனம் இருட்டாகியது.

சிறிது சிறிதாக சுயநிலை வந்தது. அவனது வெறித்தன்மை மறைந்து இப்பொழுது மனதிற்குள் மனிதத் தன்மை மெதுவாக எழ ஆரம்பித்தது.

"நானா கொன்றேன்? நான்தான் கொன்றேனா?" என்று கேட்டுக் கொண்டான்.

அந்தப் பெண்ணையே பார்த்திருந்தான். பயம் வந்தது.

இனி இங்கே இருப்பது தவறு என்று தோன்றியது. சட்டென்று எழுந்து ஓட ஆரம்பித்தான்.

இந்த நடந்த கதை எழுதப்பட்ட கடிதம் முழுவதையும் டாக்டர் காந்தன் படித்துக் காட்டினார்.

அருகிலிருந்த சுந்தரேசன் அவர் வாசிப்பதை கவனித்துக் கொண்டு இருந்தார்.

"பார்த்தீங்களா? சிலவங்க பிறவியிலேயே அதிக காமத்தோடு பிறந்திடறாங்க. சமூகத்திலே யாரையாவது பாழடிச்சுடுவாங்க!" என்றார் டாக்டர் காந்தன்.

சுந்தரேசன் பேசவில்லை.

பிறகு டாக்டர் அந்த நீண்ட கடிதத்தின் பின்குறிப்பை வாசிக்க ஆரம்பித்தார்.

டாக்டர் அவர்களுக்கு,

"வணக்கம், தயவு செய்து மேலே குறிப்பிட்ட எனது சொந்தக் கதையை வெளியே விட்டு விடாதீர்கள். அது என்னைப் பாதிக்கும். நான் உங்களுக்கு இந்தக் கடிதம் எழுதியதன் நோக்கம் நான் இந்தக் கொலையை வேண்டும் என்றே செய்யவில்லை என தெரிவிக்கத்தான். வெறியால் நடந்து விட்டது. எனக்கு அந்த நேரத்தில் மூளை வேலை செய்யவில்லை. உடம்பின் வேகத்திற்கு ஆட்பட்டிருந்தேன். என்னையும் மீறித்தான் அந்தக்

கொலை நடந்திருக்கிறது. எனவே இதைத் தாங்கள் புரிந்து கொள்வீர்கள் என்பதற்காக எழுதுகிறேன். தயவு செய்து இந்தக் கடிதத்தைத் தாங்கள் வெளிப்படுத்திவிட வேண்டாம். ஆனால் ஒரு வேளை நான் அகப்பட நேர்ந்தால் என் மனநிலையைத் தாங்கள் மட்டுமல்ல, அந்த நிலையில் யாருமே அப்படித்தான் செய்திருப்பார்கள். இதை விளக்கிக் கூறினால் நன்றியுடையவனாக இருப்பேன். ஆனால் தயவு செய்து இந்தக் கடிதத்தை இப்போதே போலீசில் ஒப்படைத்துவிட வேண்டாம். தர்மசங்கடமான ஒரு வேலையைத்தான் கொடுக்கிறேன். இருந்தாலும் நான் ஒரு நோயாளி. மன நோயாளி என்கிற நிலையில் இருந்து கொண்டு தங்களுக்கு இதை எழுதுகிறேன். இந்த நோயாளியின் அந்தரங்கத்தை தாங்கள் நிச்சயம் பாதுகாக்க வேண்டும். அது தங்களுடைய கோட்பாடாக இருக்கும். எனவே தயவு செய்து என்னை காட்டிக் கொடுக்காமல் இக்கடிதத்தைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களை பூரணமாக நம்புகிறேன்.

வணக்கம்.

பல காரணத்திற்காக நான் என் பெயரையோ, விலாசத்தையோ கொடுக்கவில்லை. அதைத் தாங்கள் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம்."

டாக்டர் காந்தன் இந்தக் குறிப்பைத் திரும்பவும் படித்தார்.

மனத்துள் நினைவுகள் ஓடின.

ஏழு வருடங்களுக்கு முன், கொலையான ஒரு வாரத்திற்குள்ளே இந்த லெட்டர் வந்தாச்சு!

இதைப் போலீசிலே சொல்லவில்லை.

சொல்லியிருக்க வேண்டாமா? மனமே அவரைக் கேட்டது.

டாக்டர் காந்தன் கீழே குனிந்தார்.

இது ஒரு தர்மசங்கடமான கேள்வி! நான் சொல்லியிருந்திருக்கலாம். சொல்லாமல் இருந்தாலும் தப்புமில்லை. ஆனால், இந்த விஷயத்திலே எனக்கு விலாசம் தெரியாத கடிதம் வந்திருக்கு. ஆள் கையெழுத்தும் போடவில்லை. இது உண்மைக் கடிதமாகவும் இருக்கலாம்.

கேஸ் இன்னும் கண்டு பிடிக்கப்படவே இல்லை.

அதுவும் அவருக்குத் தெரியும்.

ஆனால் இன்று ஏனோ அந்தக் கடிதம் அவர் மனத்தில் கல்லாகக் கனத்தது.

வாழ்வில் ஒரு டாக்டருக்கு எத்தனை தர்மசங் கடங்கள் என்று திரும்பவும் நினைத்தார்.

✠✠✠

# 5

சேகர் கள்ளியூருக்கு போய்ச் சேரும்போது மறுநாள் மாலை ஆயிற்று.

போகும் வழியில் நினைவுகள் பூத்துக் கொண்டு வந்தன.

கள்ளியூர் பஸ் ஸ்டாண்டுக்கு ஒரு ஆட்டோ எடுத்துக் கொண்டான். ஏறி அமர்ந்து குளிர் கண்ணாடி போட்டுக் கொண்டான்.

தெருக்களெல்லாம் இன்னும் பழைய ரீதியில் இருந்தன. ஜனக் கூட்டம்தான் அதிகமாகிவிட்டது. ஆட்டோ ஹாரன் சத்தத்தோடு ஓடியது. இன்னமும் நினைவைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பாமாவின் பக்கந்தான் ஓடியது.

எப்படியாவது அவளை அடைந்துவிட்டால்!

எப்படி அடைவது? ஏன் கணவன் இறந்த நிலையில் என்னைக் கண்டதும் என் மீது ஆசைப்பட்டு என்னுடன் வந்து விட்டால்!

நான் ஏன் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது? அவளுக்கு நான் வாழ்க்கை கொடுக்க வேண்டியதுதானே?

யார் கண்டார்கள்? ஒருவேளை அடிக்கடி நான் அவள் வீட்டுக்குச் சென்றால் என் மீது காதல் கொள்வாளோ என்னவோ?

என்ன இருந்தாலும் அவளுக்கு ஒரு புருஷன் வேண்டுமென்று ஆசை இராதா? அதற்கு நான்தானே எந்த விதத்திலும் தகுதி படைத்தவன்.

இருபது நிமிஷத்தில் ஆட்டோ அந்த வீட்டின் முன் அவனைக்கொண்டு வந்து விட்டது.

அது ஒரு வெறிச்சான தெரு.

வீடுகள் பதினைந்து, பதினாறுகளே இருக்கும்.

வாசல்புறம் ஒழுங்கில்லாத தோட்டம். எல்லா வீட்டிலும் முருங்கை மரம்.

நிர்மல் வீட்டை விசாரித்து அறிந்தான். அதன் வேலிக் கதவை திறந்து உள்ளே போனான்.

உடம்பில் ஒரே பதட்டம். மூச்சு இழைத்தது. உள்ளே இருட்டாக இருந்தது "ஸார்! ஸார்!" இரண்டு முறை கூப்பிட்டான். குரலே எடுபடவில்லை.

பதில் இல்லை.

நின்றபடியே இருந்தான். கால் ஆடின. யாரும் இல்லையா? அப்பொழுது பளிச்சென்று விளக்குகள் எரிய ஆரம்பித்தன. அது ஒரு மின்சாரத் தடங்கல் என்று தெரிந்தது. இப்போது அது நிவர்த்தியாகி வெளிச்சம் வந்துவிட்டது.

பிரமிப்புடன் பார்க்க, இரண்டு கட்டு தாண்டி ஒரு பெண் உருவம் வருவது தெரிந்தது.

பார்த்தவுடன் மனம் அள்ளிக் கொண்டது.

அந்த எழில் உருவம் அவள்தான்! அவளேதான். பாமா! அவன் அர்ச்சனை செய்த பாமா!

ஒவ்வொரு அடிகளாக முன் வைத்து அவனை ஆர்வக் கண்களோடு பார்த்தவாறு வந்து கொண்டிருந்தாள்.

ஐந்தடி வைத்திருக்க மாட்டாள். பிறகு ஒரே தாவு தாவிக் கொண்டு அவனை நோக்கி ஓடி வந்தாள்.

"வந்துட்டீங்களா?" என்று வீறிய படியே ஒரு மகா வேகத்தில் வந்தாள்.

அவன் மார்பில் அம்பாகப் புதைந்தாள். அவ்வளவுதான்! அடுத்த கணம் தேம்பலில் வழிந்தாள்.

அவனுக்கு உணர்ச்சிகள் தாளவில்லை. எந்தப் பெண்ணிடம் அவன் மனமும் எண்ணமும் சதா ஓடியிருந்ததோ, அவள் இப்போது அவனை அணைத்துக் கொண்டு நிற்கிறாள். பிரமையா? நிஜமா?

அவள் அழுத்தும் வேகத்தில், அவனால் நிற்கக்கூட முடியவில்லை. இதயம் ஆனந்தத்தில் தாலாட்டியது. சொர்க்கங்கள் அவனை மேலே இழுத்துச் சென்றன.

"எனக்கு உயிர் கொடுத்தீங்களே! உயிர் கொடுத்தீங்களே!" என்று சொல்லிப் பிதற்றினாள்.

அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தழுவுவதற்கு ஆசைதான். ஆனால் அதே நேரம் பயம்கூட.

அந்தப் பெண் அவனைக் கண்டுபிடித்தாலும் பிடிப்பாள். அதனால் எதுவும் செய்யாமல் இருப்பதுதான் நல்லது. இல்லாவிடில் அசிங்கமாகப் போய்விடும். எனவே மனத்தை அடக்கிக் கொண்டு வெறுமே நின்று கொண்டிருந்தான்.

"வந்துட்டீங்களா? மறக்க மாட்டீங்களே, என்னை விட்டுப் போக மாட்டீங்களே!" என்று அரற்றிக் கொண்டு இருந்தாள்.

அப்போது கூடத்திலிருந்து ஒரு குரல் வந்தது.

"என்ன பாமா? யார் வந்திருக்கா?" என்று ஒரு வயதான மூதாட்டி கேட்டுக் கொண்டே வந்தாள்.

அவள் தள்ளாடி வருவது தெரிந்தது. கையிலே கோல் வைத்திருந்தாள். கண்கள் தெரியவில்லை.

சத்தம் கேட்ட திசையை நோக்கி அவள் வந்து கொண்டிருந்தாள்.

"இதோ பாருங்க! உங்க பிள்ளை வந்துட்டார். உங்க பிள்ளை வந்துட்டார்!" என்று இரைந்து கத்தினாள் அவள்.

அந்த மூதாட்டி அவன் அருகில் வந்தாள்.

அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

அவள் கைகளைப் பற்றிக் கொள்ளவா? அம்மா என்று சொல்லவா? இல்லை, பேசாமல் இருப்பதா?

வேறே வழி! பேசாமல் இருந்துட வேண்டியதுதான்.

அவன் சும்மா நிற்க.

அவனது கைகளை அந்த அம்மாள் பற்றி, . . . சேகர்! சேகர்! என்று புலம்ப ஆரம்பித்தாள்.

இரவில் நிர்மல் மாடியில் காத்திருந்தான்.

மனசு அரற்றிக் கொண்டது.

இன்னும் சிறிது நேரத்தில் பாமா வந்து விடுவாள்.

அவளை இரவு நேரத்தில் எந்த நிலையில் வைத்துக் கொள்வது?

மனசில் ஆசை அதற்குள் குமிழியிட்டு மேலே வந்தது.

மாலையில் அவளைத் தொட்டு அணைத்த போது அவனது பொறிகள் கலங்கி விட்டன.

அவன் எதிர்பார்த்ததை விட அவள் இன்னும் ரூபவதியாக இருந்தாள்.

அவள் கண்கள் கருமையாய்க் குழைந்து அவனைச் சுழித்து இழுத்தன. அவைகளில் வந்த ஒரு காந்த வசீகரம்

அவனைக் கவர்ந்தது. இன்னும் அவளது யௌவனம் ஒரு இருபது வயதில் அப்படியே நின்றிருந்தது.

அந்த மாலை முழுவதும் அவளோடு ஒன்றிரண்டு வார்த்தைகளோடு நிறுத்திக் கொண்டான்.

அந்தப் பெரியம்மாவிடமும் அப்படித்தான்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி இவர்களுக்கு தந்தி வரவில்லையா? ராணுவத்திலிருந்து அடித்திருக்க வேண்டுமே! சேகர் இறந்து விட்டான் என்று அறிவிப்பு வந்திருக்குமே! வரவில்லையா?

ஏற்கனவே சேகர் சொன்னது நினைவுக்கு வந்தது.

வீட்டை விட்டு வந்து ஆறு வருடங்கள் ஆகிவிட்டது.

ஊரை விட்டு அவன் ஒரு வைராக்கியத்தில் வந்து விட்டான்.

இடையில் லீவு கூட எடுக்கவில்லை.

அதுவும் வைராக்கியத்தின் பேரில்தான். இத்தனைக்கும் காரணம் அவனது சித்தப்பா அவனைக் கையாலாகாதவன் என்று திட்டி விட்ட காரணத்தால்தான்.

சித்தப்பாவும் குடும்பத்தோடு ஒட்டியிருந்தார்.

அவர்தான் அவனை வளர்த்துப் படிக்க வைத்தது எல்லாம்.

அவன் சிறிது காலம் வேலை எதுவும் தேடாமல் சும்மா இருந்தபோது அவர் நன்றாக திட்டிவிட்டார்.

"கல்யாணம் வேற பண்ணிக்கிட்டே! சீக்கிரம் குழந்தையைப் பெத்திடுவே! பொறுப்பில்லாமல் இருக்கியேடா! ஊரிலே திரியறியே! இது வாழ்க்கையாடா?" என்று நன்றாகத் திட்டிவிட்டார்.

அன்று போய் மிலிடரியிலே சேர்ந்தவன்தான்.

பிறகு வீட்டுப் பக்கம் திரும்பவில்லை.

பிறகு திடீரென்று ஒரு நாள் அவளுக்கு கடிதம் போட்டான்.

அவளுக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவில்லை.

மிக மகிழ்ச்சியோடு அவள் பதில் போட்டாள்.

அவன் உடனே வரவேண்டும் அவனுக்காக அவள் துடித்து ஏங்குகிறாள் என்று எழுதியிருந்தாள்.

ஆனால் அவன் "கொஞ்சம் பொறு. என் லட்சியம் நிறைவேறி ஒரு பதவியில் உயர்வு பெற்று ஒரு நல்ல பிள்ளையாக வீட்டிற்கு வருவேன்" என்று எழுதியிருந்தான்.

இப்போது பதவி உயர்வு வரவில்லை. அவனே மேல் உலகத்துக்குத்தான் உயர்ந்து விட்டான்.

இந்த ஆறு வருடகால இடைவெளி அவனைப் பற்றிய அடையாளங்கள் எல்லாம் அவர்கள் மனத்தை விட்டுப் போய்விட்டனவா?

மெல்ல படிக்கட்டில் சத்தம் கேட்டது.

அவள்தான் வருகிறாள்.

ஆவலோடு வாயிலைப் பார்த்தான்.

உள்ளே ஒரு தேவதைபோல் நுழைந்தாள்.

நீலப் பட்டுப்புடவை கட்டியிருந்தாள்.

தலையில் நிறைய பூ.

தன்னை ஒரு புதுப்பெண் போல் ஜோடித்திருந்தாள்.

அவளைப் பார்த்ததுமே மயக்கம்தான் ஏற்பட்டது. அப்படி ஒரு அப்சரஸ் தோற்றம். உள்ளே வந்தவள் மென்மையான முறுவலைக் காட்டி கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டாள்.

சிலுக் சிலுக் என்ற ஓசையோடு நடந்து அவன் முன்னால் நின்றாள்.

அவனைக் கனிவாகப் பார்த்தாள்.

அந்தப் பார்வை அவனது எல்லா நினைப்புகளையும் அழித்து விட்டது.

பாலை நீட்டினாள்.

அதை வாங்கிப் பருகினான். முறுவலோடு அவன் முன்னாலேயே நின்றாள்.

"உட்கார்!" என்றான்.

உட்கார்ந்தாள்.

அந்தக் கணத்தில்கூட அவளிடம் உண்மையைச் சொல்லலாமா? என்று நினைத்தான்.

இப்பொழுது அவளுடன் சல்லாபித்தால் கூட, அல்லது பேசினால்கூட வித்தியாசத்தை கண்டுபிடித்து விடுவாள்.

நிச்சயம் உடனே சொல்ல வேண்டும்.

அவளைப் பார்த்து,. . . "பாமா" என்றான்.

நிர்மலின் குரல் பதட்டமிட்டது.

உள்ளே தொண்டை கரகரத்தது.

அவள் அவனை விநோதமாகப் பார்த்தாள்.

"என்னங்க? என்றாள்.

ஒரு புன்னகையில் அவள் மெல்ல நெளிந்தாள்.

மனசு நெகிழ்ந்துவிட்டது.

அவன் கைகளை பற்றிக் கொண்டாள்.

"நிச்சயமாக நீங்க வருவீங்கன்னு தெரியும்" என்று கூறினாள்.

அவனுக்கு யோசனை!

இப்படி அன்னியோன்யமாக, அன்பாகப் பழகுகிறாளே!

இவளிடம் உண்மையைக் கூறினால் உடைந்து விட மாட்டாளா?

கடவுளே, இதற்கு என்ன செய்ய?

பொதுப்படையாக ஒரு கேள்வியைக் கேட்டுவிடு வோம் என்று நினைத்தான்.

"ஏன்? தந்தி வரவில்லையா?" என்று கேட்டான்.

"தந்தியா?" என்று கேட்டாள்அவள்.

"ஆமாம். மிலிடாரியிலேர்ந்து வந்திருக்குமே!"

"வரவில்லையே."

"வந்திருக்கணுமே."

"அதிலே என்ன எழுதியிருந்தது." என்றாள் அவள்.

சட்டென்று அவள் முகத்தைப் பார்த்தான்.

அதில் இன்னும் முறுவல் ஓடிக் கொண்டிருந்தது.

கண்களில் அவனைக் குறும்பாகப் பார்த்தாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

"நீங்க வரப் போறீங்கன்னு தந்தியா?" என்று கேட்டாள் அவள்.

உதட்டில் சிரிப்பு ஓடியது.

தலையை மட்டும் ஆட்டினான். அதே நேரத்தில் யோசிப்பு. உண்மையில் மிலிடாரியிலிருந்து தந்தி வந்திருக்காதா?

சேகர் இறந்துவிட்டான் என்பது இவர்களுக்குத் தெரியாதா?

சரி, அப்படி தந்தி வராவிட்டால் அதற்குப் பிறகு கடிதமாவது வந்திருக்க வேண்டுமே! அதுவும் வரவில்லையா?

இப்போதுதான் மனசு முழுதுமாக அவனது கட்டுப்பாட்டை மீற ஆரம்பித்தது. சேகர் இறந்து போனது தெரியாது இவர்களுக்கு! அதனாலதான் நம்மை சேகராக நினைக்கிறாங்க.

இந்த சந்தர்ப்பத்தை விடாதே என்று மனது வீறிட்டுக் கூறியது.

அவனைத் தழுவினாள்.

ஆனால் அவனுக்குத்தான் நினைவுகள் தாவிக் கொண்டு ஓடின.

இப்பொழுது இல்லாவிட்டால் வேறு எப்போதாவது அவளுக்குத் தெரிந்துவிடும்.

அதற்கான சந்தர்ப்பம் ஒன்று மட்டும் இல்லை. எத்தனையோ வரப்போகின்றன?

இந்த வேடத்தை நீடிக்கக் கூடாது என்று நினைத்தான்.

அவள் விடவில்லை.

“என்ன யோசனை?” என்று அவனைத் தொந்தரவு செய்தாள்.

அவன் அவள் முகத்தைப் பார்த்தான்.

‘‘என்ன? எப்பப் பார்த்தாலும் யோசிச்சுக் கிட்டிருக்கீங்க என்று சொல்லி அவனைத் தன்னோடு கீழே கட்டிலில் சாய்த்தாள்.

நடுநிசியில் ஆசுவாசமாகப் பால் அருந்தியபோது, நான் முன் மாதிரியெல்லாம் இல்லை! தெரியுதா? என்று கூறினான் அவன்.

அவள் வெட்கத்தோடு பார்த்தாள்.

"நான் மாறிட்டேன் இல்லையா? என்று அவனே கேட்டான்.

"நிறைய மாறியிருக்கீங்க!" என்றாள்.

புன்னகை செய்தான்.

"எத்தனையோ நாள் கனவு. இன்னிக்குதான் எனக்கு மனசு திருப்தியாச்சு!"

முகத்தில் ஒரு குங்கும ரேகை ஓடியது. "நிஜமாகவா?" என்று கேட்டான் அவன்.

"ஆமாம்! அவள் வெட்கத்தில் குனிந்தாள்.

✠✠✠

# 6

**வா**ங்க! வாங்க! என்று அழைத்தார் மூர்த்தி!

டாக்டர் காந்தன் உள்ளே வந்தார்.

"நீங்க வந்ததற்கு மகிழ்ச்சி டாக்டர்! நீங்க இங்கே உட்காருங்க! நான் உள்ளே போய் அழைச்சிட்டு வரட்டுமா?

"சரி!"

மூர்த்தி உள்ளே போனார். திரும்பி வரும் போது ஒரு இளம் பெண்ணை அழைத்து வந்தார்.

நல்ல களையாக இருந்தாள் பெண்! ஆனால் கண்கள் மட்டும் பிராந்துப் பார்வை பார்த்தன.

டாக்டருக்கு எதிரே அவளை உட்கார்த்தினார்கள்.

"உன் பேர் என்னம்மா?"

"வித்யா!"

"உங்க அப்பா பேர் என்ன?

"நீலகண்டன்."

"இந்த அங்கிள் தெரியுமா?"

"தெரியும்! மூர்த்தி."

"அவர் யாரு? என்ன செய்யறார்?"

"எங்க அப்பாவுக்கு சிநேகிதர். அட்வகேட்டா இருக்கார்."

"இப்போ உனக்குத் தனியா வெளியிலே போக முடியுமா வித்யா?"

"ஓ! முடியுமே!"

"பழைய மாதிரி பயம் வருதா?"

"வரல்லை."

"பயம் எப்போதான் வருது?"

"தனியா இருந்தா. . ."

"இப்போ ராத்திரியிலே எப்படியிருக்கே?"

அவள் பதில் பேசவில்லை.

ராத்திரியில் திடீரென்று எழுந்து "வீல்" என்று கத்துவது நிற்கவில்லை, என்று மூர்த்தி ஏற்கனவே கூறியிருந்தார்.

ஒவ்வொரு சமயத்தில் பகலில் கூட திடீரென்று அதுபோல் வீறல் வந்துவிடுகிறது.

இதுமட்டும் இன்னும் மறையவில்லை என்றார்கள்.

டாக்டர் அந்தப் பெண்ணிடம் மேலும் சில கேள்விகள் கேட்டார்.

பிறகு "அவள் நல்லாத் தேறி வருகிறாள்!" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

வெளியே அவர் வந்ததும் மூர்த்தி கேட்டார், "டாக்டர்! வித்யா உண்மையிலே தேறி இருக்காளா?"

"ஓ! என்றார் டாக்டர்!"

"இன்னும் அந்தப் பார்வை சரியாகலையே?"

அதை டாக்டர் காந்தன் உணர்ந்தவர்தான். வித்யாவின் பார்வையில் அந்தப் பயப்பிராந்தி இன்னும் கூட இருந்தது. எதையோ கண்டு பயப்பட்டவள் போல.

"ஸார்! ஒன்று சொல்றேன் கேளுங்க!"

"எஸ் ஸார்!"

"இவளுக்கு இந்த மாதிரி ஏழு வருஷம் மேலா இருக்குன்னு சொல்றீங்க!"

"ஆமாம்."

'ஆனா கேஸை போனா மாசந்தான் கொண்டு வந்திருக்கீங்க!"

"ஆமாம் ஸார்."

"அதுக்கு முன்னாடி ஏன் வரல்லை?"

"ஸார்! அதுக்கு வேறே மாதிரி சிகிச்சை செஞ்சு பார்த்தோம்."

"என்ன?"

"கோவிலுக்கெல்லாம் போனோம்."

"ம்."

"மாந்திரீகம் பார்த்தோம்."

டாக்டருக்குப் புன்னகை.

"இடையிலே எங்க மாதிரி டாக்டர்கிட்டே காண்பிச்சிருக்கலாம். ஆரம்பத்திலேயே சுலபமா குணப்படுத்தலாம்."

மனநோயின் இதரச் சின்னங்கள் வெகுவாகக் குறைந்து விட்டாலும், இந்த பிராந்து விழிப்பு மட்டும் இன்னும் தொடர்ந்து கொண்டிருந்தது.

"மிஸ்டர் மூர்த்தி! நானும் என்னாலே ஆனதை எல்லாம் பார்த்துட்டேன்! எல்லாச் சிகிச்சையும் அளிச்சாச்சி! ஆனால் அவள் மனசிலே அது பாறையாக இருக்கு! 'ட்ரோமாடிக் எஃபெக்ட்' என்பாங்களே, அது!" என்றார்.

"டாக்டர்! நான் இந்த வீட்டுக்குக் குடும்ப நண்பன்! இந்தப் பெண்ணுக்கு திருமண வயசு இப்போது! இதைத் தாண்டினால் பின்னாடி திருமணம் நடக்கிறது கஷ்டமாப் போயிடும்! அதனாலேதான் இதுக்கு. ஏதாவது செய்து. . ."

"ஸார்! இதிலே பெத்தடின் செஷன் எத்தனையோ வச்சுப் பார்த்தாச்சு! அந்தக் கற்பழிப்பு சம்பவத்தை சொல்றா! ஆனா அந்த இறுதி கட்டத்தை வாய்விட்டுச் சொல்லக் கஷ்டப்படறா! அவளாலே முடியல்லே."

"ஏன் அப்படி?"

"அவள் மனசு அதை நினைக்க மாட்டேங்கிறது! தடை பண்ணுது!"

"ஏன்?"

"அவளுக்குள்ளே இருக்கும் பீதிதான்!"

"இந்த பீதியை எடுக்க முடியாதா?"

"அதுக்குத்தான் செஷன் வைத்துப் பார்த்தோம். எத்தனை வச்சாச்சு. அவள் தைரியமா அந்த கட்டத்தை நினைச்சு வாயாலே, வெளிப்படுத்திட்டால் போதும் ஸார். அந்த பீதி சில்லுச் சில்லா உடைஞ்சுடும். அடுத்த நிமிஷமே அவள் சரியாயிடுவா?"

"அப்போ அதை நினைக்க விடாம அவள் பீதிதான் அவளைப் பிடிச்சுட்டு இருக்கு."

"ஆமாம்."

"எல்லோருக்குமே இந்த பீதி இப்படி உடையாம இருக்குமோ?"

சிலருக்கு உடையும். சிலருக்கு உடையாது. இவங்க ஆயுசு காலத்துக்கும் மனப் பிராந்தியோடுதான் இருப்பாங்க."

"ஆச்சரியமா இருக்கே"

"ஸார்! மனசேதான் தன்னை அழித்து நோயை உண்டாக்கிக்கும். அதை மனசேதான் அழித்துக் கொள்ளவும் செய்யும்.

"மனசேதான் நோயாளி! அதுக்கு மனசேதான் காரணம் இல்லையா டாக்டர்?"

இருவரும் கார் பக்கம் வந்தார்கள்.

காரில் ஏறியதும் டாக்டர், "கவலைப்படாதீங்க! இந்த அளவு அவள் முன்னேறினதே ஆச்சரியம்! மீதியும் சீக்கிரம் சரியாயிடணும்!"

✠✠✠

# 7

“வர்ற ஞாயிற்றுக்கிழமை எங்க சின்ன மாமா பெண்ணுக்குக் கல்யாணம்!” என்றாள் பாமா!

நிர்மலுக்கு மனசு திக்கென்றது.

“சரி! அதுக்கு என்ன?” என்றான் அவன்.

“நாம்ப போக வேண்டாமா?” என்றாள்.

மனசில் நினைவுகள் ஓடின.

கள்ளியூர் வந்து சேர்ந்து ஒரு வாரந்தான் ஆகியிருக்கிறது.

பாமா குடும்பத்தோடு ஒன்று சேர்ந்தாகி விட்டது.

நல்லவேளை! பாமாவால் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதற்கு காரணமே, உண்மை சேகர் அவளை ஆறு வருடமாகப் பிரிந்து இருந்ததுதான் காரணம்.

அதனால்தான் ஏதாவது விஷயத்தில் வித்தியாசம் காட்டினாலும், அதற்குக் காரணம் அவன் மாறி விட்டான் என்று நினைக்கிறார்கள்.

அப்படி நினைப்பதற்கு ஏதுவாக அந்த ஆறு வருட இடைவெளி அமைந்து விட்டது.

பாமா உடனே கேட்டாள், “ஏன் பேசாமல் இருக்கீங்க?”

"இல்லை பாமா. இப்போதுதான் வந்திருக்கிறேனா! ஓய்வு இல்லாமல் போகுது. யுத்தம் என்றால் லேசு இல்லை. ராவு பகல் என்று பார்க்க முடியாது. சண்டை செஞ்சுக்கிட்டே இருப்போம். உடம்பெல்லாம் அப்படியே இற்றுப்போச்ச. இப்ப எனக்கு எவ்வளவு களைப்பு இருக்கு தெரியுமா? ஒரு மாசம் படுத்துத் தூங்கலாம்!" என்றான்.

"புரியுதுங்க. ஒரு மாசம் கூட இல்லை. ஆறுமாசம் கூட ரெஸ்ட் எடுத்துக்குங்க."

"ஆனா பட்டாளத்தில் விட மாட்டாங்க. உடனே வரச் சொல்லுவாங்க!" என்றான்.

''ஐயோ! நீங்க போறதை அம்மா ஒத்துக்க மாட்டாங்க. சொந்தக்காரங்களும் விட மாட்டாங்க!'' என்று கூறினாள்.

''நீ அவங்களை எப்படியாவது சரிப்படுத்து!'' என்றான் நிர்மல்.

பாமா எழுந்தாள்.

அவள் போனதும் யோசித்துப் பார்த்தான்.

நிறைய சங்கடமாக தோன்றியது.

இதுவரை ஒவ்வொரு சோதனையிலிருந்தும் தப்பித்துக் கொண்டிருந்தான்.

நல்ல வேளையாக தாயங்குளம் கிராமத்திலிருந்து குடும்பம் இங்கே கள்ளியூர் வந்து விட்டார்கள்.

தாயங்குளத்து கிராமத்தில்தான் சேகரைத் தெரிந்த பேர்கள் நிறைய இருந்தார்கள்.

கள்ளியூரில் அவ்வளவு பேர்கள் கிடையாது. அவர்கள் குடும்பத்துக்குப் புதிய ஊர்.

சேகரின் தாயார் கண் பார்வை இல்லாமல் இருக்கிறாள் என்பது அவனுக்கு மற்றொரு அனுகூலம்.

எல்லாவற்றையும்விட சேகரின் மனைவி பாமா அவனை நம்பி விட்டாள்.

அவனுடைய நம்பிக்கையினால்தான் அவன் அங்கு இருந்து வாழ முடிகிறது.

வாழ்க்கையில் செல்வத்தில் மிதப்பதாக அவன் நினைத்தான். பாமா மூலம் சொர்க்கத்திலும் மிதந்தான்.

எத்தனை வித ருசிகளில் சாப்பாடு பண்ணிப் போட்டு அவனை உபசரிப்பதிலேயே ஈடுபட்டாள்.

இப்படியே வாழ்வு முழுவதும் இருந்து விடலாம் என்று கூடத் தோன்றியது.

ஆனால் முடியுமா? இப்பொழுதே சோதனை வந்துவிட்டதே!

ஆமாம். சோதனை வந்திருந்தது.

யாரோ உறவுகள் திருமணத்துக்கு அழைத்திருந்தார்கள்.

அங்கே போனால் நிறைய உறவுகள் வருவார்களே!

அது ஆபத்து ஆயிற்றே!

ஏதாவது ஏடாகூடமாக நடந்து மாட்டிக் கொண்டால். . .

மனசு அடித்துக் கொண்டது.

இரவு சாப்பிட உட்காரும்போது தாயார், "இந்தாடா சேகர்! நீ அந்தக் கல்யாணத்துக்குப் போகணும். இல்லாட்டி நல்லா இராது!" என்று கூறினாள்.

"ஏம்மா! நமக்கு கிட்டத்து உறவு இல்லையே!" என்றான் அவன்.

"அதனாலே என்னடா? நீ போய்தான் ஆகணும்!" என்று கூறினாள் தாயார். வேதனையாக இருந்தது பாமாவைப் பார்த்தான்.

அவள் கண்களைக் குனிந்தாள்.

அவன் மாடிக்கு வந்தபோது அவள் கேட்டாள். "ஏங்க இதிலே என்ன வந்துடுத்து. தலையை மட்டும் காட்டுங்க. உடனே வந்துடுங்க. நாள் முழுதும் தங்க வேண்டாம்!" என்றாள்.

"நீ சொல்றது சரி. போயிட்டு வர்றதுகூட கஷ்டமாக இருக்கும்!"

"காலையிலே ரயில் ஏறினா சாயங்காலம் நாலு மணிக்கெல்லாம் போயிடப் போறீங்க? அன்னி ராத்திரி மட்டும் இருங்க. காலையிலே முகூர்த்தம் பார்த்துட்டு உடனே வந்துடுங்க!" என்று கூறினாள்.

"நீயும் வரமாட்டியா?"

"வருவேனே!"

அவன் தலையைப் பற்றிக் கொண்டு யோசித்தான்.

உடனே அவள் கேட்டாள்.

"உங்களுக்குத்தான் கோகிலாவை ரொம்பப் பிடிக்குமே!" என்று சொன்னாள்.

"கோகிலாவா? யாரு" என்றான் சட்டென்று. பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டான்.

எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும் சில சமயங்களில் கோட்டை விட்டு விடுகிறான்.

"ஏன்? கோகிலா தெரியாது? அந்தக் குழந்தையைக் கொஞ்சுவீங்களே!" என்றாள்.

தலையை இறுகப் பற்றிக் கொண்டான் அவன்.

"பார்த்தியா! பாமா! எல்லாம் மறந்து போயிடறது. எத்தனை வருஷம் ஆச்சு!" என்று கூறினான் அவன்.

"அவ அம்மாவும் வருவாள். உங்களுக்கு அவளைத் தானே முதலில் பரிசம் போடறதா இருந்திச்சு!" என்றாள்.

"அப்படியா?" என்று அவன் கேட்டான்.

"ஏங்க அவ உங்ககூட சின்ன வயசிலே பழகினதினாலேதானே அவ உங்களையே கட்டிப்பேன்னு சொல்லியிருக்காள்" என்றாள் அவள்.

அவன் திடுக்கிட்டான்.

தலையைக் குனிந்து கொண்டான்.

ஒவ்வொரு செய்தியும் வரும்போது அவனால் சமாளிக்க முடியாது என்று தோன்றியது.

பேசாமல் ஊம் கொட்டிக் கொண்டே இருந்தான். அதுதான் சரி என்று தோன்றியது.

பிறகு அவள் நிறுத்தியதும், "நீ எங்கே? அவள் எங்கே? உன் அழகுக்கு யார் இணையாவாங்க?" என்று வேண்டுமென்றே கூறினான்.

அந்த வார்த்தையிலேயே மகிழ்ச்சி அடைந்தாள் அவள்.

அவனுக்கும் திருப்தி ஏற்பட்டது. ஒரு உரையாடலிலாவது கலந்து கொண்ட பங்கும் அவனுக்கு ஏற்பட்டு விட்டது.

கடவுளே இதுமாதிரி புதுப்புது உறவுங்க வந்து என்னை மாட்டிக்க விடாமல் இருக்க வேண்டுமே என்று நினைத்தான்.

அந்தக் கணமே ஒரு நினைவு தோன்றியது.

இதே ரீதியில் எத்தனை நாட்கள் போக்க முடியும்?

"**அ**ப்புறம் இந்தக் கல்யாணத்துக்கு எங்க அத்தையும் வருவாங்க!" என்று மீண்டும் தொடங்கினாள் பாமா.

அவன் அப்போது பேசவில்லை.

"என்ன பேசாமல் இருக்கீங்க?" என்று கேட்டாள் அவள்.

"சரி, வரட்டும்!" என்றான்.

"என்னது இப்படிச் சொல்றீங்க? அத்தைத்தானே உங்களுக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வச்சாங்க? அதுக்கு நீங்க நன்றி சொல்ல வேண்டாமா?" என்றாள் அவள்.

அவனுக்கு மேலும் குழம்பியது. இது என்னடா என்று தோன்றியது. "பாமா நிச்சயம் திருமணத்துக்குப் போக வேண்டுமா?"

"இல்லேங்க. அத்தை மேலே உங்களுக்கு எவ்வளவு பாசம்? அவ இல்லாட்டி நம்ப கல்யாணம் நடந்திருக்காதுங் களே, அதை நீங்களே சொன்னீங்களே."

"அத்தையை வேணுமின்னா இங்கே அழைச்சுக்கிட்டு வா! அங்கெல்லாம் நம்ப நின்னு பேச வேண்டாம்."

"அவங்க எங்கேயும் வரமாட்டாங்க. அங்கேதான் வருவாங்க!" என்று கூறினாள் அவள். அவன் சிறிது நேரம் யோசித்தான். ஒரு யுக்தி தோன்றியது.

பிறகு, "இந்தா பார் பாமா, நான் ஒண்ணு சொல்றேன் கேளு. நான் ஆறு வருஷத்துக்குப் பிறகு திரும்பவும் ஊருக்கு வந்திருக்கேன். பாதி சமாச்சாரம் எனக்கு மறந்து போச்சு. அதுக்கு முன்னாடி உனக்கு இன்னொரு விஷயம் சொல்லணும்!" என்றான்.

"என்ன என்று கேட்டுக் கொண்டு கட்டிலில் அமர்ந்தாள் அவள்.

"நான் சண்டை போட்டுக்கிட்டே இருக்கேன் தெரியுமில்லையா? யுத்தம் நடக்குதே, அங்கேதான். அப்போ ஒரு தரம் நான் ஒரு குண்டு வீச்சிலே மாட்டிக்கிட்டேன்."

"அப்படியா?"

"ஆமாம். என் பக்கத்திலேதான் வெடிச்சது. என் முன்னாலே கல்லு சில்லு எல்லாம் தலை மேலே தள்ளி அப்படியே மூடித்து."

"ஐயோ!"

"கேளு! நல்லவேளை என்னுடைய சகாக்கள் வந்து என்னைக் காப்பாத்தினாங்க. நான் அப்போ மூர்ச்சையாயிட்டேன். நான் திரும்பி எழுந்துக்கறதுக்கு இருபது நாள் ஆச்சு.

"என்னங்க? எனக்கு மனசு சங்கடமா இருக்கே!"

"பயப்படாதே! அப்புறம் பார்த்தா என்னன்னு தெரியலை."

"அப்புறம்தான் சகாக்கள் வந்து பேசி எல்லாத்தையும் சொன்னாங்க."

"ஓ! அவ்வளவு கஷ்டப்பட்டீங்களா? இது தெரியாதே" என்று பதட்டமடைந்து கொண்டே சொன்னாள் அவள்.

"இதெல்லாம் தெரியப்படுத்த நான் விரும்பலை. ஏதாவது ரொம்ப ஆபத்தா இருந்தாத்தான் தெரியப் படுத்துவேன். தொடர்ந்து... உன்னை சும்மா காபராபடுத்த விரும்பலை."

"இல்லீங்க, இப்படி உங்க உடம்பை வாட்டிக்கிட்டு அங்கே இருக்கலாமா?" உடனே ஊருக்கு திரும்பியிருந்தா நிறைய ரெஸ்ட் எடுக்க வச்சு பணிவிடை செய்திருப்போம் இல்லையா?" என்றாள்.

"பரவாயில்லை. அங்கேயும் அவங்க என்னை நல்லாத் தேற்றி விட்டுட்டாங்க. அப்புறம் எழுந்தப்புறம் எனக்கு மனசிலே திடீர் திடீருன்னு குழப்பம் வந்துடும். பார்த்தவங்களை பார்க்காத மாதிரி தோனிடும். ரொம்பத் தெரிஞ்சவங்களா இருப்பாங்க. அவங்களைத் தெரியாத

மாதிரிதான் நான் பேசுவேன். இந்த மாதிரியெல்லாம் நடக்க ஆரம்பிச்சது!" என்று சொல்லி அவள் கையைப் பற்றினான் அவன்.

அவளுக்கு நிஜமாக ஒருவித அக்கறை தோன்றியிருந்தது.

"அதனாலேதான் சொல்றேன். இந்த மாதிரி திருமண வீட்டுக்கு போனா ரொம்ப கஷ்டம். யாராவது வந்து நான் கண்டுக்காமல் இருந்துட்டேனா அவங்க என்ன நினைப்பாங்க! ஏன் அப்படி இருக்கார்ன்னு நினைக்க மாட்டாங்க?"

"நிச்சயம் நினைப்பாங்க!" என்றாள் அவள்.

"அதனாலேதான் நான் ஒதுங்கிக்கிறதுன்னு நினைச்சேன். இப்ப சொல்லிட்டேன். இதுதான் என்னுடைய காரணம்!" என்றான் அவன். அவள் சிறிது யோசித்தாள்.

"நீங்க சொன்னது நல்லா புரிஞ்சதுங்க. காரணம் தெரிஞ்சு போச்சு. இருந்தாலும் இந்தக் கல்யாணத்துக்கு போய்த்தான் ஆகணும். நீங்க தலையைக் காட்டிட்டு காலையிலே முகூர்த்தம் முடிந்தவுடன் உடனே வந்துடுவோம். நீங்க அங்கே நிற்கிற நேரம் எல்லாம் உங்க கூடவே நான் இருக்கேன். யாராவது சொந்தக்காரங்க, தெரிஞ்சவங்க வந்தாக்கூட இது இவரு. அது அவரு என்று நான் சொல்றேன். உங்களுக்கு சந்தோஷம்தானா?" என்றாள் அவள்.

அவனுக்கு மகிழ்ச்சி கரை புரண்டது. ஆகா இப்படி ஒரு தீர்வு கிடைக்குமா? என்று சந்தோஷப்பட்டான். அவள் கைகளைப் பற்றிக் கொண்டு "பாமா! நீ தான் எனக்கு சரியான மனைவி!" என்று கூறினான்.

"சரிங்க! திங்கட்கிழமை நாம்ப புறப்படறோம்" என்று கூறினாள். . . . "ஓ! ரெடி!" என்றான்.

# 8

இப்போது ஒரு நல்ல வரன் வந்திருக்கு ஸார்! அதனால்தான் வந்திருக்கிறேன்!" என்றார் மூர்த்தி!

சட்டென்று டாக்டர் காந்தன் யோசித்தார்.

உடனே எந்தவித முடிவும் சொல்லவில்லை. யோசித்துக் கொண்டே இருந்தார்.

மூர்த்தி குறுக்கிட்டார். ஏன் ஸார்! வித்யாவுக்குத் திருமணம் பண்ணக் கூடாது என்கிறீங்களா? என்று கேட்டார்.

கண்களை மெதுவாகத் திறந்தார் காந்தன். ஒருவித சுரத்தில்லாத புன்னகை வந்தது.

"இதிலே எதுவும் சொல்றதுக்கில்லை ஸார்!" என்று கூறினார். மூர்த்தி குறுக்கிட்டார். "ஏன் ஸார்! சமயத்திலே இந்த மனநோய்கூட திடீருன்னு குணமாயிடறது உண்டு இல்லையா?" என்று கேட்டார்.

"அதுபோல பல கேஸ்கள் உண்டு. மனநோய்க்காரன் ஒருநாள் எழுந்திருப்பான். அவன் மனநோய் முழுதும் போய்விடும். அதற்கு காரணமே கண்டுபிடிக்க முடியாது. மனசின் போக்குகள் விசித்திரமானவை. யாரும் அதை வகைப்படுத்த முடியாது!" என்றார் காந்தன்.

"சரி! சில மனநோய்க்காரர்களுக்குத் திருமணம் செய்தால் மனநோய் தீர்ந்துடும்னு சொல்வாங்க இல்லையா?"

"சில கேஸ்லே நடக்கும்?" என்று கூறினார்.

"இப்போகூட ஸார். வித்யா வீட்டிலே அதைத்தான் சொல்றாங்க. அந்தப் பெண்ணுக்குத் திருமணம் செய்து வச்சுட்டா அவ சரியாகி விடுவாள்னு!"

"ம்!" என்று நிறுத்தினார் டாக்டர்.

"இப்ப அதுக்குத்தான் உங்ககிட்டே வந்திருக்கேன். நீங்க ஒரு உதவி பண்ணணும் டாக்டர்."

"என்ன செய்யணும்?"

"நீங்க சில சமயங்களிலே ஒரு மாத்திரை கொடுத்திருக்கீங்க. அதைக் கொடுத்த போதெல்லாம் கிட்டத்தட்ட பத்து, பதினைந்து நாளுக்கு வித்யா எந்தவித நோய் அறிகுறியும் காட்டாமல் ஒரு இயல்பான பண்போட சாதுவாக இருந்துடுவாள். முகத்திலே பயப்பிராந்தி வரவே வராது. இயல்பான பொண்ணா இருப்பாள்."

"ஓ! ஆண்டி-டிப்ரஸண்ட் மாத்திரைகளை கொடுத்திருக்கிறேன். அதான் காரணம்."

"அதை இப்போ கொடுக்க முடியுமா? கொடுத்துட்டா, கல்யாணமாகி பத்து நாள் வரைக்கும் அவளை இயல்பாக்கி வச்சிருக்கலாம். அப்புறம் ஆண்டவன் செயல். அவள் மனநோய் கம்ப்ளீட்டா போயிடறதா இல்லையான்னு பார்க்கலாம்."

டாக்டர் சட்டென்று தமது கைகளை எடுத்துக் கோர்த்துக் கொண்டார்.

அது வேற விஷயத்துக்காக நாங்க கொடுக்கிறது வழக்கம். இப்ப இந்த நிலையிலே கொடுக்கக் கூடாதுங்களே?"

இல்லை டாக்டர்! தயவு செய்து அவள் நன்மைக்காக இதைச் செய்யுங்க! கல்யாணத்துக்கு முந்தின நாள் கொடுத்திடலாம். ஒரு பத்து நாள் அவள் சரியாக இருக்கட்டும்.

அந்த பத்து நாள் தாம்பத்திய வாழ்க்கையிலே அவள் மனசு மாறுகிறதா பார்க்கலாம்!" என்றார் அவர்.

"ஏன் மிஸ்டர் மூர்த்தி! இது அவசியமா?" என்றார் டாக்டர் காந்தன்.

"இல்லை ஸார்! பொண்ணு வயசாயிட்டே வருது. சொந்தக்காரங்க எல்லாம் கேலி பண்ணிடுவாங்க. ஏற்கனவே பொண்ணு பயித்தியம் என்கிற மாதிரி செய்தி லேசா பரவிட்டிருக்கு!"

"இந்த வதந்தி பெரிசாயிடுத்துன்னா வாழ்க்கை கெட்டுடும். அதனாலேதான் காதும், காதுமா கல்யாணத்தை முடிச்சுடணும்!" என்றார் மூர்த்தி.

"ரைட் மூர்த்தி! அப்புறம் அந்தப் பொண்ணு மனநோய் தீரல்லைன்னா என்ன செய்வீங்க?"

"கல்யாணம் ஆகியும் தீரல்லைன்னா அது ஆண்டவன் செயல்!"

அப்போது ஒரு ஆண் வாழ்க்கை பாழாப் போறது!

"பெண்தான் பாழாவங்க. ஆணுக்கு இன்னொரு கல்யாணம் செய்துடப் போறாங்க."

"சரி! ஓ. கே. நான் வேணுமின்னா ஆண்டிப்ரஸண்ட் இன்செக்ஷனோ, அல்லது மாத்திரையோ தந்திடறேன். நீங்க அதுபடி செய்திடுங்க!" என்று கூறினார் டாக்டர்.

"ரைட் ஸார்! ரொம்ப நன்றி!"

"உங்களுக்கு மாத்திரை எப்போ தேவை?"

"அந்தக் கல்யாணத்தை வர பன்னிரெண்டாம் தேதி வச்சுக்கலாம்னு இருக்கோம். பத்தாம் தேதி கொடுத்திடுங்க போதும்."

களியூர் ரயில்வே ஸ்டேஷனில் எப்போதுமே அதிகக் கூட்டம் இராது.

சிலர் இறங்குவார்கள். சிலர் ஏறுவார்கள்.

அன்று கொஞ்சம் ஆட்கள் இருந்தார்கள்.

அங்கங்கு சிறுசிறு கும்பல்களாக இறுக்கியிருந் தார்கள்.

அடுத்த நாள் முகூர்த்த நாள். கல்யாணங்களுக்கு போவதற்காக வந்திருந்தார்கள்.

நிர்மலும், பாமாவும் பெட்டிகளோடு ஸ்டேஷனுக்கு வந்தார்கள்.

பிளாட்பாரத்தில் நுழைந்த பிறகு, "இங்கே வா!" என்று நிர்மல் அவளை அழைத்துப் போனான்.

யாரும் இல்லாத இடத்திற்கு கொண்டு போய் உட்கார்த்தி வைத்தான்.

"என்னங்க? இவ்வளவு தூரம் வந்தீங்க? என்று கேட்டாள் மனைவி.

"இதப்பாரு, எனக்கு கூட்டமே பிடிக்காது. தனிமையா இருக்கிறதுதான் பிடிக்கும்!" என்று கூறினான் அவன்.

மணி அடித்தது. ரயில் ஓசையுடன் வந்து நின்றது. சுமாரான கூட்டம் உள்ள பெட்டியைத் தேடி இருவரும் ஏறினார்கள்.

மூர்த்திக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அவரைவிட நீலகண்டத்திற்கு பெரிய மகிழ்ச்சி.

நிச்சயமாக அந்தத் திருமணம் வித்யாவின் மனத்தைச் சரியாக்கி ஒரு இயல்பான பெண்ணாக மாற்றப் போவதாக நினைத்தார்கள்.

நீலகண்டம் மூர்த்தியை அழைத்தார்.

அவரது அறைக்குச் சென்றார். மூர்த்திக்கும் கண்களை நம்ப முடியவில்லை. வித்யா புன்னகை புரிந்தாள். களங்கமில்லாத புன்னகை. அவள் கண்களிலும் அந்தப் பயப்பிராந்தி போய் விட்டது.

பார்த்தீங்களா? நாம்ப நினைப்பது சரியாப் போச்சு! இனிமே இயல்பா ஆயிடுவா. பயப்படாதீங்க! என்று கூறினார் மூர்த்தி.

ஏழானதும் நிச்சயதார்த்த சடங்குகள் தொடங்கின.

பெண்ணை அழைத்து வந்தார்கள்.

உண்மையில் வித்யாவின் அழகைக் கண்டு எல்லோரும் பூரித்திருப்பார்கள்.

சடங்குகள் முறையாக நடந்து அரை மணி நேரத்தில் முடிந்தன.

வாசலில் அந்த நேரத்தில் ஒரு ஆட்டோ வந்து நின்றது.

யாரோ நடையிலிருந்தே உள்நோக்கிக் கத்தினார்.

பாமாவும், அவள் புருஷன் சேகரும் வந்திருக்காங்க! என்று குரல்.

நீலகண்டன் துள்ளிக் கொண்டு வாசலை நோக்கி ஓடினார்.

“வாங்க! வாங்க! என்று அழைத்து உள்ளே வந்தார்கள்.

பிறகு, வா பாமா! வாங்க மிஸ்டர் சேகர்! பெண்ணைப் பார்த்துடுங்க, ஆசீர்வாதம் பண்ணுங்க. நிச்சயம் ஆயிடுச்சு! என்று கூறினார்.

பிறகு இருவரையும் அழைத்துக் கொண்டு போனார்.

மணமகள் இருக்கும் அறைக்கு வந்தார்கள்.

"இந்தா வித்யா! யாரு வந்திருக்கா பாரு. மாமி பாமாவும், மாமா சேகரும் வந்திருக்காங்க! என்று கூறினார்.

வித்யா மெல்ல எழுந்து வந்தாள். சேகர் முன்னால் நின்றாள்.

அடுத்தக் கணம் சேகரைப் பார்த்தாள். அந்தப் பார்வை உடனே வெறித்து நின்றது.

அவள் முகம் இறுக ஆரம்பித்தது.

"நமஸ்காரம் பண்ணு!" என்றார் மூர்த்தி.

அவளது இறுகிய முகம் இப்போது வலிகளாக மாற ஆரம்பித்தது.

கண்களில் கொடூரமான ஒரு உக்கிரம் தெரிந்தது.

ஆ! என்று சத்தம் வந்தது.

அவள் கண்கள் சொருகின!

தடுமாற்றத்தோடு மூர்த்தி கைகளில் விழுந்து விட்டாள் அவள்.

**டா**க்டர் காந்தன் தனது காலை நேர நோயாளிகளை பார்த்துவிட்டு சற்று நேரம் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

எதிரே அவருக்கு ஒரு டம்ளரில் காபி கொண்டு வைக்கப்பட்டிருந்தது.

சற்று கண்ணை மூடியிருக்கும்போது அறைக் கதவு பலமாகத் திறக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து உள்ளே வந்தவளைப் பார்த்ததும் காந்தன் திடுக்கிட்டார்.

அவள் வித்யா.

சல்வார் கமீஸ் போட்டிருந்தாள்.

"ஏது முற்றிலும் மாறிட்டியே!" என்று கேட்டார் டாக்டர்.

"ஆமாம் டாக்டர். இப்ப நான் உங்களுடைய அருளாலே குணமாயாச்சி" என்று சொல்லி டீப்பாயிலிருந்த டம்ளர் காப்பியை எடுத்து நீட்டினாள்.

"எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு. நம்ப முடியவில்லை!" என்று கூறினார்.

"ஸார்! உங்களுக்கு நான் நன்றியைத் தெரிவிக்கிறேன். நீங்க எவ்வளவோ ட்ரை பண்ணீங்க. கடைசியிலே ஒரு சம்பவத்தினாலே என் மனசு சரியாப் போயிட்டது.

"என்ன?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் அவர்.

"நான் அந்த ஆளைப் பார்த்துட்டேன்."

"எந்த ஆள்?"

"அந்த கற்பழிச்ச ஆசாமி!"

டாக்டர் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"நான் அடையாளம் கண்டுபிடிச்சுட்டேன். எங்க தூரத்து உறவுப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இருக்காரு அவர்.

"நீ அவனைப் பார்த்தவுடன் கத்தினியா?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம் ஸார்! கத்தினேன். மூர்ச்சையாகிட்டேன். இப்போ அந்த ஆளைப் போய் போலீஸ் ஸ்டேஷன்லே ஒப்படைக்கப் போறேன்.

ஒரு கணம் நின்றார். "ஏம்மா! சொந்தக்காரியினுடைய புருஷன் என்கிறியே. நாளைக்கு கேஸ் ஆச்சுன்னா என்ன ஆகும்?" என்று கேட்டார்.

"ஸார்! அதைப் பத்தி கவலைப்படல்லை. அவனைப் பழி வாங்கணும். இல்லாட்டி திரும்ப எனக்கு அவனைப் பத்தி ஒரு கவலை தோண ஆரம்பிச்சிடும். அவன் இப்ப என்னைத் தெரிஞ்சுக்கிட்டு திரும்ப என்னைக் க்ளோஸ் பண்ண வந்தாலும் வருவான். அந்தக் கவலை எப்போதும் என் மனசிலே நிற்கும். அதனாலே அவன் முந்திக்கறதுக்கு முன்னாலே அவனைப் பிடிக்கணும்!" என்றாள் அவள்.

✠✠✠

# 9

மாடியில் நிர்மல் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

இந்த வாழ்க்கையைத் தொடரலாமா? என்று மனம் கேட்டது.

நேராக பாமாவிடம் அவளை அப்படியே வடக்கே எங்கேயாவது அழைத்துப் போய் பம்பாயிலோ டெல்லியிலோ தங்கி வாழலாம். ராணுவத்தை விட்டும் ஓடிவிடலாம் என்றும் தோன்றியது.

வாசலில் கதவு தட்டப்பட்டது.

கீழே இறங்கிக் கதவைத் திறந்தான்.

''நீ தானே மிஸ்டர் சேகர்!'' என்று வாட்ட சாட்டமான மனிதர் ஒருவர் உள்ளே நுழைந்தார்.

அவரை அடுத்து இருவர் வெளியே காத்திருந்தார்கள்.

"ஆமாம். வாங்க. வாங்க!" என அழைத்துப் போனான் அவன்.

உட்கார்ந்தார்கள்.

"மிஸ்டர் சேகர்! நீங்க ஏழு வருஷத்துக்கு முன்னாலே ஒரு பாசஞ்சர் ரயில்லே வந்தீங்க. ஞாபகம் இருக்கா? என்று கேட்டார்.

திடுக்கிட்டான் அவன்.

"ஸார். அது எத்தனை வருஷமாச்சு. அதெல்லாம் எப்படி ஞாபகம் இருக்கும்."

''ஞாபகம் இருக்கும்படியாக சமாச்சாரம் நடந்திருக்கு!'' என்றார் அவர்.

''ஸார், நீங்க யார்?'' என்று ஒரு கேள்வியை இடைமறித்து கேட்டான்.

அந்த திடமான மனிதர் தமது பையிலிருந்து ஒரு அடையாளக் கார்டை எடுத்துக் காண்பித்தார்.

அதில் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று தெரிந்ததும், அவனுக்கு சர்வ நாடியும் ஒடுங்கி விட்டது.

''எஸ் ஸார்! நான் என்ன செய்யணும்?'' என்று பதட்டத்துடன் கேட்டான்.

"அன்னிக்கு ராத்திரி ரயில் அந்த சின்ன ஊரிலே நின்னுடுத்து. அதுக்கப்புறம் போகலை."

"ஆமாம் ஸார்."

"உங்க எதிரிலே இரண்டு சிறிய பெண்களும், ஒரு பெண்மணியும் உட்கார்ந்திருந்தாங்க.

"ஞாபகம் இருக்கா?"

"ஞாபகம் இருக்கு சார்!" என்று கூறினான் சேகர்.

''அதுக்கு பிறகு அந்த இரண்டு பெண்கள், நீங்கள்தான் அந்த அடைப்பில் இருந்தீங்க."

"ஆமாம் ஸார்."

"நீங்க அப்புறம் ரயில் நின்னவுடனே பஸ்ஸிலே போயிடலாம் என்று சொல்லி அந்த பெண்களை அழைச்சுக்கிட்டுப் போனீங்களா?"

திடும் என்று மனசில் ஒரு சத்தம் எழுந்தது.

இதுக்கு என்ன பதில் சொல்வது? "ஸார் ஞாபகம் இல்லை ஸார்!" என்றான்.

"இதைப் பாருங்க. எங்கிட்டே உண்மை எல்லாம் சொல்லிடணும். இல்லாட்டி உங்களுக்குப் பெரிய பாதகம் ஏற்படும்."

"ஏன் ஸார். சொல்லுங்களேன்!" என்றான் அவன்.

"நான் சொல்லணுமா? நீங்கதான் செய்ததைச் சொல்லணும்."

"நான் என்ன செய்துட்டேன்?"

"அநியாயத்தைச் செய்தீங்க! ஞாபகம் இருக்கா? அந்தப் பெண்களை அழைச்சுக்கிட்டு இருட்டு வழியாப் போனீங்க!"

"சத்தியமா நினைவில்லை ஸார்."

"பெண்ணைக் கொன்னதுகூட நினைவில்லையா?"

"ஓ! மைகாட். நான் எதுவும் செய்யலை ஸார்."

"இந்தாப்பா! ஐயாவை அழைச்சுகிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வாங்க! பார்த்துக்கலாம்!" என்று கூறினார் திடமான ஆசாமி.

இப்படி ஒரு கஷ்டம் வரும் என்று யார் எதிர்பார்த் தார்கள்?

போலீஸ் சிறையில் நிர்மல் மனம் புழுங்கியது. சாதாரணக் குற்றமா அவன் மீது சுமத்தப்படுகிறது? கொலைக் குற்றம்.

நிரூபணம் ஆகிவிட்டால் நிச்சயம் மரண தண்டனை.

அதுவும் ஒரு டீன் ஏஜ் பெண்ணை மானபங்கம் படுத்தி, பிறகு அவளது தூய்மை பறிக்கப்பட்டபோது கொலை நடந்திருக்கிறது.

ஆகா! எப்படி வசமாக மாட்டிக் கொண்டோம்?

பாமா மீது ஆசைப்பட்டு அவளை அடைவதற்கு ஆயிரம் பொய் சொல்லிவிட்டு,

ஒரு சொர்க்க வாழ்வை அடைய விரும்பினோமே!

அது எவ்வளவு பெரிய பாவம்?

கடவுளோ, தர்மமோ இல்லை என்பதுபோல் காரியங்களைச் செய்கிறோமே.

அது எவ்வளவு பெரிய தவறு.

இப்போது, தர்மம் அல்லது நீதி அவனை எங்கே வந்து எப்படிப் பிடித்திருக்கிறது?

கண்ணில் நீர் உருண்டு வந்தது.

இப்போது இந்தச் சிக்கலில் இருந்து எப்படி விடுதலை அடைவது?

இந்த நிலையில் பாமா வந்து அவனைப் பார்த்தால் என்ன பேச முடியும்?

வேஷம் போட்டதைச் சொல்லி மன்னிப்பு கேட்க முடியுமா?

**ப**த்திரிகைகளும், டிவிக்களும் அனுமதி வாங்கி நிர்மலின் படங்களை எடுத்து வெளியிட்டன.

ஒரு ஹீரோவுக்குக் கிடைக்காத விளம்பரம் அவனுக்குக் கிடைக்கிறதே.

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு அவன் அழைத்துச் செல்லப்பட்டான்.

அங்கே ஏகப்பட்ட கூட்டம் காத்திருந்தது.

போலீஸார் ஏழு வருடங்களுக்கு முன் நடந்த கொலையை விவரித்து, இப்போதுதான் குற்றவாளி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறான் என்பது தெரிய வந்துள்ளது என்று கூறினார்கள்.

இரண்டு பெண்களில் ஒருத்தி இறந்து விட்டாள்.

இன்னொரு பெண் சித்தப் பிரமை கொண்டு விட்டாள். நடந்த கோரத்தை நேரில் பார்த்தவள்.

அவள் மூளை பிசகி விட்டது.

எனினும் குற்றவாளியை நேரில் பார்த்ததும் ஆச்சரியமாக அவனைக் கண்டுபிடித்தாள்.

அது மட்டுமல்ல, கனம் நீதிபதி அவர்களே,

அன்று நடந்த விஷயம் முழுவதையும் வெகு துல்லியமாக விவரித்து விட்டாள்.

எனினும் நாங்கள் அவள் பேசியதை உடனே எடுத்துக் கொள்ளவில்லை.

அவள் குறிப்பிட்ட ரயில் நிலையத்திற்கு அழைத்துக் கொண்டுபோய், நடந்தவைகளை விவரிக்கச் சொன்னோம்.

அவளும் முழு விவரம் சொன்னாள்.

ரயில் மேலே போகாது என்று அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட குற்றவாளி பஸ்ஸில் போகலாம் என்று கூறியது.

இருவரும் சம்மதித்தது.

பிறகு பிளாட்பாரம் முழுதும் நடந்து இருட்டில் சென்று மேடு அருகில் சென்றது. எல்லாம் கூறினது மட்டுமல்ல,

எங்களுடனேயே வந்து காண்பித்தாள்.

அவள் காட்டிய இடத்தில்தான் இறந்துபோன பெண்ணின் சடலம் ஏழு ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே, இந்தப் பெண் சொல்வது உண்மை என்று தெரிந்து விட்டதால்,

இன்னும் விசாரணை நடத்த குற்றவாளியை போலீஸ் கஸ்டடியில் இன்னும் பதினைந்து தினங்கள் இருக்குமாறு அனுமதிக்க வேண்டும்.

போலீஸ் தரப்பு முடிந்ததும் நிர்மல் எழுந்து,

கனம் கோர்ட்டார் அவர்களே! நான் சேகர் அல்ல! சத்தியம் என்று கூறப் போக,

மாஜிஸ்ரேட், இந்தா அதை எல்லாம் இங்கே சொல்லாதே! முழு விசாரணை வந்தபோது தெரிவி! என்று கூறினார்.

நிர்மலுக்கு அழுகையாக வந்தது.

நான் சேகர் அல்ல! நிர்மல்! என்று புலம்பினான்.

போலீசார் அவனை நெட்டித் தள்ளிக்கொண்டு போனார்கள்.

**ந**டந்ததை விவரித்த பத்திரிகைகளும், பத்தி பத்தியாக எழுதிவிட்டு,

அடுத்தபடி பாமாவை பேட்டி காண ஓடின.

கதவைத் தாளிட்டுக் கொண்டு பாமா உள்ளே திகிலோடும், அழுகையோடும் இருந்தாள்.

ஆனால் எத்தனை நேரம்தான் அவள் அந்த முற்றுகையைத் தாங்க முடியும்.

அக்கம் பக்கத்தார் அவளிடம் சன்னல் வழியே பேசினார்கள்.

"ஏம்மா கஷ்டப்படறீங்க? உங்களுக்குத் தெரிஞ்சதை சொல்லுங்க!" என்று வற்புறுத்தினார்கள்.

சன்னல் வழியாகவே பாமா கூறினாள். காமிராக்கள் அவள் மீது, 'பளிச்' 'பளிச்' என்று அடித்தன.

"நான் குழம்பி இருக்கிறேன்! என் கணவர் மீது திடீரென்று பழி விழுந்திருக்கிறது. அவர் கணவர்தானா, இல்லையா என்று என்னைக் கேட்டு வதைக்காதீர்கள்.

நான் ஒரு வாரமாகத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

உள்ளே என் வயதான மாமியாரும் துக்கித்துப் போய் இருக்கிறார்கள்.

இந்தச் சமயத்தில் நீங்க என்னை விட்டுப் போவது நல்லது.

நான் ஒரு பெண்.

என்னால் எதுவும் தாங்க முடியவில்லை என்றால், மன விரக்தியில் ஏதாவது செய்துகொண்டு விடுவேன்.

அதுக்காகவாவது, தயவு செய்து மேலும் எந்தக் கேள்விகளும் கேட்காமல் போய் விடுங்கள்!"

என்று சொல்லி சன்னலை அடைத்தாள்.

அந்தக் கேசின் விபரங்கள் அடுத்த இரண்டு நாட்களில் பத்திரிகைகளில் வெளியாகின.

ஏழு வருடம் கழிந்த பிறகு கொலைகாரன் பிடிபட்டான் என்று செய்திகள் விளம்பரப்படுத்தின.

சேகர் என்பவன்தான் அந்த ஆள் என்றும், அவன் மிலிடெரியில் சேர்ந்ததால் அவனை இதுவரை பிடிக்கவில்லை என்றும் இப்பொழுது அவன் திரும்பி வந்ததும் அவனை ஒரு பெண் அடையாளம் கண்டுபிடித்து விட்டாள் என்றும் பெரிசாகப் போட்டிருந்தன.

போலீசார் வித்யாவை கொண்டு சேகரை அடையாளம் காட்டச் சொன்னார்கள்.

அவள் சரியாக அடையாளம் காட்டி விட்டாள்.

எனவே கேஸ் தொடரப்பட்டது.

வித்யா ரகசியமாக வைத்திருந்த ஒரு துணிப் பையில் அதில் இருந்த ஒரு வெற்றுக் காகிதத்தை போலீசிடம் ஒப்படைத்தாள்.

அந்த இரண்டையும் தான் அந்தப் பழிகாரனிடம் இருந்து ஓடும்போது கிழித்துக் கொண்டு சென்றதாகக் கூறினாள்.

அந்தக் கடிதத்தில் அந்தக் கயவன் சேகர் என்பவன் சில வரிகள் எழுதியிருந்தான்.

அவனுடைய கையெழுத்தும் சேகர் வீட்டில் அவன் ஏற்கனவே எழுதியிருந்த வரிகளும் ஒத்துப் போகிறதா? என்று பார்த்தார்கள்.

அவை ஒத்துப் போய் விட்டன என்று தெரிந்தன.

எனவே எல்லாத் தடயங்களும் அவனைக் குற்றவாளி என்று சொல்லும் அளவுக்கு, விபரங்கள் பத்தி பத்தியாக பத்திரிகைகளில் கொடுக்கப்பட்டிருந்தன.

கேஸ் பதிவாகி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு வந்தபோது பத்திரிகைகள் மேலும் ருசிகரமான தகவல்களை வெளியிட்டன.

குற்றவாளி தன்னை 'சேகர்' இல்லை என்று இப்போது சொல்கிறான் என்றும், உண்மை சேகர் காஷ்மீரில் குண்டு அடிபட்டு இறந்து விட்டதாகக் கூறுகிறான் என்றும் செய்திகளை வெளியிட்டன.

ஆச்சரியமான முறையில் ஒரு பரபரப்பு தரும் கேஸாக அது மாறி விட்டது.

ஏனெனில் குற்றவாளி சேகர் இல்லை என்றால், பாமா எப்படி அவனைத் தன் கணவன் சேகராக ஏற்றுக்

கொண்டாள். ஒரு மனைவியால் தன் கணவன் உண்மைக் கணவன்தான், போலிக் கணவன் அல்ல என்று கண்டுபிடிக்க முடியாதா?

இரண்டையும் வைத்து பத்திரிகைகள் சில ஊகங்கள், ஹேஷ்யங்கள் எல்லாம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

எனவே மேல் கோர்ட்டுக்கு கேஸ் வந்தபோது வழக்கத்தைவிட அதிகமான சுவாரஸ்யத்தைப் பத்திரிகைகள் காட்டின.

பத்திரிகை வாசகர்களிடம் பெரிய பரபரப்பு கிளம்பி விட்டது.

கோர்ட்டில் தினசரி விசாரணைகளை பத்திரிகைகள் பத்தி பத்தியாகப் பிரசுரித்தன.

மக்களும் ஆர்வத்துடன் வாங்கிப் படித்தார்கள்.

'வித்யா குற்றவாளியை ஐயம் இல்லாமல் கோர்ட்டில் சுட்டிக் காட்டினாள்' என்று செய்திகள் வெளிவந்தன.

பாமாவிடம் விசாரிப்பை வாசகர்கள் ஆவலோடு அறியக் காத்திருந்தார்கள்.

✠✠✠

# 10

ஒரு புதன் காலையில் விசாரிப்பு ஆரம்பித்தது.

நீதிபுதியே பாமாவைப் பார்த்து கேட்டார்.

"மேடம்! உங்கள் வாக்குமூலம் எங்களுக்கு மிக முக்கியம். இதோ இந்தக் குற்றவாளியைப் பாருங்கள்! இவர்தான் தங்கள் கணவரா?"

பாமா அழுகையோடு குற்றவாளியைப் பார்த்தாள். தீர்க்கமாகப் பார்த்தாள். கோர்ட்டில் பெரிய நிசப்தம்.

"கனம் நீதிபதி அவர்களே! இவர் என் கணவன் அல்ல! சத்தியமாக" என்றாள் அவள்.

'ஆ' என்று ஒரு மெல்லிய இரைச்சல் கோர்ட்டில் ஓடியது.

"ஏன் இப்படி சொல்றே? அவரை தண்டனையில் இருந்து விடுவிக்கவா?" என்றார் நீதிபதி.

"இல்லை ஸார். அவன் என் கணவர் இல்லை என்று நிச்சயமாகத் தெரியும்."

"பின் ஏன் கணவர் என்று எடுத்துக் கொண்டீர்கள்."

"கனம் கோர்ட்டார் அவர்களே! எனக்கு சில நிமிடங்கள் அனுமதியுங்கள்! இவர் என் கணவர் அல்ல. என் கணவரைப் போல் தோற்றம் உள்ளவர். இதை நான் இவர் இங்கே வருவதற்கு முன்பாகவே அறிவேன்."

"எப்படி?"

"என் கணவர் இறந்து விட்டார் என்று ராணுவம் அனுப்பிய தந்தி முன்னால் வந்து விட்டது."

"உண்மையா?"

"இதோ அந்தத் தந்தி." (காட்டினாள் அவள்.)

"ஆனால் இதை நான் என் மாமியாரிடமிருந்து மறைக்க விரும்பினேன். ஏனெனில் கிராமத்தில் ஒரு விதவை படும்பாடு உங்களுக்குத் தெரியும். அவள் ஒரு உணர்ச்சியற்ற பிணமாகத்தான் வாழ வேண்டும்! வேறு விமோசனம் கிடையாது. எனக்கு அந்தத் துர்க்கதி ஏற்படுவதைத் தடுக்கவே அப்படிச் செய்தேன்!"

பின்னால் மாமியார் மறைந்து, அந்தச் செய்தி தெரிவிக்க வேண்டிய காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.

"குற்றவாளியை ஏன் கணவராக ஏற்றுக் கொண்டீர்கள்?"

"அசப்பில் அவர் என் கணவராகத் தோன்றினார்."

"நான் உணர்ச்சிவசமாக அவரைப் போய்க் கட்டிக் கொண்டேன்."

ஆனால் அடுத்த நிமிடமே என் கணவர் இறந்து விட்டாரே என்ற நினைவும் எனக்குத் தோன்றி விட்டது.

அவரை நான் ஏற்கும்போது அவர் என் கணவராக நடிக்க விரும்புகிறார் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

எனக்கு அது பெரிய நிம்மதியாகப் போயிற்று. முடியுமானால் அவர் என் கணவர் என்றே எல்லோரையும் நம்ப வைத்து, வாழ்க்கை முழுதும் என் கணவராகவே மாற்றிவிடத் தீர்மானித்தேன்.

என் திட்டம் நன்றாகக் கூட நிறைவேறியது. ஆனால் துரதிருஷ்டம் என் உண்மைக் கணவர் ஒரு கொலைக் குற்றம் செய்திருந்ததால் என் திட்டம் முறியடிக்கப்பட்டு விட்டது.

இந்தக் கொலைக்கு உரிய தண்டனையான மரணத்தை என் கணவர் அடைந்து விட்டார்.

கூண்டில் நிற்கும் இவர் குற்றவாளி அல்ல! என் கணவரும் அல்ல! அவரை விடுதலை செய்யுங்கள்! இதனால் என்னை தரக்குறைவான மனைவியாக நினைக்காதீர்கள். நான் ஒரு இளம் பெண். வாழ்க்கையை வாழ முயன்றேன். விதி என்னை வஞ்சிப்பதை எதிர்க்கத் துணிந்தேன். அவ்வளவுதான்!"

கோர்ட்டில் பெரிய ஆரவாரம் எழுந்தது.

மேலும் இராணுவத்திலிருந்து சில சாட்சியங்கள் சில தினங்களில் கிடைக்க நிர்மல் விடுதலை செய்யப்பட்டான்.

தனது நன்றியைத் தெரிவிக்க பாமாவிடம் ஓடோடிப் போனபோது அவள் சோபாவில் சாய்ந்து கிடந்தாள்.

"பாமா! ஸாரி! அந்தப் பெயரைச் சொல்லக்கூட எனக்கு அருகதை இல்லை. என் வாழ்க்கையில் சிறிதளவாவது எனக்கு சுகம் கிடைச்சது என்றால் உங்களால் தான். இருந்தாலும் நான் செய்ததை. . . பாமா இது என்ன?"

திடுக்கிட்டு அவளைக் கையில் பற்ற முயன்றான்.

"ஸாரி! நிர்மல். . . எனக்கு ஒரு விரக்தி வந்தாச்சு!. . . நான் வாழ விரும்பலை. ஸயனைட் சாப்பிட்டாச்சு."

"ஐயோ. . . பாமா. . ."

"ஸாரி நிர்மல்! கோர்ட்டில் பேசிய அன்றே இறந்திருப்பேன்! ஆனால் நீங்கள் விடுதலையாகிறவரை

நிச்சயம் என் உதவி தேவைப்படலாம் என்று மேலும் சில தினங்கள் காத்திருந்தேன். என்னை மன்னியுங்கள்! நான் ஸயனைட் மாத்திரை சாப்பிட்டாச்சு. எனக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்!" என்று கடைசி வார்த்தையாகச் சொன்னாள் அவள்.

- நிறைந்தது -

26258

கிளை நூலகம்
நாள் :
106.